ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"

"நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுவரு ஆனிமீ கஉ (14-6-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—சஎ.

## தோத்திரம்.

உள்ளமே நீங்கா என்னைவா வாவென் றுலப்பிலா ஆனந்த மான
வெள்ளமே பொழியுங் கருணைவான் முகிலே வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப் பாலிப்ப துன்னருட் பரமே

—தாயுமான சுவாமிகள்

## தேகப் பயிற்சி.

(திருச்செந்தூர்,
திரு. மு. கிருஷ்ணசர்மா அவர்கள்)

(முற்றொடர்)

ஏனிந்தப் பேரையும் உற்று — வறி
தின்னல் அடைந்து வருந்துகின் றீர்கள்
ஆனந்த மாகப்பெண் டீர்கள் — உயர்
வாகும்முன் னேற்றம் தடைபுரி யாதீர். (தேக)

நீவிர் கருதிய வாறு — நலம
னேரிழை யார்சிறி தின்னல்செய் தாலும்
மேவலர் போற்றடி தாங்கி — உயிர்
வீய அடித்துச் சிறைசெய்கு வாரோ. (தேக)

மாவரைக் கப்பணிப் பாரோ — பரி
மாவின் கசையினிற் சுண்டுவர் கொல்லோ
வேவ வுருப்புழுச் சோற்றைத் — தினம்
மெல்லுவிர் என்றடி யானுதைப் பாரோ. (தேக)

காறி முகத்துமிழ் வாரோ — இரு
காலினிற் கையில் விலங்கி டுவாரோ
வேறுள தீமைகள் யாவும் — சொல்லின்
விம்மி விம்மியழு வீரெனச் சொல்லேன். (தேக)

ஆயிழை யார்ச்சொலல் என்னே — நம
தாடவர் தாமும் பயிற்சிசெய் வாரோ
தூய ·ணுவினைத் துய்த்துப் — பகற்
றூங்குத லேதம் கடனெனக் கொண்டார். (தேக)

மேலை அமுக்கற் கொருத்தன் — அவர்
வேட்டி துவைத்திட மற்றும் ஒருத்தன்
வேலை மிகச்சிறி தேனும் — அதை
வேண்டிப் புரிதற் கொருத்தனு முள்ளான் (தேக)

வீட்டுப் பணிசெய்கு வோரை — ஒரு
வேளையும் ஒய்வு கொடாது வருத்தி
வாட்டிய பாவம்கம் செல்வர் — உடல்
வன்மை அகற்றித் தரும்பல நோயே. (தேக)

வீர உருஷிய நாட்டார் — உடல்
வேலைசெய் வோரை மதிக்குங் கருத்தால்
பாரச்சம் மட்டிருந் தாலம் — கட்டைப்
பாரையும் தங்கொடி மீது வரைந்தார். (தேக)

கோடரி சம்மட்டி வாய்ச்சி — அரம்
குத்துலக் கையுளி மண்வெட்டி பாரை
ஓடுங் கலப்பை இவற்றைக் — கையில்
உற்றுழைப் பாருடல் வச்சிரம் ஆமால். (தேக)

வெள்ளையர் ஆடவர் தாமும் — அன்றி
மெல்லிய லார்களும் தம்மெய்ப் பயிற்சி
தள்ளுங் கிழப்பரு வத்தும் — செயல்
தான்கண்டும் நீர்பயி லாதிருப் பீரோ. (தேக)

பந்தெறி வார்அவர் மேலும் — பரிப்
பந்தயம் வைத்துக் கடிதினில் ஊர்வார்
விந்தைகொள் நர்த்தனம் செய்வார் — பெரு
வெட்ட வெளிகளில் ஓடிக் குதிப்பார். (தேக)

மூவுல கும்புகழ் கெய்சர் — இந்த
மூப்பின் எழுபதின் மெய்ப்பயிற் சிக்குக்
காவின் மரங்களை வெட்டி — எரி
கட்டைக ளாக்கிப் பயன்பெறு வாரே. (தேக)

ஆடுங் கிழவர்தம் பெற்றி — இது
ஆயி னிளைஞர்க் குறித்தெவன் சொல்வாம்
பாடிடும் கன்னிகை காளை — இவர்
பல்வகை யான்மெய்ப் பயிற்சி செய்வாரே. (தேக)

பூவி லுடைமைஎல் லோர்க்கும்—பொது
என்று புகன்ற குடியர சாங்கக்
காவல ளும்லெனின் யாவும் — தொழில்
கண்டுசெய் வாரெனக் கற்றவர் சொல்வார். (தேக)

ஓர மரிக்கர்முன் னாளிற் — புகழ்
உற்ற லெனின்றனைக் காண வருங்கால்
பாரை கரத்தினிற் றாங்கிப் — புகைப்
பண்டியின் பாதை திருத்தினர் என்பார். (தேக)

சத்திரம் தோறுமுண் சோம்பர் —மறை
சாத்திர மென்றுபொய் சாற்றியுண் சோம்பர்
எத்தியுண் பல்வகைச் சோம்பர் — இவர்
யாருமண் தொட்டுண்ப தன்மையி லென்று. (தேக)

ஏனையர்க் கோர்சிறி தேனும் — பயன்
இன்றிக் களித்துண்ணும் மன்னரும் போலீ
ஞானி யருஞ்சுமை தூக்கித் — தங்கள்
நாள்கழிப் பாரினி மேலெனத் தேர்ந்து. (தேக)

நெற்றியின் வேர்வை நிலத்தில் — உக
நேர்ந்துழைப் பார்தமக் கேயுண வல்லால்
கொற்றவ ராயினும் சோம்பின் — றுளி
கூழும் பெறார்வரு நாளிலென் றோர்ந்து. (தேக)

அங்கிலை வந்ததுறும் என்றல் — என
தாவர்க்க னுவன்று மேல்வரும் மாற்றம்
தன்னை நுணித்துணர் மேதா — வியர்
சாற்றி மகிழ்ந்தமை கேட்டுரைத் தேனல். (தேக)

அங்கிலைக் கேற்பநம் மெய்யைத் — தொழில்
ஆற்றத் தகும்வகை நன்கு பயின்றிர்
எங்கிலை வந்துறு மேனும் — சற்றும்
ஏக்க முறாது களித்திட லாமே. (தேக)

—"தனவணிகன்" பொங்கல் மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமறிவாய் உளப்பறிவாய் நான் ஏழை, தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

# வியாபார தேவதாரு

# வனங்கள் பதிவுசெய்யப்பட்டன

இப்பத்திரிகையை வாசிக்கும்போது இக்கடுதாசி எப்படி, எங்கே உண்டாக்கப்படுகின்ற தென்பதைப்பற்றியும் இதை இன்னும் உண்டாக்குவதற்குப் போதிய அளவு தொழிற்படாத பொருள்கள் இருக்கின்றனவா வென்பதைப்பற்றியும், நீர், எப்பொழுதாவதுசிந்தித்ததுண்டா. அப்பொழுதுதான் மரமும், மரச் சோத்தியும் தற்கால நாகரீக வைபவத்தில் எத்துணை முக்கிய அம்சமாகத் தொழிற்படுகின்றனவென்பதையும் இதில் பணம் முதலிடுவதினுல் எத்துணை லாபமுண்டு என்பதையும் உணருவீர்.

இப்பணமுதலீடு மிகப்பிரயோசனமுள்ளதும், 680 தீவிரவளர்ச்சியுடையதும் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாத முடையதுமான தேவதாருமரங்களைக்கொண்டசொரியலான ஒரு ஏக்கர் நிலத்தைக் குறிக்கும்.



உலகின் எல்லாப்பாகங்களிலுமுள்ள அதி தீவிர சித்தமும் மிக்க உபாயமும் உள்ள வியாபாரிகளினுல் இது வரையில் 500000 தங்கப்பவுண்கள், வியாபாரவளர்ச்சிச் சாதனங்களில் முதலிடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நீங்கள் மிக்க சாவதான மானவும் செட்டானவும் பழக்கங்களிற் பேர்பேனவர்கள். ஆகவே இன்னும் மேலதிகமாக இதைப்பற்றி நீங்கள் விசாரிப்பீர்களானுல் இப்பணமுதலீடு உங்கள் மனதைக் கவரவேண்டும். கவரும்.

ஒவ்வொரு சாதனமும் எடுக்கும்போது ரூ. 67 ச. 50ம் பின் 30 மாசங்கட்கு மாசாமாசம் ரூ. 13 ச. 50 கட்டவேண்டிய தோன்ருகும்.

மதிக்கப்பட்ட வரும்படி 2000 ரூபா முதல் 4500 ரூபா வரையில் ஒவ்வொரு 10—12 வருடங்கட்கும்.

“நியூஸிலண்ட்” நாட்டிலேயுள்ள வனம் 6-கோடியே 30 லட்சம் ஏக்கரிலிருந்து 1 கோடியே 20 லட்சம் ஏக்கராகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த மரக்குறைவை நிவிர்த்தி செய்வதற்குப் புதிதாகச் செய்கைபண்ணப்படும் வனம் 50 லட்சம் ஏக்கர் நடப்பட வேண்டியது அவசியம்.

இச்சங்கத்தின், இலங்கையின் பிரதான காரியாதிகாரி இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கின்றனர். அவர் சாதனங்கள் புதிதாகச் சேருபவர்களுக்குக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணக்காரியாலயத்திற்கு எழுதினுல் அவர் சந்தோஷமாக உங்களை வந்து சந்தித்து இவ்வியாபாரத்தைப்பற்றி இன்னும் நன்கு விளக்குவார். அவர் வருவதினுல் நீங்கள் எவ்வித கடமையும் உடையவர்களாகமாட்டீர்கள்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

தொழிலிலிருந்து இளைப்பாறியபின்னர் இப்பணமுதலீட்டின் பலனை அனுபவியுங்கள்.

உங்கள் குழந்தைகட்காக.

அவர்களுக்கு நல்ல கல்வியூட்டுவதற்கு நிச்சயம் பண்ணிவைத்தல் ஒவ்வொரு பெற்றாரின் பெருமையும் கடமையுமாகும்.

## “ரீ. பி. எவ்.” சாதனங்கள்

நஷ்டம்தராதபடி பத்திரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள்.

இலங்கையின் பதிவுபண்ணப்பட்ட காரியாலயம் :-
ஹொங்கொங் வங்கிக் கட்டிடம்,
கொழும்பு.

யாழ்ப்பாணம் காரியதரிசி
சுப்பிரமணியம்-நாகலிங்கம்
நெடுந்தெரு, காங்கேசன்துறை

10-5-36.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பத்திரக்கிரயம்.
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
ஜீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழ கேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான
விளம்பரங்களுக்குச்
சலார் வேறு.

தொகுதி—௬. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுவரு ஆனிமீ ௧௨ (14-6-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி ௬௫

## ‘ஒருவாசகமென் றுணர்.’

(திரு. அ. சிவபாதம் அவர்கள்)

(முற்றொடர்)

### மூவர் தமிழ்

அறிஞர்கள் நாடகமேடையைப் பார்த்திருத்தல் கூடும். அங்கு ஒரு நடிகரே பலவேறு நாடக பாத்திரங்களாய்த் தோற்றி நடிப்பதையும் பார்த்திருப்பாரென்பது. அஃதே போல் இறைவன் ஒருவரென்பதும், அவர் அடியாருள்ளத்து பல்வேறு காலங்களில் பல்வகைக் காட்சியளித்தாரென்பதும், நமதுசமய நூற்றுணிபு. அக்காட்சிகளே பல இறை வழிபாடுகளாயின. பல உருவத் திருமேனிகளன்றி, ஆன்மாக்களுக்கு அருள்செய்யுமிடங்களும் பலவாயின. இடங்கள் பலவாயினும் இருதய கமல சிதாகாசமாகிய திருச்சிற்றம்பலமே சிறந்ததென்பது. இவ்வுண்மைகளே மூவர் தேவாரங்களிற் பொதிந்துகிடக்கின்றன என்பது. என்னை? மூவரும் ஆதிபகவனாகிய சிவனை முன்னிலைப்படுத்தியன்றி, வேறு உருவத்திருமேனிகளை முன்னிலைப்படுத்தித் தேவாரமோதாமையானும், தேவாரம்ஓதத் தொடங்கும்போதும் ஓதிமுடிக்கும் போதும் “திருச்சிற்றம்பலம்” எனச் சொல்வதன்றி வேறுதலங்களின் நாமங்களைச் சொல்லாமையானும் என்பது. ஒவ்வோருதாரணமுகத்தானிவைகாண்டும்.

“கற்றுங் கரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே”

—ஞானசம்பந்தர்

“வில்லை வட்டப் படவாங்கி யவுணர்தம், வல்லை வட்டம் மதில்மூன்றுடன் மாய்த்தவன், தில்லை வட்டந் திசைகைதொழுவார்வினை, ஒல்லை வட்டங்கடந் தோடுதலுண்மையே.

—நாவுக்கரசர்

“மடித்தாடு மடிமைக்க ணன்றியே முன்னேநீ வாழுநாளுந், தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வன், கடுத்தாடுங் காதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாப்பும், பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே”

—ஸ்ரீசுந்தரர்

இவற்றால் மூவர்தமிழும் பேரருட்பிழம்பாகிய சிவபிரானையே குறிப்பதென்பதும், அச்சிவனும் திருச்சிற்றம்பலத்தில் வெளிப்பட்டு அருள்செய்வாரென்பதும் துணிபாயிற்று.

### முனிமொழி

“ஆகாசசரீரம் பிரமம்” எனவும், “சத்தியான்ம பிராணாராமம்” எனவும், “மனஆனந்தம்” எனவும், “சாந்திசமிர்த்தமமிர்தம்” எனவும் சுருதிகள் கூறின. நாற்புறத்தும் பிரகாசித்தலின் ஆகாயம் சிதம்பரம் எனப்படும்; பூதாகாசம் அன்று, விசேடமின்மையின் சமஸ்த உலக அண்டங்களின் தொகுதியாகிய குமிழிக்கூடங்கள் தோன்றப் பெறும் இரத்திநாகரமாகிய பரப்பிரகிருதிரூப பராசத்தியே சிதம்பரமெனப்படும். இந்தப் பிரகாசரூபத்தையுடைய பிரமம் ஆகாசசரீரம் (என்று கூறப்படுகின்றது) சிதாகாயம் பரமக்ாரணமாதல் (தைத். க. ரு. உ.)

“இச்செந்துக்களனைத்தும் ஆகாயத்தினின்று உற்பத்தியாகின்றன. ஆகாயத்தில் ஒடுங்குகின்றன” (சாந். க. கூ. க.)

“இன்றேற் பரமானந்த விக்கிரகரும், புருஷரும், கிருஷ்ணபிங்களருமாகிய பரப்பிரம சிவபிரானைக் குருவுபதேசத்தினால் அப்பியாசித்து, கார்க்கியே! பெரியோர் பிரமபுரத்துத் தகரபுண்டரீகாம்பரமத்தியிலே காண்கின்றனர். நீயும் அங்ஙனமே செய்” என்று (யோகயாஞ்ஞவற்கிய) ஸ்மிருதியினும் கூறப்படலான், பிரமம் தகரபுண்டரீகத்துளிருப்பதாயும், அது வழிபடற்பாலதாயும் கூறப்பட்டது. ஆகலின் பரஞ்சோதி சொரூபமுடையதும் முக்தர்களால் அடையற்பாலதும், உமை யென்னும் பராசத்தியோடிசைந்ததுமாகிய பரப்பிரமம் தகர புண்டரீக ஆகாயமத்தியிலிருப்பதும் அபகதபாப்மத்துவாதி குணங்களை இயல்பாகவுடையதும், உபாசிக்கற்பாலதுமா மெனச் சிந்தித்தது” என முனிமொழி சிதாகாசத்தில் தங்கருத்து கிடீ இயமை உணர்க.

### திருக்கோவையார்

மாணிக்கவாசக சுவாமிகளருளிய திருக்கோவை திருவாசகமும் மூவர்தமிழ் போலாதலை யாம் கூறாதே யுணர்தலமையும், திருக்கோவையார் தலைவன் தலைவியர்க்கிடையே நிகழும் அகப்பொருள்பற்றிற் கூறுவதாக வெளிப்படைப்பொருள் தோற்றுவதேனும் தலைவன் தலைவியர் உயிரும் இறையுமே என்பதும் அவ்விறை அருளாகிய இன்பம் புரியுமிடம் திருச்சிற்றம்பலமே யென்பதும் யாமுணர்தற்பாலது. உதாரணமொன்று காணுதும்.

“எலும்பா லணியிறை அம்பலத்தோனெல்லை செல்குறுவோர், நலம்பா வியமுற்றும் நல்கினும் கல்வரை நாடரம்ம, சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக் கேவிலை செப்பலொட்டார், கலம்பா வியமுலையின் விலை யென்நீ கருதுவதே”

என்னுஞ் செய்யுள் உடன்போக்கு என்னும் பகுதியில் “அருவிலையுரைத்தல்” என்னுந் துறைக்கு இலக்கியமா யமைந்தது. உலகவழக்கில் நிகழும் சிற்றின்பப் பொருள் நமக்கு இவ்விடத்து வேண்டாதது. பேரின்பப் பொருள்தான் யாதோ எனின்? “இன்பதனுக்கு அளவில்லையென்றது” அஃதாவது எலும்புகளை யணிந்த இறைவன் அம்பலத்தின்கணுளன், அவனை அறிவாலணுகுவோர் அகண்ட பரிபூரணராவர். என்றது; இறைவனோடெங்குமொக்க வியாத்தி யடைந்திருத்தல்.

### திருவாசகம்

மணிவாசகப் பெருமானருளிய திருவாசகத்தால் உணர்த்தப்படும் பொருள் சிவபெருமானென்பது. அது ஓதத்தொடங்கும்போதும் முடியும்போதும் திருச்சிற்றம்பலம் சொல்லப்படுவதும், அம்மணிவாசகர் சென்றடைந்தது அத் திருச்சிற்றம்பலத்தேயென்பதும் யாவருமறிந்தன.

“எம்பிரான் போற்றிவானத் தவரவர் ஏறுபோற்றி, கொம்பரார் மருங்குல்நங்கை கூறவெண் நீறபோற்றி, செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி,உம்பரா போற்றி என்னை ஆளுடை ஒருவ போற்றி”

என்னும் செய்யுளில் “கொம்பரார் மருங்குல்மங்கை கூற” என்பதனால் ஆதி பகவனாகிய சிவன் திருச்சிற்றம்பலத்தின் கணுளன் என்பதும் அவன் வழிபடற் பாலன் என்பதும் அவன் எம்மை ஆளாக உடையன் என்பதும் அறியப்படும்.

### திருமந்திரம்

அட்டமாசித்திகளும் பெற்ற யோகியரொருவர் சாத்தனூரில் கூடுபாயும் சித்தியால் தமதுயிரை மூலனுடலிற்சேர்த்துத் திருமூலராயெழுந்ததும், திருவாவடுதுறையில் சிவயோகம் புரிந்து ஆண்டுக்கொன்றாய் மூவாயிரம் திருமந்திரம் ஓதியதும், பின் கையிலையடைந்து பிறப்பற்று இறைவன் திருவடிநிழலை யடைந்ததும் அன்பர்களறிந்தன. திருமந்திரம் சிவாச்சிரமங்களைப்பற்றிக் கூறுவதென்பதையும், ஈற்றிலது திருச்சிற்றம்பல வழிபாட்டையே விதந்துரைக்கு மென்பதையும் ஒரு மந்திரத்துள காணுதும்.

“விம்மும் வெருவும் விழும் எழுமெய்சோரும், தம்மையுந் தாமறியார்கள் சதுர் கெடுஞ், செம்மை சிறந்த திருஅம்பலக் கூத்துள், அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே”

என்னும் மந்திரத்தினால் செம்பொருளாகிய சிவம் சிறந்துவிளங்கும். இருதய கமலமாகிய திருச்சிற்றம்பலத்துள் இடையீடின்றி இனபக் கூத்தாடும் அழகிய பொற்றாமரை மலரடிக்கண் அன்பு வைப்பவர்கள் உலகியலைநீங்கி ஆராவின்பமடைவரென்பது அறியப்படும.

இங்ஙனம் ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்பார்ப்பது போல், திருக்குறண் முதலிய நூல்களிலிருந்து ஒவ்வோர் பிரமாணமெடுத்துக் காட்டினேன். மற்றவைகளை முன்பின் மலைவற ஆராயவல்ல பெரியோர் எந்நூற்பொருளும் ஒரு வாசகமாதலைக் காண வல்லுநராவர். இக்கட்டுரை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்திநாதையரவர்கள் மொழிபெயர்த்த, ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியர் அருளிய சிவாத்துவித சைவபாடியம் என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டது.

இப்பொருள்பற்றிக் கட்டுரையெழுதுவதெனபது வட தென மொழிகளை எழுத்தெண்ணிக் கற்ற பெரும் புலவர்க்கே இயலுமென்பது யானறிவதொன்றாயினும், எனது பிழைபாடான ஆராய்ச்சிகாரணமாய் நன்முறையில் ஆராய்ச்சி நிகழ்த்த ஏனைய அறிஞர் முன்வருதல் கூடுமென்ற எண்ணம்பற்றியே தொடங்கினேன். என் சிற்றறிவுக் கெட்டியவரை ஒல்லும்வகை முயன்று எழுதிய இக்கட்டுரையில் அறிஞருலகு தக்கனகொண்டு தகாதன நீக்குமென் றெண்ணுகின்றேன்.

தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்
நச்சினார்க்கினியருரையுடனும்
வித்துவான் பிரமஸ்ரீ சி கணேசையர் அவர்கள்
எழுதிய உரைவிளக்கக் குறிப்புடனும்
கூடிய சீக்கிரம் வெளிவரும்
விலை ரூபா 4—00
தபாற்கூலி வேறு
இம்முயற்சிக்கு உதவிசெய்ய விரும்பும்
தமிழபிமானிகள் பிரதிகளுக்கு முற்பணம் உதவித் தங்கள் பெயரைப் பதிவு செய்வித்துக் கொள்வார்களாக.
முற்பணம் கொடுப்போர்க்குத் தபாற்கூலி யின்றி அனுப்பப்படும்.
நா. பொன்னையா
சுன்னாகம். ‘திருமகள்’ அழுத்தகம்

பிணியுடன் வறுமையும் இழிதொழிலுமுடையவரை முற்பிறப்பிற் கொலைசெய்தவரென்று பெரியோர் சொல்லுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 30,000,000 தேவை !

# சர்வகலாசாலை நிறுவக் காலந் தருமா?

## 20 வருடங்களின் முன் கண்ட சொர்ப்பனம்.

### பட்டதாரிகளின் பரிதாபம் ; கல்விமுறையா? காலக்குறையா?

"சாரதா'

**இலங்கைச் சர்வகலாசாலைப் பிரச்சினை மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது! காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் 20 வருடங்களின்முன் கண்ட சொர்ப்பனம் இனியாவது உண்மையாகுமா? இலங்கைச் சர்வகலாசாலை ஸ்தாபனத்துக்குரிய திடமான ஒழுங்குகள் தற்போதைய அரசாங்கசபையின் ஆயுள்காலத்துள் நிறைவேறுமா? அல்லது சமீபத்தில் நிறைவேறுமா?**

#### ஐந்து தேசாதிபதிகளின் ஆலோசனையைக் கவர்ந்தது

சேர் ஹென்றி மக்கலம் அவர்கள் தேசாதிபதியாக இருந்த காலந் தொடங்கி இலங்கைச் சர்வகலாசாலை ஸ்தாபன விஷயம் ஐந்து தேசாதிபதிகளின் ஆலோசனையைக் கவர்ந்து வந்தது. இது அண்மையில் உபயோககரமான உருவம் பெறுமென நம்ப இடமுண்டு.

இதுவேளை நமது தேசாதிபதியாக அமர்ந்திருக்கும் சேர் எற்வேர்ட் ஸ்ரப்ஸ் அவர்கள் இலங்கையில் இராசமாலிகிதராயிருந்தஞான்று இச் சர்வகலாசாலை நிறுவுதலின்பேரில் அளப்பரிய ஊக்கஞ் செலுத்தினர். இதற்கு அவர் "இலங்கையில் முதற்றரமான ஒரு சர்வகலாசாலையை உண்டாக்குவதே எனது உத்தேசம்" என்று சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுக்குக் கூறியது அத்தாட்சியாகும்.

தேசாதிபதி சேர் ஹியூ கிளிபர்ட் அவர்களும் இலங்கைச் சர்வகலாசாலைக்கு வாழ்த்துச் சொல்லத் தவறவில்லை. சர்வகலாசாலை நிறுவுதற்கான ஆரம்ப பிரயத்தனங்கள் அவருடைய பரிபாலன காலத்திலேதான் கைக்கொள்ளப்பட்டன.

#### அக்பார் சபை நியமனம்

1927-ம் ஆண்டில் (சொலிஸிற்றர் ஜெனரலாகவிருந்த) திரு. நீதாசனர் அக்பார் அவர்களின் தலைமையின்கீழ் சர்வகலாசாலை நிறுவுதலைக் குறித்த சகல காரியங்களையும் ஆராய்ந்து அறிக்கை செய்யும்பொருட்டு ஓர் பிரத்தியேகமானசபை நியமிக்கப் பெற்றது. அச்சபையார் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டிக்கொண்டபின், மகாவலிகங்கையை முற்புறமாகவும், அலைமோலசைந்துநிற்கும் பசியமலைகளைப் புழைக்கடையாகவும் கொண்ட தும்பறைப் பள்ளத்தாக்கே சர்வகலாசாலை ஸ்தாபனத்துக்குத் தகுந்த ஸ்தானமென அறிக்கை செய்தனர்.

தும்பறைப் பள்ளத்தாக்கு விஷக்காற்று மிகுந்த இடமென்றும், அங்கே கொசுச் சஞ்சாரம் அதிகமிருப்பதால், அது மலேரியாச் சுரத்துக்கு ஏதுவான இடமென்றும் நியாயங்கள் காட்டிப் பலரால் எதிர்க்கப்பட்டது. ஆனால், அது முற்றும் சௌகரியமற்ற இடமல்ல. அங்குள்ள இயற்கை வனப்புகளும், மலைச்சாரலினூடே ரீங்காரத்துடன் ஊர்ந்தூர்ந்து செல்லும் மகாவலியாற்றின் அழகும் அந்த இடத்தை மிகவும் அலங்கரிக்கின்றன. அன்றியும் அங்குள்ள சாந்தியும் அமைதியும் சற்போர்க்கு இன்றியமையாததே.

#### நிலையத்தைப்பற்றிய நிச்சயங்கள்

அக்பார் சபையார் தும்பறைப் பள்ளத்தாக்கே தகுந்த நிலையமென அறிக்கை செய்தபோதும், பொதுஜனப் பிரதிநிதிகளுள் சர்வகலாசாலை ஸ்தாபனநிலையத்தைப்பற்றிப் பல்வேறு நிச்சயங்கள் தோன்றின சிலர் கொழும்பில் புல்லேர்ஸ் வீதிக்கு அணித்தாயொரு இடத்தைத் தகுந்ததெனக் கருதினர். மற்றோர் சிலர்—(திரு. E. W. பெரேராவும், நமது கல்விமந்திரி கனம். C. W. W. கன்னங்கராவும்)—களுத்துறையில், காலுகங்கையோரத்தில் ஒரு இடத்தை நியமித்தார்கள்.

புல்லேர்ஸ் வீதிக்கணித்தான நிலையமே சாலத் தகுந்ததென்பதற்குப் பல நியாயங்கள் காட்டப்பெற்றன. அந்நியாயங்களுள் அங்கே முடிக்குரிய காணி அதிகமுண்டென்பதும் ஒன்றாகது.

களுத்துறையே தகுந்ததென விரும்பித் தெரிந்த திரு. கன்னங்கரா அவர்கள் அதனை ஆரோக்கியகரமான இடமென்றும், அங்கே றப்பர், தென்னைக் காணிகள் போதுமான ஏக்கர் சகாயமாக வாங்கலாம் என்றும் பரிந்து பேசினர்.

#### தமிழ்ப் பிரதிநிதிகளின் தோல்வி

சட்டநிரூபணசபையில் 1927-ம் ஆண்டு சர்வகலாசாலை எந்த இடத்தில் நிறுவப்படவேண்டும் என்ற விவாதம் மிகுந்த ஊக்கத்துடனும், கூர்மையுடனும் நிகழ்ந்தது. அதில் தமிழ்ப் பிரதிநிதிகள் தகுந்ததெனக் கருதி அனுக்கிரகித்த புல்லேர்ஸ் ஸ்தலம் தள்ளுபடியானது.

ஆனால் களுத்துறை நிலையம் சபையாரின் ஆலோசனைக்காயினும் அங்கீகாரம் பெறுதொழிந்தது.

அக்பார் சபையாரின் அறிக்கையின்பேரில் சட்டநிரூபணசபையில் நடந்த விவாதத்தின்பலன் மேற்கண்டவாறாக, அந்த விவாதம் சபை அங்கத்தவர்களுள் பெரும் மயக்கமான அபிப்பிராயங்களை உண்டாக்காதிருக்கவில்லை.

#### எட்டுத் திருத்தப் பிரேரணைகள்

திரு. நீதாசனர் அக்பார் அவர்கள் தும்பறைப் பள்ளத்தாக்கில் சர்வகலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமெனப் பிரேரணை செய்தபோது, அதற்கு எட்டுத் திருத்தப் பிரேரணைகள் வெவ்வேறு அங்கத்தினரால் கிளப்பப்பெற்றன. அவர்களுட் சிலர் இப்போது அரசாங்கசபையில் அங்கத்தினராயிருக்கின்றனர்.

குறித்த திருத்தப் பிரேரணைகளுள் சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய பிரேரணை சிறிது தொந்தரவையுண்டாக்கும் தன்மை வாய்ந்திருந்தது. அவர் கொழும்பு ஸ்தானத்தை ஆதரித்தார்; அவர் அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள விடாமுயற்சியாய் நின்று தமக்குள்ள முழுப்பலத்தையும் பிரயோகித்தார்.

அரசியல் வீரன்—ஈழகேசரி—சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமது எழுபத்தெட்டாவது பராயத்தில் செய்த வீரப் பிரயத்தனம் பிரதிகூலமானது! எனினும் அவருடைய முதிர்ந்த வீரம் அவருடையதே.

திரு. அக்பாரின் உறுதியான பிரேரணை சபையில் அதிகமானோரின் அங்கிகாரம் பெற, எஞ்சிய திருத்தப் பிரேரணைகள் பின்வாங்கப் பெற்றன;– சில பங்கமுற்றன.

#### றிடேல் அதிகாரசபை நியமனம்

இதன்பின் சர்வகலாசாலையைப் பற்றிய முழு விபரங்களையும் ஆய்ந்தறிதற்காக ஒரு அதிகாரசபை நியமனமானது. அதில் சேர். வால்றர் றிடேல் தோன்றிச் செய்ய வேண்டியனவற்றை நிறைவேற்றிய பின்பு, அக்பார் சபையாரின் அறிக்கையின் முக்கியாம்சங்களை அங்கீகரித்துத் தமது அறிக்கையை வெளியிட்டனர்.

இவையெல்லாம் நடந்து ஏழு வருடங்களுக்கு மேலாகிறது; எல்லாம் பழங்கதைகளாய் விட்டன!

ஆதலால், இனியாவது இலங்கைக்குச் சர்வகலாசாலை நிறுவப்படாதா? அதற்குரிய திடமான ஒழுங்குகளைச் செய்வதற்கும், றிடேல் அதிகார சபையின் யோசனைகளை நிறைவேற்றுதற்கும் இது தகுந்த காலமாகாதா?

இனிமேலும் காலதாமதமிருக்குமாயின், அது இலங்கையின் உயர்தரக் கல்வி வளர்ச்சிக்கு ஊறு செய்வதாகும்.

அரசாங்கசபை மந்திரிமார்களும், அங்கத்தவர்களும் இதுபோது சர்வகலாசாலைப்பிரச்சினையின்பேரில் அதிக ஊக்கத்தை ரூபித்து நிற்பினும், ஒரு சர்வகலாசாலையை நிறுவுவதற்குத் தேவையாகும் பணத்தொகையைக் கிரகித்துக் கொள்பவர்களாய் அவர்கள் தோன்றப்படவில்லை.

எனினும், அவர்களது தேசாபிமானமும், கலாபிமானமும் போற்றத்பாலனவே!

*    *    *

கலாபிமானம்மிக்க நமது அங்கத்தவர்கள் அரசாங்கத்தாரின் தற்காலபண நிலைமையைக் கண்டு மனக் களிப்படையவில்லையா?

சட்டநிரூபண சபையில் 1928-ம் ஆண்டு சர்வகலாசாலையைப் பற்றித் தொடர்ச்சியாகநிகழ்ந்த விவாதத்தில், நமது அரசாங்கசபைத் தலைவராக விளங்கும் கனம். வை. துரைசுவாமி அவர்களும், திருவாளர்கள் மகாதேவ, வில்லி, தம்பிமுத்து, கன்னங்கரா, ஜயா, சேனநாயக்கா என்பவர்களும் கலந்து கொண்டார்கள்.

சேர். பாரன் ஜயதிலக்கா அவர்கள் அக்பார் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்ததால், அவர் அதுகாலை திரு. நீதாசனர் அக்பார் அவர்களுடைய வியாக்கியானங்களுக்கெல்லாம் புகழ்மாரி சொரிய வேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. எனினும் தும்பறைப் பள்ளத்தாக்கைப் பற்றி அக்பார் குறிப்பிட்டபோதெல்லாம் ஜயதிலக்கா அவர்கள் குதூகலங் காட்டத் தவறினாரென்பது வாஸ்தவம்.

#### பழம் பாடங்கள்

அப்போது சட்டநிரூபண சபையில் பேசியவர்களுள் திரு. வில்லி அவர்களின் பேச்சுக்களைப் பயிற்சி சம்பந்தமானதாகவும், திரு. அரு. மகாதேவா அவர்கள் திருவாய்மலர்ந்தருளியன அர்த்த சாஸ்திரத்தொடர்பானதாகவுமிருந்தன.

திரு. மகாதேவா அவர்கள் சர்வகலாசாலைக் கட்டடத்துக்கு மாத்திரம் ரூபா 10,000,000 வரை செலவாகுமென்றும், ஏனைய திட்டங்களும் ஒன்றுசேர, மொத்தம் ரூபா 20,000,000 வரை செலவாகுமென்றும் கூறினர். இன்னும் வருடாந்த செலவினங்களுக்குப் பிரத்தியேகமாக மேலதிகம் ரூபா 10,000,000 தேவையாகுமென்பதும் அவரது கொள்கையாக அமைந்திருந்தது.

திரு. மகாதேவா சிக்கனத்தின் அவசியத்தை விளக்கி, "சர்வகலாசாலை ஸ்தாபிப்பதால் மற்றும் முக்கியமான பகிரங்க வேலைகள் தடைப்படுமாயின், சர்வகலாசாலை நிறுவுதலைப் பின் போடுவதே புத்தியுடைமை" என்று கூறினர்.

அவர் மேற்படி வசனத்தை இன்றும் ஞாபகத்தில்வைத்திருக்கக்கூடும்.

*    *    *

சர்வகலாசாலை புல்லேர்ஸ் வீதியில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்பதில் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்குஅடுத்தபடியாக திரு. வில்லி அவர்கள் அதிக உற்சாகம் காட்டினர்.

இராமநாதனும், அக்பாரும் சபையில் விளக்கத்தவறிய சில விபரங்களை வில்லி எடுத்தாண்டது இன்றும் நமது ஞாபகத்திலிருக்கிறது.

இது நிற்க;

இலங்கைச் சர்வகலாசாலை நிறுவப்படின் அது பட்டங்களை உற்பத்தி செய்யும் வெறும் தொழிற்சாலையாகுமோ! அன்றேல், இந்தியாவிலுள்ள சில கேவலமான சர்வகலாசாலைகளைப் போலாகுமோ!

#### பட்டவாஞ்சை

கற்கும் மாணவரில் பட்டம் பெறுவதற்குள்ள அபிலாஷை, போஜனவாஞ்சையினும் பெரிதாயிருக்கிறது. பட்டம்பெற்ற வாலிபர் பலர் வேலையில்லாது திண்டாடுகிறார்கள். இதற்கு நிவிர்த்தி தேடாது, சர்வகலாசாலையை மாத்திரம் நிறுவினாற் போதுமா? கற்றுத் தேறிப் பட்டம் பெறும் வாலிபருக்கு வேலை கிடையாதுபோனால்—? எல்லாரும் அரசாங்கசபை அங்கத்தவர்களாக முடியாது; எல்லாரும் மின்னேரியாத் திட்டத்தாலும், மின்சாரத் திட்டத்தாலும் வேலை பெற முடியாது.

#### பட்டதாரிகளின் பரிதாபம்.

இதன் தொடர்பாகச் சர்வகலாசாலையின் 1934–35-ம் ஆண்டின் பரிபாலன அறிக்கைப் பத்திரத்திலிருந்து ஒரு சாரியத்தைக் குறிப்பிடுவோம்:

"1935-ம் ஆண்டு ஆடி மாதம் 540மாணவர் சர்வகலாசாலையைச் சேர்ந்தார்கள். இந்தத் தொகை 1934-ம் ஆண்டின் தொகையிலும் சுமார் 100 வரை அதிகமானது. இந்த வருடம் 600 மாணவர்வரை சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் 30 அல்லது 35 பேர்வரை பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்"

"1930-ம் ஆண்டின்பின் ஏறக்குறைய 200 பேர் பட்டதாரிகளானார்கள். அவர்களுட் சிலர் வியாபார சமுதாயங்களில் எழுத்தாளர்களாகவும், பலர் கீழ்த்தரமான வித்தியாசாலைகளில் சொற்ப சம்பளத்துக்கு ஆசிரியர்களாகவும் அமர்ந்திருக்கின்றனர்.

சர்வகலாசாலைப் பட்டதாரிகளின் கதி இதுவானால், கல்விமுறையிலா, காலத்திலா குறைசொல்வது?



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இலக்கியப் பகுதி

# குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்.

(திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை)

சுன்னுகம் நாகநாத பண்டிதர் எழுதிய இரண்டாவது கடிதம் இம்முறை வெளியிடப்படுகின்றது. இக்கடிதத்திற் பண்டிதர் தாம் அரிதில் மொழி பெயர்த்த இதோபதேசம் என்னும் நூலை அச்சிடுவதற்கண் செய்யவேண்டிய ஏற்பாடுகளைத் தமது மாணவராகிய புலவரவர்களுக்கு விபரமாக அறிவித்திருக்கின்ருர். இதோபதேசம் புலவரவர்களால் 1886-ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

புலவரவர்களது கல்விவளர்ச்சியையும், செல்வவிருத்தியையுங் கருதிப் பண்டிதரவர்கள் பல புத்திமதிகளைக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

கடிதம் 2.

மிகுந்த நேயமுள்ள அ. கு. அறிவது:-

மேகதூதம் சரியான மொழிபெயர்ப்பல்ல. நான் மொழிபெயர்த்ததெல்லாம் ஒரு முறை பார்த்த நூல்கள். அவைகள் உமக்காக நான் செய்த நூல்கள். நீருமென்னுடைய பிள்ளைகளுங் கூடித் திருத்தி நூறு பிழை பார்த்து எழுதியச்சடிப்பிக்க வேண்டியகாலம் அச்சடிப்பிக்கவும.

நீர் அனுப்பின மூங்கின காகிதம் இங்கிலிசிலே கொள்ளுப்பிட்டியென்றெழுதினபடியால் அந்த ஊருக்குப் போய் என்னிடம் இவ்வளவும் வரவில்லை. இப்போது ஆரோ அறிந்து கற்பிட்டிக்கனுப்பினபின் அதுவும் நீர் அனுப்பினதும் வாசித்தறிந்து மறுமொழி யிரண்டுக்கும் அனுப்பிவைக்கிறேன்.

நானும், மயில்வாகனம் மாமியார் அவவுடைய மகளோடுஞ் சாப்பிடாதது துக்கமாயிருக்கிறேனென்றறிவிக்கவும். என்னுடைய துக்கம் அந்தப் பொடியனுடைய சாவால் துக்கம் அதிகப்படச் சரீரமும் மெலிந்து மண்ணுக்கியிருக்கின்றதென்றும் அவர்களோடுகூட நானும் துக்கம் மாருமலிறப்பேனெனவும் அவர்களுக்கறிவிக்கவும்.

பொஞ்சீனைப் பிடித்துக் கொள்ளும். பெரியவனொருவனுகுதவில்லாமல் மேலேறுதல் கூடாது; சகலமும் அவர் சொன்னபடியே செய்யும். வேறொருவன் இந்த அலக்கழிவுக்கு வரமாட்டான். இலங்கைத்தீவு, திராவிடதேசம் முழுதும் பெரியவரான அவருடைய எண்ணமே சரியென்று எண்ணி அவர் சொல்லுகிறபடி அச்சடிப்பிக்கவேண்டும். வேறொருவன் இந்தச்சள்ளுக்கு வருவானு? பாதிரிமார் அதைக் கவனித்தார்களா? அவர் பிழைதிருத்தினுல்வேறொருவன்பிழையென்று சொல்லத்துணிவானு? அவர் திருத்தியபின் தன்னுடைய அச்சுக்கூடத்திலேயே அச்சடிப்பாரென்று நினைக்கிறேன். அவர் இன்னவிதமாயச்சடிக்கிறதென்று சொன்னுல் என்ன செலவு வந்தாலும் பயமில்லாமல் முடிக்கலாம். அவர் விலக்கவேண்டுமென்பவைகளைக் கொஞ்சம் கொஞ்சம் மாற்றத்தெரியாதோ? மைதுனம் என்பதற்கு உலக சுகமும் அல்லது விழிப்பும் எனமாற்றுக. கல்வியில்லாதவன் என்பதைக் குதிரையினுற் சர்ப்பிணியான கழுதைக்குப் பிறந்த கோவேறு கழுதையைப்போல என மாற்றுக; அல்லது நல்ல கருத்துள்ள வேறொரு வசனமாயெல்லாவற்றையும் மாற்றுக. அப்படியேயவர் பிரியப்பட்டபடியே சிற்றின்ப சாரங்களெல்லாவற்றையும் மாற்றி வேறு நல்லவசனங்களை யவ்வவ்விடங்களுக்கெழுதிக்கொள்ளவும். அதுநல்லகாரியம். அவர்சொன்னபடியே சரிவர எழுதி அவர் திருத்தினதை யேற்று அச்சடிக்கவேண்டும். அச்சடிக்க முதல் வேண்டுமாகில் ஆயிரந்தரமெழுதி ஆயிரந்தரம் திருத்தி முதலெடுக்கவேண்டும். இந்தநூல் எல்லா நூல்களிலுந் திறமான நூலாதலால் நன்ருய்த் திருத்தி எல்லாருக்கும் மார்க்க பேதமின்றி யிணங்க அச்சடித்தால் இதிலேயே பணமெடுத்து மற்ற நூல்களெல்லாம் அச்சடிக்கிறது மாத்திரமல்ல உங்கள் மூன்று பேருக்குஞ் சீவனத்துக்குப் பிழைப்புத் தருமென்று நினைக்கிறேன். எனது பிள்ளைகள் இரண்டு, நீர் மூன்று. அதற்கெல்லாம் நானிருக்கிற பொழுது வழிதிறந்து ஒரு முதல் தருவேன். இதைநன்ருய்த் திருத்தி யெழுதி அச்சிடவும். திருத்தி எழுத வேண்டிய கடுதாசி எவ்வளவு வந்தாலும் எழுதியனுப்பவும் பணம் அனுப்புவேன். நூறுதரம் எழுதி நூறுதரம் திருத்தினபின்னரே அச்சடிக்கிறது இங்கிலிசுகாரர் வழக்கம். சுவாமியை நன்ருய்க் கைக்குள்ளே போட்டுக்கொள்ளும். விட்டுவிடாதேயும். அவர்முகவுரை யொன்றுமே போதும். உமக்கு அவரைத் தெரியாது. மோசமாயெண்ணவேண்டாம். ஆடிமாதம் அவர்களெல்லாரும் இங்கு சந்தந்தோனி கோவிலுக்கு வருவார்கள். நான் காண்பேன்.

மோப்பியுச் சாமி, சிமைதுச் சாமியையும் இடைக்கிடைகாணுமல் விடாதேயும். உம்முடைய பள்ளிக்கூடவேலையைவிட்டுப் போகவேண்டாம். சனிக்கிழமையாந் தோறும் மாத்திரம் சம்பளம் பொருந்திப் படிப்பிக்கவும்; அல்லது அவர்கள் தந்த வேலையை முடித்துக்கொடுக்கவும்.

சின்னத்தம்பிக்கறிவிக்கவும், நானும் ௩௨ கட்டைக்கப்பால் சிலாபத்திலிருந்து துரையிட மொன்றுங் கேள்விப்படாதபடியால் மறுபடி துரைக்கொரு கடுதாசியெழுதிக் காத்திருக்கிறதோ? வேறு வேலைக்குப் போகலாமோ? வென்று கேட்கச் சொல்லு. சின்னத்தம்பி எனக்கெழுதின கடுதாசிக்குத் தயவுபண்ணி மறுமொழி யிதுதானென்று அறிவிக்கவும்.

கெவின்ஸ், விறெக்கன்விறிற்ட்சு, உவைமன், ஆனல்ட், பொன்னம்பலம், சிவசம்பு முதலியவர்களுக்கு நன்ருய் எழுதினபின் காட்டவேணும். விறெக்கன்விறிட்சிக்குப் பிரதானமாய்க் காட்டல்வேண்டும். அவரைக் கண்டவேளை பேசித் திருத்திக் கொள்ளவும்.

கைலாய மான்மியத்தை நன்ருயெழுதி முடிந்தபின் எட்டுக்காரனிடங் கொடுக்கவும்.

பண்டிதர் மகனும் நீரும் கிழமைக்கொருமுறை வாசித்து நன்ருய்த் திருத்திக் கொள்ளவும். சங்கமயதி என்பது அறிமுகத்திற்குக் கொண்டு வருகின்றது, அல்லது பிறரோடு சினேகத்தைக் கொண்டு வருகின்றது. சம் – கூட, கமயதி – போகப் பண்ணுகின்றதென்றருத்தமாம். (இ) யென்றதாது "ஏதி – என்றும்; பிறவினை "ஆபயதி" எனவும் முடியும். "கம்" என்ற தாது – "கச்சதி" எனவும் பிற வினை கமயதி – எனவும் முடியும் இது "கமயதி" என்னும் பிறவினையாம்.

இன்ன இன்ன கதை இத்தனையாஞ்சுலோகமென்றெனக்கெழுதவும் அல்லது நான் இந்த எழுத்துப்பிரதியில் படித்துக்கொள்ள மாட்டேன் கடுஞ்சொற்களைத் தள்ளிப்போடவும்.

விளம்பரம் பொஞ்சீன் காரியம் அறிந்து போட்டுக்கொள்ளலாம்.

அச்சு அவர் தான் அடிப்பிப்பார் போலும். விஞ்ஞான வர்த்தினி வந்து சேர்ந்தது.

பிள்ளைகளும் நீரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாதேயுங்கள். நேரமுள்ளவேளை ஒருவரொருவர் வீட்டுக்குப் போய்ச் சம்பாஷணைபண்ணுங்கள். பணம் இந்தப் புத்தகத்திலே தட்டப்பாருங்கள். அவர்கள் சிறியவர்கள், நீரே ஒருமுதல் தேடிக்கொள்ளப்பாரும். இதைவிட வேறு நூலில்லை. ஆயிரந்தரந் திருப்பியெழுதிக் கழுதை மயிர் பிடுங்கினது போல் வந்தாலும் பயமில்லை. இதுவே நயந்த புத்தகம். மெள்ள மெள்ள எழுதிச் சிற்றின்பங்களெல்லாவற்றையும் விட்டெழுதும். உங்கள் மூவருக்கும் முதல் நான் காட்டுவேன். இதிலே பஞ்சிப்பட்டுப் பட்டத்துக் குவந்தால் எத்தனைதரம் திருத்தியெழுதினுலும் பயமில்லை. வீசையிலே பண்ணெட்டாமலிருக்கட்டும்.

அராலிச் செல்லையருடைய புத்தகம் நான் வந்து அவரிடம் வேண்டிக்கொள்வேன். எனக்கு நீர் அனுப்பவேண்டாம். அவற்றிற்கு நேரமில்லை.

கந்தப்புராணம் முடிந்தபின் எழுதும். அதன்பின் என்னவிலையென்றெழுதிநீராகில் நான் அவருக்கெழுதிக் கேட்டு உமக்கெழுதுவேன். கைலாசமான்மியம்.......முறையும் கிடைத்தால் விடவேண்டாம்.

விதியை விலக்கி நடக்க முடியாவிட்டாலும் மனிதர் குற்றஞ்சொல்லத்தக்கதாய் நடக்கப்படாது. நீர் தனிவழி போகப்படாது. சாப்பிடுகிறநேரம் சாப்பிடாம லிருக்கப்படாது. வீண்சாப்பாடு சாப்பிடப்படாது.

முற்காலத்திலே தமிழர், ஆரியர், பெண் சனங்களைப் படிப்பியாதபடியால் சிற்றின்பங்களை எழுதினர்கள். இக்காலமோ அப்படி முடியாது. சிற்றின்பமின்றிய நூல்களே பெண்சனங்களும் வாசிக்கவேண்டும். எவ்வளவு தமிழ்ப் பெண்சனங்கள் இப்போது உத்தியோகங்களில் நிற்கிருர்கள்.

நானே சுகவீனமுள்ளவனுய் இன்றைக்கோ நாளைக்கோவென்றிருக்கிறேன். இதுவே எனதாரோக்கியம். நீருமெனது பிள்ளைகளும் எள்ளும் எண்ணெயும்போல் செறிந்தொருவருக்கொருவர் புத்திசொல்லி நல்வழியில் நடவுங்கள். காவியங்கள் வாசித்து இலக்கணம் படித்தல் நன்று.

தத: தத: என்ற இதோபதேச வசனத்தில் நாங்கள் சந்தேகப்பட்ட வசனம்—மொழிபெயர்த்தால் பின்னென்ன? அல்லது அவன் என்ன மறுமொழி சொன்னுன். அல்லது சொல்லிக்கொண்டுபோ. என மொழிபெயர்க்கவேண்டும். அதை யறிந்து கொள்க.

சகுந்தலை விலாசம்முடித்து மறுமாசம் அனுப்புவேன்; கடவுள் சித்தமானுல் அனுப்புவேன். நாச்சிமார் கோயிலில் ஐயருக்குச் சூரிய சித்தாந்தங் கற்குத்தாவிலிருந் தெடுப்பிக்க இற்றைக்கொரு மாதத்திற்குமுன் எழுதியிருக்கிறதென்றும் அங்கிருந்து வந்தவுடனே எழுதியனுப்புவேனென்றும், நளோதயம் தந்தால் தமிழ் மொழிபெயர்ப்புச் சீக்கிரம் தருவேனென்றுஞ் சொல்லுக. அவர் நளோதயம் வாங்கித்தரக் கடத்தினுல் நீராகுதல் ஒன்று ஆரிடம் ஆகுதல் வாங்கியனுப்பும். சீக்கிரம் மொழிபெயர்த்தனுப்புவேன்.

இவைகளுக்கெல்லாம் மறுமொழி இப்போ வேண்டாம். சகுந்தலை விலாசம் சீக்கிரமனுப்புவேன். அப்போது அனுப்பலாம். அல்லது உமக்கு அவசியமான காரியங்களிருந்தால் எழுதலாம். அப்படியே நானும் எனக்கவசியமான காரியங்களெழுதுவேன்.

நீர் எழுதுகிற திருத்துகிற காரியங்களைப் பிழையின்றி நூறுதரம் திருத்தியும் நூறுதரம எழுதுவித்து முடிக்கவும். சிற்றின்பங்களைக் கூடியளவு தள்ளவும். சுன்னுகத்திலே குருநாதரிடம் படிக்கிற பெண்பிள்ளைகளைப்போல எத்தனையாயிரம்பிள்ளைகள் அங்கங்கு பள்ளிக்கூடங்களிலே படிக்கிருர்கள். நச்சுப்பழத்தைக் கையிலே யெடுக்க விடுவார்களா? கெட்ட புத்தகங்களை யெங்களுடைய பிள்ளைகள் படிக்க விடுவோமா? அப்படியாகாவிட்டால் பெண் பிள்ளைகள் கைதொடலாமோ? முற்காலமும்வேறு, இக்காலமும் வேறு. அச்சடிக்கிறது இலகு; பிறரைப் படிப்பிக்கிறதும் இலகுவா? உலகத்தில் எத்தனையாயிரம் படிப்பாளிகள் இருக்கிருர்கள். அவர்களை நாம் படிப்பிக்க வல்லரா? ஆதலால் உலகம் சிரியாது கவனமாய்த் திருத்தித் திருத்தி யெழுதி யெழுதிப் பிழையில்லையென்று கண்டு அச்சடிக்கவும்.

ஒருமுதல் இதிலே எடுத்துக்கொள்ளவேண்டும். சாராவலியைப் போல வில்லங்கமாய்க் கொடாமல் மனிதர் வலிய விரும்பி யவாவிப் பழங்களைப் பட்சிகள் அவாவுகிறதுபோலெடுக்கத்தக்கதாய்ப் பண்ணிக்கொள்ளவேண்டும். இதிலேயல்லாமல் வேறுமுதல் எடுக்கத்தக்க புத்தகமில்லை. இதிலே எடாவிட்டால் நீங்கள் மூவரும் அதிட்டம் குறைந்தவர்களாய் மோசப்பட்டுப் போவீர்கள். "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருகப்பாயும்."

இப்படிக்கு

அ. நாகநாதபிள்ளை

வருகிறவாரம் சிவசம்புபபுலவர் கடிதம் வெளிவரும்


சங்கீதக் கருவிகள் விலைக்கிருக்கின்றன

1. பம்பாய் கம்பெனி பிட்டில் சிறிய அளவு (½ Size) புதுவிலை ரூபா 75. பாவித்துப் பரீட்சிக்கப் பெற்றது. விலை கேட்கலாம்.

2. சுருதிப்பெட்டி. அடக்கமான பருமன். 4 சுருதிகளும் அவற்றின் மத்திமங்களும் உளளன. புதியது. தேக்கம் பலகையினுலாயது. விலை ரூபா 22-50.

சண்முகநாதன் புத்தகசாலை
வண்ணுர்பண்ணை

(135) 14-6-36—3.


ஆசிரிய (பயிற்சிக்) கலாசாலைகளின் கைவேலைப் பொருட்காட்சி.

Training Schools' Handworks Exhibition.

யாழ்ப்பாணப் பகுதி ஆசிரிய (பயிற்சிக்) கலாசாலைகளின் இறுதிப் பரீட்சையில் காட்டப்பெற்ற கைவேலைப் பொருள்கள், இம்மாதம 17-ந் திகதி புதன்கிழமை கோப்பாய் அரசினர் ஆசிரிய (பயிற்சிக்) கலாசாலையில் பார்வைக்கு வைக்கப்படும். ஆசிரியாகள் மாலை 2 மணி தொடக்கம் 5 மணி வரைக்கும் ஷை பொருள்களைப் பார்வையிடலாமெனப் பகுதி வித்தியாதரிசகர் திரு. K.S. அருள்நந்தி அவர்கள் அறிவிக்கின்ருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூலவல்.

ஜனார்த்தனன்.

'சூலவல்' என்பது சுற்றுதல்;— ஆதலால், யுத்த இடி, முழக்கம் கடகடவென்று கேட்கும் இந்தக்காலத்தில் நாம் அங்கும், இங்கும், எங்கும் சுற்றிச் சுழன்று கூறுவதைக் குற்றமெனக் கொள்ளக்கூடாது.

உலகத்திலுள்ள இராச்சியங்களின் தற்போதைய நிலைமையைக் கவனித்தால், யுத்தம் ஒன்று நடக்கக்கூடும் என்று கூறுவது பிழையாகாது. சமாதானத்தைப்பற்றியும், ஆயுத பரிகாணத்தைப்பற்றியும் தருணங் கிடைக்கும்போதெல்லாம் வல்லரசுகள் பன்னிப் பன்னிப் பேசுகின்றன;—பேசிப் பேசி யுத்தத்திற்கான ஆயத்தங்களையே செய்துகொண்டிருக்கின்றன.

இதுதான் தற்போது பேசப்படும் உலக சமாதானம்! 1914-ம் ஆண்டு நடந்த யுத்தமே யுத்தங்களின் இறுதியெனப் பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் அது தப்பான அபிப்பிராயம் என்பதை இன்று பலர் அங்கீகரிக்கின்றனர்.

* * *

உலகம் தீய நீர்மைகள் நிறைந்திருந்து அல்லற்படுகிறது. ஒரு யுத்தம் (உலக யுத்தம்) ஏற்படுவது பலப் பல கஷ்டங்களுக்குப் பெரும் நிவிர்த்தியாகும். ஆனால் இனி ஏற்படுவது உலக யுத்தம் என்பதற்கும் சந்தேகமில்லை.

---

அபிசீனியச் சக்கரவர்த்தியைப் பற்றி அறியாத பேர்கள் இல்லை. அதிகார வெறிகொண்ட இத்தாலியரால் அவர் இப்போது முடியிழந்த மன்னர்களுள் ஒருவராய் இங்கிலாந்திலிருக்கிறார். அவருக்கு ஆங்கிலேயர் உதவிசெய்யக்கூடிய நேரம்போய்விட்டது; இனி என்ன செய்யப் போகிறார்களோ!

* * *

அபிசீனியச் சக்கிரவர்த்தி பத்திரிகைத்தொழிலை மிகவும் பிரமையுடையதாகக்கருதி, அடிஸ்அபேவாவில் "காந்தியும சாந்தியும்" என்றபெயரோடு ஒரு பத்திரிகையை நடத்தினார். அதற்குக் கிரமமாக விஷயதானமும் செய்வாராம். ஆனால் அவர் அபிசீனியாவில் இத்தாலியருடைய அட்டூழியங்கள் தொடங்குவதற்கு முன்னாக அந்தப் பத்திரிகையில் அரசியல் சம்பந்தமான விஷயங்களொன்றும் எழுதவில்லையாம்.

(காந்தி = ஒளி, பிரகாசம், light; சாந்தி = சாந்தம், சமாதானம், Peace.)

* * *

இத்தாலியருடைய யுத்த இடி முழக்கம் அபிசீனியாவில் கேட்கத் தொடங்கியபோது அவர் கீழ்க்காணும் கருத்தமைந்த கட்டுரையொன்றை அந்தப் பத்திரிகையில் எழுதினாராம்:—

"யுத்தம் நடவாது தடுப்பதற்கு நாம் முடிந்தவரை யத்தனங்கள்செய்வோம். தடுப்பது முடியாதானால், யுத்தம் செய்வது நமது கடமை. கடைசி மனிதன்வரை பின்வாங்காது நின்று போர் செய்வதும், தேசத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதும் ஒவ்வொருவரதும் பெருங்கடமை. நாம் சண்டைசெய்ய நேர்ந்தால் அது நமது தேசத்துக்குமாத்திரமாகாது; அது ஒவ்வொரு சிறியதேசத்துக்குமாகவே எனக் கருதவேண்டும். முன்னிருந்த அரசர்களைப் போலப்போர்க்களத்தில் நானே சேனைத்தலைவனாக நிற்பேன். நாம் எவருக்கும் குற்றம்செய்யவில்லை. நாம் சமாதானத்தின்பேரில் விழைவுகொண்டிருக்கிறோம் ஆகவேநாம் சர்வதேசசங்கத்தை நம்புகிறோம். அதனோடு எங்களுடைய எதிரிகளைக் கடவுள் ஈற்றில் தோற்கடிப்பார் என்ற நம்பிக்கையும் நம்மிடத்திலுண்டு."

சர்வதேச சங்கம் செய்ததென்ன? கடவுளாவது அபிசீனியாவுக்கு இரங்கவில்லையே!

அநீதியும், அநாகரீகமுங்கொண்ட அட்டூழியங்களைச்செய்து இத்தாலியிலுள்ள முசோலினி இன்று வெற்றிகொண்டாடுகிறான்; நச்சுப்புகையினால் இன்று சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது;— வெள்ளைத்தம்பிரான்களின் நீதியும் யோக்கியமும் வெளியாகிவிட்டது.

இந்த அபிசீனிய மன்னனின் பெயர் என்றும் ஞாபகத்திருக்கும்.

---

நாகரீகமுள்ள வெள்ளைச் சாதியாரின் மகத்துவம் முசோலினியின் அபிசீனிய யுத்தமுறைகளாலும், சர்வதேசசங்கத்தின் செயல்களாலும் விளங்குகிறது.

* * *

"சமாதானம் சமாதானம்" என்று பேசுவதெல்லாம் சண்டைசெய்வதற்குரிய ஆயத்தங்களாகும். "யுத்தச் சாத்தான்" எங்கும் தாண்டவமிடுகிறான். வல்லரசுகள் சண்டைசெய்ய நாம் காணும்நாள் தூரத்திலில்லை. இது ஒருபுறமிருக்க,

---

உலகசமாதானத்தை நிலைநாட்ட அரசியல் வாதிகள் உறக்கமின்றி யோசித்துக்கொண் டிருக்கின்றனர். உலக சமாதானம் ஒருபோதும் உண்டாகாது. அரசியல்வாதிகள் தூக்கமின்மையால் துயருறவேண்டியதே.

* * *

கல்கத்தாவிலுள்ள கோடீஸ்வரரான மார்ஹுரி வியாபாரி ராய்பகதூர் ராம்ஜிதாஸ் பரோஜியா என்பவர் சென்ற இரண்டுவருடங்களிலும் ஆக இருபது நிமிடங்கள் மாத்திரம் நித்திரைசெய்தாராம் அரசியல் வாதிகள் உலக சமாதானத்தை நிலைநிறுத்த நித்திரை விழித்திருப்பதைப்போல, இந்தக் கோடீஸ்வரர் தம்முடைய பணத்தைப்பெருக்க அல்லது பாதுகாக்கத் தூக்கமில்லாதிருக்கவில்லை. பஜோரியாவுக்கு நித்திரை இல்லாது பெரிய நோயாக இருந்து அவரைத் துன்புறுத்துகிறது. வைத்தியம் பல செய்தும் நன்மைகாணவில்லை. ஆதலால் அவர் தமது நோயை மாற்றுபவருக்கு 2,000 பவுண் வெகுமதி கொடுப்பதாய் விளம்பரம் செய்திருக்கிறார். பன்னூற்றுக்கணக்கானவர்கள் அந்த விளம்பரத்துக்குப் பதில் எழுதினார்கள். அவர்களுள் ஒரு அமெரிக்க வைத்தியர் கோடீஸ்வரரை ஆகாயவிமானத்தில் நெடுந்தூரம் பிரயாணஞ்செய்யும்படி யோசனை கூறினாராம்.

* * *

மிஸ்டர் அந்தோனி ஈடன் முதலானவர்கள் ஆகாயவிமானங்களில் ஓடித்திரிந்தாலும் அவர்கள் எண்ணியுள்ள கருமம் கைகூடப்பெறார் என்பது திண்ணம். உலக சமாதானமுங் கிடையாது; அவர்களுக்கு மனச்சமாதானமுமில்லை! ஆகாயவிமானச் சவாரிகளால் நித்திரையின்மையாலுண்டாகும் [illegible] யுத்தச் சாத்தான் இராச்சியங்களின் ஆத்மாவையே பீடித்திருக்கிறது. உள்ளேயிருக்கும் இந்த நோய்க்கு வெளிவைத்தியம் நன்மை பயக்குமா?

* * *

போக; சாண்டிலீயன் என்பவர் இருபத்தொன்பது வயதாயிருக்கும்போது ஏதோ உள் நோய் காரணமாக மூன்று வருடங்கள்வரை தனது மனைவியைத்தானும் கண்களில் விழிக்காது துயின்றாராம். மனைவியின் முகத்தில் விழியாது மூன்று வருடங்களிருப்பதைவிட மகிழ்ச்சி வேறுண்டா?

நித்திரை விட்டெழுந்தால் தொந்தரவுகள் கொஞ்சமாகுமா? மனச்சமாதானமும் போச்சு; மனைச்சமாதானமும் போச்சு! உடனே உலகத்திலுள்ள தீமைகளெல்லாம் வினையாற்ற ஆரம்பித்துவிடும்! சரி, க்ஷவரம் செய்து, ஸ்நாநம் முடித்து வெளியே சென்றால் காதிற்படும் விழற்கதைகள் கொஞ்சமா? வீட்டிலிருந்தாலும் விழலுக்குத் தப்பியபாடில்லை. பின்னை, என்ன செய்யலாம்?

---

புதினப் பத்திரிகைகளையாவது வாசித்து நேரத்தையும், கஷ்டத்தையும் போக்கலாம் என்றால், அவற்றிலும் பிரயோசனமில்லாத பழங் கதைகளும், அருவருப்பான புதினங்களுமேகாணப்படுகின்றன.மக்கள்மனதைக் கலைக்கும் சில்லறைப் புதினங்களும் விழலாகாதா?

ஆ! நெடுக நித்திரை செய்தால் எவ்வளவு இன்பம்! இருக்குமா உலக துன்பம்? விழலுக்குத் தப்ப வழியில்லையே!

* * *

உலக சமாதானத்தை யுண்டாக்க ஆடியோடித்திரியும் பிருத்தானிய அரசியல் வாதிகள் சடாரென நீடித்த நித்திரை செய்ய நேர்ந்தால் என்ன நடக்கும் தெரியுமா? 50,000 ஆகாய விமானங்களும், 10,000 யுத்தக் கப்பல்களும் உலக சமாதானத்தை நிலைநாட்ட உடனே தேவைப்படும்.

அல்லது, சென்ற ஆறு, ஏழு மாதங்களாக முசோலினி நீடித்த நித்திரை செய்திருந்தால், அபிசீனியாவில் இந்தக் குரூரங்களும், அக்கிரமச் செயல்களும் நிகழ்ந்திருக்குமா?

அல்லது, எங்களுடைய அரசாங்கசபை மந்திரிக் கோஷ்டியும், அகத்தவர்களும் சோம்பல் கண்டு துயின்றால், நாங்கள் வாசிக்கும் பத்திரிகைகளில் அதிக விழல் வெளிவரக் காரணமிருக்குமா?

இன்னும். ஆம்பிகளன்ன நியாயவாதிகள் நித்திரையானால், கோடுகளில் அருவருப்பான வியாச்சியங்கள் குறையாதிருக்குமா? அல்லது, வைத்திய சிகாமணிகள் நித்திரை செய்தால், நோயாளர்கள் உயிர் பிழைத்திருப்பார்களா? என்றும் கேட்கலாம். இவற்றையும் விழல் என்று முத்திரையிட்டு விடுவோம்.

* * *

சென்ற செவ்வாய்க்கிழமை மாலை அதி அலங்கார ஆடம்பரங்களுடன் "யாழ்ப்பாணம் பட்டினமண்டபம்" மே. த. தேசாதிபதியவர்களால் திறந்து வைக்கப்பட்டது. முற்றவெளியிலிருந்த பழைய றிஜ்வே ஞாபக மண்டப நிலையத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கட்டப்பெற்ற இந்த மண்டபம் தற்போது யாழ்ப்பாண நகரசபைக் கந்தோராக உபயோகிக்கப் பெறுகிறது. இற்றைவரை கச்சேரிக்குப் பக்கத்தில் ஒரு குச் சென்று சொல்லக்கூடியதான இடத்தில் இருந்த இந்த நகரபரிபாலனக் கந்தோர் முற்றவெளியில் மிகவும் விசாலமும், வடிவுமான இந்தக் கட்டிடத்துள் மாறிவரவேண்டிய ஆத்திரமென்ன? அவசிய [illegible] புவிழாவன்று ரூபா 1000 பெறுமதியான வாணங்களும் எரிக்கப்பட்டது என ஒரு வதந்தி உலாவுகிறது. அது உண்மையானால் நகர பரிபாலன சபையார் வரிசெலுத்தும் ஏழைகளின் பணத்தை விழலில் விரயஞ் செய்கின்றரென்றுதான் கூறவேண்டும், "உழைக்கிறான் பழனியாண்டி, தின்கிறான் சுப்பனாண்டி" என்பது சும்மாவா?

இந்த நகர பரிபாலன சபையாராவது நீடித்த நித்திரையுடையவர்களானாரா? அல்லது "ஜனார்த்தனன்" என்றாலும் மயக்கங்கண்டு துயில் கொண்டானா? என்ன செய்யலாம்!

---

இத்தாலியின் சர்வாதிகாரியும், அபிசீனிய வெற்றியாளருமான முசோலினியும், ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிற்லரும் தற்போது ஏதோ ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்களாம். இந்த ஒப்பந்தத்தின் பலன் என்னவருமென்பது காலமே காட்டும்.

* * *

உலகத்திலுள்ள எல்லாப்புத்திசித்தமுள்ளவர்களும் நேர்மை, யோக்கியமுள்ளவர்களும், ஈகை, இரக்கமுள்ளவர்களும் நித்திரையாக நேர்ந்தால், முசோலினியும், ஹிற்லரும் விழித்திருந்து உலகசமாதானத்தைப் பாழாக்க முடியுமா? முடியாது.

ஆனால், சர்வதேசசங்கம் விழித்திருப்பதும், நித்திரை செய்வதும் ஒன்றுதான். சர்வதேசசங்கம் செய்துமுடித்த காரியங்களிலும், செய்துமுடிக்கத்தவறிய காரியங்களும் செய்யாதகாரியங்களும் அதிகம்.

---

"ஆச்சரியமான விவரம்" என்றதலைப்பின் கீழ் இதன் கீழ்க்காணும் புதினத்தைப் பத்திரிகையொன்றில் நேற்று வாசித்தேன்:—

"98 வயதுள்ள ஒரு வயோதிபருக்கு 60 வயதுள்ள ஒரு மகனும், 2 வயதுள்ள ஒரு ஆண் குழந்தையுமிருக்கிறார்கள். அந்த வயோதிபர் இரண்டாவது தாரமாகத் தமது 88-வது பராயத்தில் ஒரு 25 வயதுள்ள கன்னிகையை விவாகம் செய்தார்.

* * *

விவாகவிஷயத்தில் பல ஆச்சரியங்களுண்டு. ஆதலால், "ஜனார்த்தனன்" மேற்படி விவாகத்தை ஆச்சரியமெனச் சற்றும் கருதவில்லை. விருத்தாப்பிய தசையில் மனுஷர் இயல்பாக நபுஞ்சகராயிருப்பார்களென்ற அபிப்பிராயமும் பேதமுற்றுப் பிழையானதை நாம் கேட்டிருக்கிறோம்.

இத்தகைய சில சம்பவங்களை நாமும் கூறுவோம்.

18-வது நூற்றாண்டில் 94 வயதுள்ள ஒரு போலிஷ் பெண் (அவளுடைய பெயர் ஞாபகத்து வருகிறதில்லை)—தனது மூன்றாவது கணவனாக ஒரு 105 வயதுள்ளவரை மணம் செய்தாள். அவர்கள் குடும்பசீவியம் செய்த 14 வருடத்துள் அவர்களுக்கு 2 ஆண் குழந்தைகளும் ஒரு பெண்பிள்ளையும் பிறந்தன.

ஆணும் பெண்ணும் விருத்தாப்பியராகியும் நபுஞ்சகராயிராததை இது விளக்குகிறது.

* * *

ஹங்கேரி தேசத்தைச் சேர்ந்தவரான ஜேனஸ் ரோவென் என்பவரும், அவருடைய மனைவியாகிய சரா என்பவளும் 147 வருடங்களுக்கு இல்லறவாழ்க்கை நடத்தினர். அவர்கள் இறக்கும்போது (ஒருமாதத்துள் இருவரும் இறந்துவிட்டனர்) புருஷனுக்கு வயது 172, மனைவிக்கு வயது 164. அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தார்கள் – பிள்ளைகள் இருந்தார்களோ என்பது தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியச் செய்திகள்

## பதவிகளை ஏற்றல்

புதிய அரசியற்றிட்டம் அனுசரணைக்கு வருங்கால் காங்கிரஸ் கட்சியினர் பதவி முதலியன ஏற்கும் விஷயத்தைக் குறித்துப்பண்டிதர் ஜவஹாலால் அவர்கள் ஐக்கியமாகாண அரசியற் கூட்டத்தில் கூறியதாவது:—

பதவிகளைஏற்பதாவது தன்னைத் தான் அணுப்புவதே. பதவிஏற்பதால் பெருகட்டங்கள்ஏற்படக்கூடும். காங்கிரஸ் கட்சியினர் பதவிகளைப் பரித்தியாகஞ் செய்வாரென்பதே எனது அபிப்பிராயம். இப்போது தாம் சட்ட சபைகளுள் நுழைய எண்ணுவது புதியஅரசியற் றிட்டத்தை அழித்து ஒழிப்பதற்கேயெனக் காங்கிரஸ் கட்சியினர் கூறுகின்றனர். அது ஒருபோதும் நடக்கப்போவதில்லை, ஆனால் உட்புகாது இலகுவில் அதை தொழிற்படாதிருக்கச் செய்வதே இலகு.

## காங்கிரஸ்காரிய நிர்வாகசபை.

காங்கிரஸ் சபையின் காரிய நிர்வாகசபைக்கூட்டமொன்று இம்மாதம் 29-ந்திகதி வார்டாநகரில் நடைபெறும். மகாத்மா காந்தியடிகளும் சமூகமளித்தற்கு வசதியாகவிருப்பதற்கே அந்நகரில் கூட்டப்படுகிறது. இச்சபையின் அங்கத்தவருள் ஒருவராகும் ஸ்ரீமான் பூலுபாய்தேசாய் இப்போது லண்டனில் வசிக்கின்றார். அவரும் ஆகாயக்கப்பல் மூலமாக இந்தியா வந்து கூட்டத்தில் சமூகமளிப்பாராம்.

---

ஆனால், அவர்கள் ஒரே மாதத்தில் இறந்தார்கள் என்பது விவாகமாகும் ஆணுடைய வயதிலும் பெண்ணுடைய வயது சிறிது குறைந்திருக்கவேண்டுமென்பதைக் காட்டுகிறது.

* * *

1907-ம் ஆண்டில் சுவிடின் தேசத்தில் நீல்ஸ் போல் சென் என்னுமொருவர் தமது 160-வது வயதில் இறந்தாராம். அவர் இறக்கும்போது அவருடைய மூத்தமகனுக்கு 130 வயதாகவும், இளையமகனுக்கு 9 வயதாகவுமிருந்தது.

அவருக்கு மொத்தமாக எத்தனை பிள்ளைகளிருந்தார்களென்பது தெரியவில்லை.

* * *

ஜெர்மனியில் ஆர்ல்பேக் என்ற இடத்தில் 1679-ம் ஆண்டில் லூகஸ்ர்சவன் என்பவன் 67 வயதில் இறந்தபோது அவருக்குப் பிள்ளைகளாகவும், பேரப்பிள்ளைகளாகவும், பீட்டப்பிள்ளைகளாகவும், கொப்பாட்டப்பிள்ளைகளாசவும் 1091 பேர் இருந்தார்களாம்.

விவாக விஷயத்தில் இவற்றையெல்லாம் நாம் விகாரமெனக்கூற விரும்பவில்லை.

* *

ஆனால் ரோமாபுரியில் ஹெயரோனிமஸ் என்னுமொருவர் 21 பெண்களை விவாகஞ்செய்தாராம். அவருடைய இருபத்தோராவது மனைவி முன் 20 பேரை விவாகம் செய்தவளாம்.

அப்படியானல் "ஜனார்த்தனன்" மனதில் ஒரு சிறு ஆசங்கை கிளம்புகின்றது. அந்தப் பெண்ணுக்கு அவளுடைய முதலாவது கணவனுல் ஒரு குழந்தையிருந்தால், அந்தக்குழந்தைக்கு அவளுடைய 2-வது புருஷனுல் பிறந்த குழந்தை என்ன முறையாக இருக்கும்? இதை யோசித்து யோசித்து நமக்குத் தலைவலி ஏற்பட்டுவிட்டது. ஆதலால் நாம் நித்திரைசெய்வதே உத்தமம். வாசகர்கள் அவர்களுடைய முறையைக் காணத் தலையை உடைக்காதிருப்பார்களாக. நமஸ்காரம்.

## R. ஸ்ரீநிவாசனும் சமயமாற்றமும்

சென்னையிலுள்ள ஹரிஜன தலைவராகும் மெஸ். R. ஸ்ரீநிவாசனவர்கள் Dr. அம்பத்கார் மதமாற்றத்தைக் குறித்துச்செய்யும் முயற்சியைப்பெரிதும் கண்டிக்கின்றனர். ஹரிஜனங்கள் யாவரும் ஒற்றுமையுடையராயிருந்தால் எல்லாச்சலாக்கியங்களையும் இலகுவில் பெறலாமென்று ஸ்ரீநிவாசனவர்கள் கூறுகின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் அதைவிட்டு அந்நியமார்க்கத்தைத் தழுவினும் அங்கும் தீண்டாதவராக இவர்கள் கவனிக்கப்படுவரென்பதும் ஸ்ரீநிவாசனின் அபிப்பிராயம். இப்போது அரசினர் எவ்வளவோ சலாக்கியங்களை சனங்கட்கு அளித்துள்ளாரென்றும் இன்னும் விசேஷ உரிமைகள் அவர்களாலேயே அளிக்கப்படவிருக்கின்றனவென்றும், மதத்தைமாறினல் எல்லாச்சலாக்கியங்களையும் இழந்து போகவேண்டி வருமென்றுங் கூறினர். இவ்வாறு பலநியாயங்காட்டி மதமாற்றத்தைத் தாம் அங்கீகரிக்க வியலாதெனவும் கூறிப்போந்தனர்.

## தேசீயக்கொடி.

ஐக்கிய மாகாணத்து அரசியற் கூட்டம் யூனே என்னும் இடத்தில் மிக விமரிசையாகக்காங்கிரஸ் தலைவர் மெஸ். அகமத் கிட்வாய் என்பவரின் தலைமையில் நடந்தது. அப்போது தேசீயக் கொடியைப் பண்டிதர் ஜவஹாலால்நேரு பறக்கவிட்டனர். அப்போது அவர் கூறியதாவது:—வேறுநாடுகளில் தங்கள் தேசீயக் கொடியின் மகத்துவத்தைக் காக்க அநேகர் உயிர் விட்டுள்ளார். இந்தியாவில் நமது கொடியை அவமானப்படுத்த யாராவது எத்தனிப்பின் அவரை நாம் எமது சத்துராதியாகவே எண்ணுவோம். எம்முடைய கொடி நன்கு பாதுகாக்கப்படுத்தற்குப் பூரண சுதந்திரமே அவசியம்வேண்டற்பாலது.

## ஒரு காங்கிரஸ் தலைவரின் மரணம்.

கூர்ஜரநாட்டுவாசியும் சிறந்த காங்கிரஸ் வாதியும் தலைவருமாகிய மெஸ். அப்பாஸ்தியப்ஜி என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமை இறந்துவிட்டனரெனக் கேட்டு மிக்கதுயரமடைந்தோம். இறக்கும்போது இவருக்கு வயது 82 ஆகும். 1930-ம் வருடம் மகாத்மாகாந்தியடிகள்உப்புச்சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலத்து உடன்நின்று தொண்டாற்றிப் பெரும்புகழ் படைத்தவர்.

அப்போது டண்டியில் மகாத்மா சிறைத்தண்டனை பெற்றதும் சத்தியாக்கிரக சேனையின் தலைமையை வகித்து நடத்தும் பெருமை இவர்க்குக் கிடைத்தது. தொடக்கத்தில் இவர் ஐரோப்பிய நாகரீகத்தைப் பின்பற்றி உயர்ந்தனராயினும் மகாத்மாவின் அதிகாரத்துள் வந்ததும் இவர் தமது ஐரோப்பிய உடைகளைப் புறக்கணித்து கதராடையும் சட்டையும், கதர்த்தொப்பியும் அணிந்து சிறந்த தேசீய வாதியாயினர். பரோடா சமஸ்தானத்தில் உயர்தர நிதிமன்றத்து நீதிபதியாகக் கடமை பார்த்த பெருமையும் இவர்க்குண்டு.

இவர்தேசீயநோக்கில் அபிமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர். 1889-ம் வருடம் சென்னையில் கூடிய மூன்றாவது காங்கிரஸ் சபையின் தலைமையை வகித்தவர். இவரின் தமையனாராகும் பெறாடின்தியப்ஜி என்பவரே வயதில் மிக முதிர்ந்தும் தேசத்தொண்டில் அக்கறைகாட்டி வந்தனர். அப்பஸ்தியாப்ஜியின் பெரிய தொண்டுகள் என்றும் நிலவும் என்பதே எமது துணிவு.

## மகாத்மா காந்தியடிகள்

சென்ற ஒரு மாதமாக பங்களூரின் நந்திக்கிரியிலுள்ள சுகஸ்தானத்தில் வசித்துவந்த மகாத்மா காந்தியடிகள் நேற்று (13-6-36) சென்னைவந்து சேர்ந்து அங்கிருந்து அன்று சாயந்தரமே வார்டா நகருக்குப் புறப்பட்டுள்ளார். தற்போது இவர் தேகநிலை சிறிது குணப்பட்டுளதாகக் கூறப்படுகின்றது. பங்களூரில் தங்குங்கால் சுதேசியப் பொருட்காட்சிச் சாலையைத் திறந்து வைத்தனர். ஹரிஜனர்களின் சிலமகாநாடுகளில் சமூகமளித்து அரிய பிரசங்கங்கள் செய்தனராகக் கூறப்படுகின்றது. ஹரிஜனங்களின் நன்மைக்கு உபயோகிக்கும் பொருட்டு பெருந்தொகையான பண முடிப்புகள் மகாத்மாவுக்கு வழங்கப்பட்டனவாம். இப்போதுவார்டாநகர்சென்று அங்கே கிராமப்புனருத்தாரணத்தின் பொருட்டு தொண்டு நடத்தப்படுமெனச் சொல்லப்படுகின்றது.

## அப்துல்கபர்கான்.

எல்லைப்புறக்காந்தி யென்றழைக்கப்படும் அப்துல் கபர்கான் ஐக்கிய மாகாணத்திலுள்ள ராய்பெறலிஎன்னும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தனர். இப்போது அங்கிருந்து அவர் அல்மோறுசிறைச்சாலைக்குமாற்றப்பட்டிருக்கிறார். நல்லாரோக்கியமுடையராயும் மனச்சந்தோஷமுடையராகவும் காணப்பட்டனர். அங்குசில காலம்வசித்துவிட்டு மறுபடியும் ராய்பெறலிக்குஅனுப்பப்படுவராம். இவர் விடுதலையடையும்தினத்தை இந்தியப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## இங்கிலாந்து செல்கின்றார்.

இந்திய கிறிக்கற் பந்தாட்டக் கோஷ்டியார் தற்போது இங்கிலாந்தில் நிற்கின்றனர். பற்பல மாகாணங்கட்கும் சென்று பந்தாட்டம் நடத்தி வருகின்றனர். இவர் தமது கட்சி மிகவும் இளைத்திருக்கின்றதென மதித்து இப்போது C. S. நாயுடு அவர்களைச் சடுதியில் வரும்படி தந்திச் செய்தி அனுப்பியிருக்கின்றனர். இவர் இப்போது கராய்ச்சியிலிருந்து ஆகாயக்கப்பல்மார்க்கமாக லண்டனுக்குப் புறப்பட்டுவிட்டனர். இவர் கிறிக்கற் பந்தாட்டத்தில் பேர்வாய்ந்த C. நாயுடுவின் சகோதரர். தமையனர் போலவே இவரும் அவ்விளையாட்டில் பேர்வாய்ந்தவர். பந்தாட்டம் முடிந்தவுடன் இங்கிலாந்தில் தாமதித்து கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி கற்பர். கிறிக்கற் பந்தாட்டத்திலும் போதிய அனுபவம் பெற இவர்க்கு வசதியுண்டாகும். இவர்க்கு வேண்டிய செலவு யாவும் போவால் மகாராசா பொறுப்பாராம்.

---

## வயாவிளான் வாலிபர் சங்கம்

இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று நிகழும் தாதுஸ்ரீ வைகாசிமீ உசவ (6-6-36) சனிக்கிழமை இரவு 7 மணியளவில் வயாவிளான் அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் ஒத்துழைப்புச் சங்கக் காரியஸ்தர் திரு. C. இரகுநாதன் அவர்களால் "மலையாளம் புகையிலை வியாபாரச் சங்கமும், அதன் நிலைமையும்" என்னும் விஷயத்தைப் பற்றி ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. அதன்பின் புகையிலை வியாபாரத்தைப் பற்றிக் கூட்டத்திலுள்ள சிலரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மேற்படி திரு. C. இரகுநாதன் அவர்களாலும், ஒத்துழைப்புச் சங்கப் பரிசோதகர் திரு. R. C. S. குக் அவர்களாலும் தகுந்த ஆதாரங்களுடன் விடைகள் கூறப்பட்டன. ஈற்றில் மேற்படி சங்கப் போஷகர்களுள் ஒருவரும், "சுதேசநாட்டி"யப் பத்திராதிபருமாகிய திரு. சி. நல்லதம்பி அவர்களால் குறிப்புரையும், காரியதரிசியால் வந்தனோபசாரமும் கூறப்பட்டபின் 9-மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

—கடித

## புதியபட்டினசங்க நிலையம்

### திறப்பு விழாவில் தேசாதிபதியின்சொற்பொழிவு

சென்ற செவ்வாய்க்கிழமை புதிய பட்டின சங்கக் கட்டடத்தைத் திறந்துவைத்தபோது தேசாதிபதிகூறியதாவது:—"புதிய பட்டினசங்கக் கட்டடத்தைத் திறந்துவைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதைக்குறித்து யான் மகிழ்ச்சியடைகிறேன். அதை ஏற்றுக்கொண்டமையால் இவ்வனப்பு வாய்ந்த கட்டடத்தை நான் காணக்கூடியவனானேன். இக்கட்டடத்தைப் படத்தில் அமைத்த சிற்பநூல் வல்லுநருக்கு யாவரும் நன்றிகூறவேண்டும். இப்பட்டினத்தின் பரிபாலனத்தில் மிக்க அக்கறைகொண்டுள்ள பட்டின சங்கத் தலைவர்க்கும் மற்றையோர்க்கும் யாவரும் துதி கூறவேண்டும். இலங்கை அரசியலைக்குறித்துப் பலரும் பலபட அபிப்பிராயமுடையராயிருக்கலாம். ஆனால் அவ்வமைப்பில் ஸ்தலச் சுயாட்சிப்பகுதியே (Local Administration) யாவற்றிலும் பிரதானமானது. பொதுசன வாழ்க்கையில் பெரிதும் அக்கறைகொண்டு வேலைசெய்வது அப்பகுதியே.

பட்டினசங்கத்தின் பரிபாலனத்தின்கீழுள்ளோர் தமது பிரதிநிதிகளின்மீது அதிக அதிகாரம்செலுத்தக்கூடும். அவர்தம் பிரதிநிதிகளை நன்கறிவர். அவர்களைக்கொண்டு தமது குறைகளை இலகுவில் நிவிர்த்திசெய்ய இயலும்.

### அரசாங்கசபை

டொனமூர்த்திட்டத்தில் அதை எழுதிய குழுவினர் குறித்தபடி அரசாங்கசபையை யாழ்ப்பாணத்திலும் கூடவேண்டுமெனப் பட்டினசங்கத்தவர் கேட்டனர். அவ்வாறு செய்வது இலகுவிற் கூடியதன்று. அப்படிச் செய்வதாயின் பெருந்தொகைப் பணம் செலவுசெய்யவேண்டியதாகும். ஆகையால் இப்பிரேரணையை ஏற்றுக்கொள்ளவியலாது.

### நகரசங்கம்

யாழ்ப்பாண வாசிகள் விடாப்பிடியாக நின்று ஒரு நகரசங்கம் அமைத்தலை நாடி உழைப்பதே இப்போது வேண்டப்படுவது. அப்படி ஒரு சங்கம் ஏற்படின் அதிகபணம் செலவு செய்யவேண்டிவருமென சிலர் அபிப்பிராயப்படலாம். ஆனால் நகரவாசிகள் தங்கள் பிரதிநிதிகள் மூலமாகச் சிக்கனத்தைக்கடைப்பிடித்தால் அதிக பணம் வீணாகச் செலவழிய இடமில்லை. வீண் செலவில் விருப்பமில்லாத பிரதிநிதிகளையே யாழ்ப்பாணத்தவர் விரும்புவர்.

### தண்ணீர் வசதி

இப்போது யாழ்ப்பாணவாசிகள் படுங்கஷ்டம் யாவற்றிலும் சுத்தசலம் கிடையாமையே பெரிதாகும். நகரசங்கம் ஏற்பட்டபின் தான் இவ்விஷயம் நன்கு கவனிக்கப்படலாம். இப்புதிய கட்டடங்கள் ஏற்பட்டதின் பயனாக யாழ்ப்பாணப் பட்டின அரசியல் வாழ்க்கை பன்மடங்கு சிறப்பெய்துமென்பதே எமது அபிப்பிராயம்.

---

## மரத்துடன் கட்டுண்ட பொலிஸ் காவலன்

அவிசாவலைப் பொலிஸ்கோட்டில் சென்ற புதன்கிழமை D. திபானிஸ் என்பவன் பெரோரா என்னும் பொலிஸ்காரனை ஓர் மரத்திற் கட்டினதுமன்றி அவனின் பொலிஸ் உடைகளையும் கிழித்துஅவனிடமிருந்த நோற்புத்தகம், விசில், ரோச்லைற் முதலியவைகளையும் பறித்தானெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியெனக்கண்டு 18 மாதக் கடூழியச் சிறையும், 4 வருட பொலிஸ் மேற்பார்வையும் விதிக்கப்பட்டன.

---

செல்வம் கூத்தாட்டிற் கூட்டம்போல் வரும். அது போதல்போல் போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
தாது௵ ஆனி௴ கஉ

# வியாபாரப் பிரதிநிதி அவசியமா?

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடக்கும் வியாபாரம் இலங்கை வாசிகட்கு அனுகூலமாகக்கூடிய முறையில் விருத்தியடைவதற்கு, இலங்கையரசினரின் வியாபாரப் பிரதிநிதி ஒருவர், இந்தியாவில் வசித்து, விஷயங்களை நிர்வகிக்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இவ்விஷயம் அரசாங்கசபையில் விவாதிக்கப்பட்டுப் பெரும்பான்மையோர் பிரதிநிதியொருவர் நியமிக்கப்படுவது அவசியமென்றே அபிப்பிராயங் கூறினர். வியாபாரப்பிரதிநிதிகளின் கடமை யாவை? அவர் தற்போது செய்துமுடிக்கக் கூடியவை யாவை? இலங்கையின் வியாபார நிலைக்கேற்ப இப்போது ஒரு பிரதிநிதி அவசியமா? என்பனவற்றை நாம் சிறிது ஆராய்வதும் அவசியம்

இலங்கையின் செல்வம் விருத்தியடைதற்கு, இலங்கை கைத்தொழில், கமத்தொழில் என்பனவற்றில் பெரிதும் முன்னேற்றமடைய வேண்டும். இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதியாகும் பொருள்கள் கொப்பரு, தேங்காய், நெய் என்பனவே. இந்தப் பொருள்களை இந்தியாவில் விலைப்படுத்துவதற்குப் பதினுயிரக் கணக்கான ரூபாக்களை வருடச் சம்பளமாகக் கொடுத்து, ஒரு வியாபாரப் பிரதிநிதியை நியமிப்பது எப்படி ஏற்கப்படலாம்? வியாபாரப் பிரதிநிதியின் கடமைகளோ யாவையெனத் தற்போது வகுக்கக்கூடியனவாகக் காணேம். இலங்கை, கைத்தொழிலில் பெரிதும் அபிவிருத்தியடையின் அப் பொருள்களை விலைப்படுத்துவதற்கு ஒரு பிரதிநிதியை அனுப்பலாம், அவ்வாறு தொழிலபிவிருத்தி கைகூடாதிருக்கும் இச்சமையத்தில், அப்பிரதிநிதி செய்துமுடிக்கக்கூடிய பெரிய தொண்டுகள்தான் யாவையோ? இனி அரசினர் கொப்பரு முதலியன இந்தியாவில் நன்கு விலைப்படுத்துவதற்கு ஒரு பிரதிநிதி வேண்டுமெனக் கூறின், அதுவும் போதிய நியாயமாகின்றிலதே. தென்னைப் பொருள்களை விருத்திசெய்வதற்கும் அவைகளைப் புறநாடுகளில்விளம்பரப்படுத்துவதற்குமென "தென்னைப்பொருட்சங்கம்" (The Coconut Board) ஒன்றினை அரசினர் ஏற்படுத்தியுளார். இச்சங்கம் நடைபெறுதற்கும் அரசினர் மாதவீதம் பெருந்தொகைப்பணம் செலவிடுகின்றனரே. அச்சங்கத்தினர் தென்னைப் பண்டங்கள் விலைப்படுத்துவதைக் குறித்துக் காலத்துக்குக் காலம் வேண்டிய முயற்சிகளைச் செய்யலாமே. இச்சங்கமே வேண்டியபோதெல்லாம் பிரதிநிதிகளை அனுப்பி விஷயங்களை நிர்வகித்து நிற்பின், அது போதாதா? அதைவிட்டு ஒரு வியாபாரப் பிரதிநிதி வருடம் முழுவதும் சம்பளம் பெற்று, இந்தியாவில் வசித்து செய்யவிருக்கும் பெரியவேலைதான் யாது? வேறு அநேக பொருள்கள் இலங்கையில் தயாரிக்கப்படின் அப்பொருள்களைப் பலவிடங்களிலும் கொண்டுசென்று காட்டி, அப்பொருள்களுக்கு மதிப்பையும் விருப்பத்தையும் அதிகரிக்கச் செய்யலாம். இலங்கையில் கைத்தொழில் முதலியன நடத்தப்படாதிருக்க, வியாபாரப் பிரதிநிதிக்குத்தான் என்ன வேலை யேற்படும்? தேங்காயைக்கொண்டு இந்தியா எங்கணும் திரிந்தாற்போதுமா?

மேலும், இங்கிலாந்தில் இலங்கைப் பொருள்களுக்கு விருப்பத்தை உண்டாக்க ஒரு வியாபாரப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுச் சென்ற ஒருவருடமாகக் கடமை பார்க்கின்றார். அவர் நியமனங்காரணமாக அடைந்த பெருநன்மை தான் யாது? இலங்கையில், தேயிலை, தேங்காய், நெய் முதலியன போதியளவுண்டென்று இவர் செய்யும் பிரசாரம், இவர் பெறும் கொழுத்த சம்பளத்திற்குப் போதுமானதாகுமா? இவ்வாறு லண்டனிலிருக்கும்பிரதிநிதியால்பெருநன்மைகள் கைகூடாதாக, இந்தியாவிலும் ஒருவரை நியமிப்பது எவ்வாறு நன்மையைப் பயக்கும்? விஷயங்களிவ்வாறுக,பணக்கஷ்டமேற்பட்டுள்ள இச்சமயத்தில், அரசினர் விருதாவில் பணத்தைச் செலவிடுவது விரும்பத்தக்கதாயில்லை. அவசியமில்லாத விஷயங்களில் செலவிடும் பணத்தை நன்மையான எத்தனையோ விஷயங்களில் செலவிடலாமே. கிராமங்களில் அதிக செலவின்றி எத்தனையோ தொழில்கள் நடத்தக்கூடியதாக விருக்கின்றனவே. அவைகட்கு அரசினர் உதவி புரிந்து ஊக்கமளித்து நிற்பின் பெருநன்மை ஏற்படாதா? வியாபார முறையைக் குறித்து எவ்வளவோ விஷயங்களை இலங்கைவாசிகட்குக் கற்பிக்கலாம். கொப்பரு, தேயிலை முதலியனவற்றை விருத்தி செய்து இலங்கையைச் செல்வம் நிறைந்த தேசமாக்கலாமென எண்ணுவதும் வீண்நம்பிக்கையே. கைத்தொழில் விருத்திக்கேற்ற பொருள்களும் உபகரணங்களும் போதியளவு இலங்கையில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன என்பதை எவரும் மறுக்கார்? அப்படியாயின், அதை விருத்தி செய்வதன்றோ அரசினர்க்கு முறையும் கடமையுமாகும். அதை விட்டு, வீண்ஆரம்பங்களால் இலங்கை முன்னேற்றமடையுமென மனப்பால் குடிப்பதால் ஒரு நன்மையும் ஏற்படாது. அரசினர் இவ்விஷயங்களை நன்கு நோக்கி வியாபாரப் பிரதிநிதி நியமித்தலை முடிவு செய்வாராக. அரசாங்க சபையினர் செய்த முடிபு ஈற்றில் நன்மையை விளைக்குமா என்பதையும் நோக்குவதுநன்று. அன்றேல்அதை அங்கீகரியாது விடுவதேஉத்தமம்.

## நன்றி கூறல்.

திரு. க. இராசநாயகமும் ஸ்ரீமதி இராசநாயகமும் தங்கள் விவாகத்தைக் குறித்து மங்களவாழ்த்து, உபகாரம் முதலியவை அனுப்பியவர்களுக்கும் இருவாது இல்லங்களிலும் கொண்டாட்டங்களிற் பங்குபற்றிச் சபையைச்சிறப்பித்த நண்பர்களுக்கும், உறவினருக்கும் தங்கள் நன்றியறிதலை இத்தாற் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கின்றனர்.
(140) 14-6-36.

## நகரசங்கம்!

யாழ்ப்பாணப் பட்டினத்துக்கோர் நகரசங்கம் வேண்டுமென்ற கிளர்ச்சி வலுவடைந்து வருவதைக் காண நாம் மகிழ்ச்சியடைகின்றோம். புதிய பட்டினசங்க மண்டபத் திறப்புவிழாக்காலத்தில் தேசாதிபதியும் நகரசங்கம் இன்றியமையாததென்பதை எடுத்துக் காட்டிவிட்டனர். அவ்வாறன்றி வேறெதனைத் தேசாதிபதி கூறுவர்? யாழ்ப்பாணப் பட்டினம் இருக்கும் நிலையை நோக்குமிடத்து, ஒரு நகரசங்கம் ஏற்படினன்றிப் பட்டினவாசிகள் போதிய நன்மைகளை [illegible]யாரென்பதை எவரும் அங்கீ[illegible]ர். அதிக செலவுடன் கூடியதாகும் நகரசங்கம் ஏற்படின், ஏழைமக்கள் பெரிதும் வருந்துவரென வாதிக்குஞ் சிலர் உண்மையைக் கூறுகின்றாரா என்பது பிரதான கேள்வியாகின்றது. நகரங்களில் வசிப்போரின் சுகாதாரமான வாழ்க்கைக்கு இன்றியமையாதன பலவுள. அவைகள் மிகத் திறமையாகப் பரிபாலிக்கப்படினன்றி, நகரவாசம் நரகவாசமாகவே தோன்றுமென்பதில் சந்தேகமின்று. சுத்த ஜலம், சுத்த காற்று, சுத்தமான உணவு ஆகிய இம்மூன்றும் ஆரோக்கியவாழ்வுக் கின்றியமையாதான நாட்டுப்புறங்களில் இவைகள் பொதுவாக இயற்கையிலேயேகிடைப்பன. நகரங்களிலோ பெரிதும் கஷ்டப்பட்டே பெறவேண்டியன. அதுவும் நகரசங்கங்களின் திறமையான இடைவிடா முயற்சியாலும்ஜாக்கிரதையாலும் கைகூடவேண்டியனவே. துர்நாற்றத்தையுண்டாக்கும் அழுக்குகளைக் காலத்துக்குக் காலம் அகற்றுவதும், சனநெருக்கமான இடங்கட்குக் குழாய் மூலமாகத் தண்ணீர் கொடுப்பதும், பழுதுபடாத உணவுப்பொருள்களே சந்தைகள் கடைகளில் விலைப்படச் செய்வதும் நகரசங்கத்தினரின் முக்கிய கடனுகும். இவ்விஷயங்கள் இனிது கைகூடுதற்குப் போதிய அதிகாரத்தைப்பெற்ற ஓர் நகரசபையும், சம்பளம்பெற்று முழுநேரத்தையும் நகரசங்க விஷயங்கட்குச் செலவிடும் தலைவரும் (Chairman) மிக அவசியம். நகரவாசிகள் அதிக பணம் தாம் வரியாகக் கொடுக்கவேண்டுமென மனவருத்தப்பட வேண்டியதுமில்லை. தாம் வரியாகக் கொடுக்கும் பணத்திலும் பன்மடங்கு சிரேட்டமான நன்மைகளைப் பொதுசனங்கள் நகரசங்கத்தில் பெறக்கூடும்.

நகரசங்கம்ஸ்தாபித்தலைத்தற்போது எதிர்த்து நிற்போர், பொதுநன்மையைக்கருதி அவ்வாறு கூறுகின்றனரல்லர். தாமிதுவரையும் வகித்த பதவிகள், காட்டிய செல்வாக்குகள் அனுபவித்த செல்வங்கள் என்பன பங்கமடையுமோ என்று இவர்கள் கருதி அஞ்சுகின்றனர். சுயநலவாதத்தைக்கைப்பிடித்தார்க்கும் தேசத்தொண்டுக்கும் பொருத்தமின்று. இவர்கள் கூற்றுகள் முற்றுக ஒதுக்கப்பட வேண்டியனவே. ஆகையால், அரசினர் இத்தன்மைத்தான பல்வேறு விஷயங்களையும் ஆராய்ந்து நோக்கி நன்மையைப் பயக்கும் தொண்டினைச் செய்து முடிப்பாராக.

## விற்பனவுக்கு

அல்லது

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி ரோட்டில், 16 பரப்பிலுள்ள வளவும் வீடும் தென்னை முதலிய பிரயோசனந் தரும் மரங்களும்.

ச. தில்லைநாதன்
நீர்வேலி, கோப்பாய்

(139) 14-6-36—3.

## அங்கும் — இங்கும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் குடியேற்றநாட்டு மந்திரியாகவிருந்த மெஸ். தோமஸ் என்பவர் தமது பதவியைச் சென்றவாரம் பரித்தியாகஞ் செய்தனர். தேசாளுமன்றத்தில் தாம் வகித்த அங்கத்துவத்தையும் இவ்வாரம் பரித்தியாகஞ் செய்துவிட்டனர். அரசாங்க இரகசியத்தை வெளிவிட்டதே இவர் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. தாம் வேணுமென்று அரசாங்க இரகசியத்தை எவருக்காவது சொன்னது கிடையாதென்கின்றனர். வேணுமெனச் சொன்னுலென்ன, வேறு நோக்கத்தைக்கொண்டு சொன்னுலென்ன இரகசியம் வெளிவந்துவிட்டதே.

* * *

அரசாங்க இரகசியம் வெளியிட்டவர்கள்மீது வழக்குத்தொடுத்து நீதிமன்றத்தாரால் தண்டிக்கப்படலாமென்ற பிரமாணமும் ஒன்றுளது. அதின்படி தோமஸ்மீது வழக்குத்தொடரப்படுமோவெனச் சிலர் கருதினர். இப்போது இங்கிலாந்தின் நீதிப்பகுதித்தலைவர் இவ்விஷயங்களை நன்காராய்ந்து தமது அபிப்பிராயத்தைக் கூறிவிட்டனர். மெஸ். தோமஸ் அவர்கள் வேண்டுமென இரகசியத்தை வெளியிட்டதாகக் காணப்படாமையால் வழக்குத் தொடுக்கப்படுதல் அவசியமில்லையென்றனர். பதவியுமிழந்து, பொருளுமிழந்து தண்டனையும் பெறுவதாயின் வயது முதிர்ந்த தோமஸ்நிலை யாதாகும்? நற்காலமாக தண்டனையிலிருந்து தப்பிவிட்டனர்.

* * *

புதிய நகரசங்கம் ஏற்படுவதையாவர்தான் விரும்பார்? யாழ்ப்பாணப்பட்டினம் மேல் நிலையை அடைதற்குக் கண்டி, கொழும்பு, காலியில் அமைக்கப்பட்டு நடைபெறும் நகரசங்கம்போன்றசபை இன்றியமையாததாகும். "செலவு அதிகரிக்கும்" என்றுகூறி நகரசங்கம் ஏற்படுவதைத் தடுக்கமுயல்வோர் பொதுசன அபிமானிகளென எப்படிக் கூறுவது? தாங்கள் இப்போது பெற்று அனுபவிக்கும் பெருமைகள், செல்வங்கள், சிலாக்கியங்கள், என்பன பங்கமடையுமென எண்ணிச் சிலர் எதிர்ப்பின் அதை யாவர் பொருட்படுத்துவர்? தேசநலத்தை நோக்குவதா? சுயநலவிருத்தியை நாடுவதா?

* * *

நடபடிக்கைகளை இன்னுங் கையாண்டு சென்று இத்தாலியர்க்கு நல்லறிவு வரப் பண்ணலாமென சர்வதேச சங்கத்தினர் எண்ணுவது எல்லாம் வீண் செயலாகும். நடபடிக்கைகள் உபயோகமற்றனவாகவே, அதன் பயனும் அப்படியேயாகும். எதிர்த்துப் போர்க்கோலங் காட்டி தமது எண்ணத்தை நிறைவேற்ற வல்லரசினர் துணியாதிருக்கும்வரையும், இத்தாலியர் பணிவாரா? ஆரம்பத்தில் இலகுவில் செய்துமுடிக்கக் கூடியவைகளை இப்போது பிரமாதமான முயற்சிகளாலும் செய்து முடிப்பது கஷ்டமாகின்றதே. காலந் தாழ்ப்பதால் வந்தெய்திய பயன் இதுதான்.

* * *

இலங்கை யரசாங்கசபைத் தேர்தல் ஏற்பட்ட காலத்து நடந்த கலகங்கள், கொலைகள், அக்கிரமங்கள் என்பவைகளைக் குறித்து இலங்கை யரசினர் ஓர் அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசினர்க்கு அனுப்பியுள்ளார். அவ்வறிக்கை தேசாளுமன்றத்தில் வெளிப்படுத்தும்படி கேட்கப்பட்டும் அப்படிச்செய்ய இயலாதாயிற்று. ஏனெனில், இலங்கையில் தேர்தற்போது நடந்த கலகங்கள் காரணமாக நீதிமன்றத்தில் ஏற்பட்ட வழக்குகள் இன்னும் விசாரணைசெய்து முடிவடையாதிருக்கின்றனவாம். விசாரணைகள் முடிந்ததும் அவ்வறிக்கை வெளியிடப்படுமாம்.

* * *

ஐரோப்பாவில் எந்த நாட்டினைப் பார்த்தாலும் யுத்தகோலமே காணப்படுகின்றது. பணநிலை மிகவும் சீர்கெட்ட காலமாக விருப்பினும் பல்வேறு அரசினரும் சேனைக்கும், யுத்ததளபாடத்திற்கும் ஆகாயப்படைக்கும், யுத்தக் கப்பல்களுக்கும் செலவிடும் பணம் இம்மாத்திரமன்று. இத்துடன் மற்றைய நாடுகளிலுள்ள யுத்த இரகசியங்களை அறிவதற்குப் பற்பல நாட்டினரும் செலவிடும் பணம் பெருந்தொகையாகும். இங்கிலாந்தில்மாத்திரம் வேற்றுநாட்டு ஒற்றர்கள் (Spies) 2,000 பேர் வசிக்கின்றாராம். இவர் செய்யும் வேலைகளோ மிகவும் அந்தரங்கமாகவுள்ளது. இவர்கள் பொருட்டு அவ்வவ் நாட்டு அரசினர் செலவிடும் பணமும் இம்மாத்திரமன்று.

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால், அற்குப வாங்கே செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணவாழ்த்து

சுன்னுகவாசரும் இலங்கை வித்தியாபகுதியில் வித்தியாதரிசகராயிருந்தவருமாகிய திரு. R. கனகசுந்தரம் அவர்களின் மூத்தமகன் நிறைநாட்செல்வன் இராசநாயகம் அவர்கட்கும், சுன்னுகம் திரு. T. N. சுவாமிநாதர் அவர்கள் மகள் நிறைநாட்செல்வி மனோன்மணி அம்மையாருக்கும் கடந்த (6-6-36) சனிக்கிழமை இரவு பத்துமணியளவில் நிகழ்ந்த நன்னுளில் திருமணம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. மணமக்கள் எண்வகைச் செல்வமும் பெற்று நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றும். ப-ர்.

## குழந்தையுடன் விளையாடிய நாகம்.

### தாயின் திகிப்ரமை.

அவிசாவலைப் பகுதியில் தல்துவா என்னுமிடத்தில் வசிக்கும் ஓர் பெண் தனது குழந்தையை அருகேயுள்ள ஒருசிறுகுளத்தில் குளிக்கவிட்டுத் தான் தனதுதுணிகளைக் கழுவிக்கொண்டிருக்கும்போது தண்ணீரிற் சடுதியாக ஓர்சத்தங் கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தபோது தனது குழந்தையைச் சுற்றிக் கொண்டு 6 அடி நீளமுள்ள ஒருநாகம் இருப்பதைக் கண்டு அக்குழந்தையை நாகத்தினின்றும் விடுவித்து வெளியேற்றியபோது நாகம் அவளைப் பின்தொடர்ந்து அவள் கால்களிற் சுற்றியது. அவள் பயமிகுதியால் சத்தமிடச் சக்தியற்றவளாய் ஒன்றுஞ் செய்ய இயலாது நின்ருள். இவள் பயங்கரத்தோடு நின்றதைக் கண்ட அயலவர்கள் அவ்விடம்வந்து பாம்பினின்றும் அவளை விடுவித்தனர். பாம்பு ஒருவருக்கும் ஒருதீங்குஞ் செய்யாது ஓர்மரத்தில் ஏறியதாம்.

## தேசாதிபதி யவர்களின் யாழ்ப்பாண விஜயம்.

### இரு கட்டிடங்கள் திறந்துவைக்கப்பட்டன.

சென்றசெவ்வாய்க்கிழமைகாலை புகையிரதத்தில் மே. த. தேசாதிபயவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். புகையிரத ஸ்தானத்தில் ஏராளமான சனங்கள் காத்திருந்து தேசாதிபதியை வரவேற்றனர்.

யாழ்ப்பாணத்தில், அரசர் பெருமான் ஐந்தாம் ஜோர்ச் அவர்களின் ஞாபகார்த்தமாக அனுதைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட விடுதிச் சாலையையும், பட்டின சங்கமண்டபத்தையும் தேசாதிபதி திறந்து வைத்தனர்.

பட்டின சங்கத் தலைவர் திரு. R. R. நல்லையா அவர்களது மாளிகையில் மேன்மைதங்கிய தேசாதிபதியவர்களுக்கும் மற்றுஞ் சிலருக்கும் ஓர் விருந்துபசாரணை நடாத்தப்பட்டது. ந. கி.

---

சர்வகலாசாலை யொன்று இலங்கைக்கு ஏற்படவேண்டுமென்பதை இப்போது பலரும் உணர்கின்றனர். உயர்தரக்கல்வியில்லாமையாற்றான் இலங்கை மற்றைய நாடுகள்போல் கல்வியிலாவது, வியாபாரத்திலாவது, கைத்தொழிலிலாவது முன்னேறவியலாதிருக்கின்றது. கல்வியிவு போதியளவின்றிக் கைத்தொழில் விருத்தியடைவதெப்படி? இந்தியாவில் வியாபாரம் முதலியன விருத்தியடைவதும், இரசாயன தொழிற்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள், சாயவேலைகள் விருத்தி செய்வதற்கும் சர்வகலாசாலைக் கல்வியே பெரிதும் உதவியாகின்றது. இவ்வித கல்வியை நம் நாட்டவர் பெறவேண்டுமாயின் அங்கியாடு செல்லவேண்டுமெல்லவா.

# லண்டனில் அபிசீனிய அரசர்

## சர்வதேசசங்கமும் உலக சமாதானமும்

## முசோலினியின் அபிசீனிய யாத்திரை

## இத்தாலியர் செய்யப்போகும் புதிய உடன்படிக்கை

### மத்தித்தரைக்கடலில் பிறிட்டிஷ் கடற்படை

அபிசீனிய அரசர் தற்போது லண்டன்நகரில் வைகின்றனர். தற்போதைய பிறிட்டிஷ் [illegible]ரின் சகோதாராகும் குளோசெஸ்[illegible] அபிசீனிய அரசரைச்சந்தித்து நெடுநேரஞ்சம்பாஷித்தனராகப் புதினங்கள் கூறுகின்றன. இற்றைக்குச் சிலவருடங்கட்குமுன், அபிசீனிய அரசரின் முடிதரிப்பு விழா நடந்தபோது குளோசெஸ்ரர் அரசகுமாரனே பிறிட்டிஷ் அரசரின் பிரதிநிதியாக அடிஸ் அபேபாவுக்குச் சென்றவர். பழையநட்பினைப் புதுப்பித்தற்காக இருவரும் சந்தித்தனர் போலும்.

இத்தாலிய அரசினர் தளபதி பாடகிளியோ என்பவரை இத்தாலியின் பிரதம சேனதிபதியாக நியமித்திருக்கின்றனர். மேலும் பாடகிளியோ அவர்கட்கு டியூக்ஒப் அடிஸ் அபேபா என்றபட்டமும் புதிதாக அளிக்கப்பட்டிருக்கிறது. தளபதி கிரஜியானி அபிசீனியாவின் இராசப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்போது பிறிட்டிஷ் அரசாங்கத்தின் பணவிஷய மந்திரியாராகும் மெஸ், நெவில் சேம்பர்லேயின் என்பவர் சர்வதேச சங்கத்தினர் நடபடிக்கைகளை நடத்திச் செல்வதை மிக்க கடுமையாகக் கண்டிக்கிருர். அவர் கூறுவதாவது:- "தற்போதையமுறையில் நடபடிக்கைகளை நடத்திச் செல்லுதல் பைத்தியக்கோலமன்றி வேறு யாது? எத்தனையோ வழிகளிருக்க வீணுக எங்கள் செல்வத்தையும் காலத்தையும் உபயோகமற்ற வழிகளில் உபயோகித்துப் பெருநட்டமடைவதை நான் அங்கீகரிக்க வியலாது. இத்தாலியர்க்கும் அபிசீனியர்க்கும் தகாராறு ஏற்பட்டகாலத்தில் அதைத்தீர்ப்பதற்கு நாங்கள் ஒற்றுமையாக எதிர்த்துநின்ருல் பெருநன்மை ஏற்பட்டிருக்கும். அதைவிட்டு உபயோகமற்ற நடபடிக்கைகளைக் கையாண்டு நின்றமையால் பெரும் அவமானத்தை யடைந்தோம். இப்போது நடந்த வைபவங்களிலிருந்து நாமறியக்கூடிய சில பெரிய விஷயங்கள் உள. சர்வதேசசங்கம் எல்லாவேலையையும் செய்துமுடிக்கும் என்ற எண்ணத்தை நாம் கைவிடவேண்டும். அது செய்து நிறைவேற்றக்கூடிய விஷயங்களில் அதற்கு அதிகாரம் கொடுப்பது உத்தமம். செய்துமுடிக்க இயலாத பொறுப்புகளை ஏற்று அவமானமடைவது விரும்பக்கூடியதன்று. உலகில் சமாதானத்தைச் சர்வதேசசங்கம் நாட்டும் என்ற எண்ணத்தை நாம் கைவிடவேண்டியதே"

அபிசீனியாவில் இப்போது இத்தாலியர் தமது அரசியலை நாட்டிச் செல்கின்றனர். இரு அபிசீனிய சேனைத்தலைவர்களும் 50 சிற்றரசர்களும், சமய குருமாரும், பிரபுக்களும் அடிஸ் அபேபா சென்று இராசப்பிரதிநிதியாரும் தளபதி கிரஜியானியிடம் சரண்புகுந்து இத்தாலிய அரசரை அபிசீனிய சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டனர். சமயவிஷயங்களில் தாம் தலையிடாதிருப்பதாக இராசப்பிரதிநிதி வாக்களித்தனர்.

விரைவில் இத்தாலியின் சர்வாதிகாரியாகும் முசோலினி அபிசீனியாவில் சுற்றுப்பிரயணஞ் செய்வாரெனச் சொல்லப்படுகின்றது. இதுவரையும் முசோலினி ஏழு அரசாங்கப்பகுதியின் மந்திரிவேலைகளையும் தாமே வகித்துவந்தனர். அவை குடியேற்றநாட்டு நிர்வாகம், நகரசங்கங்கள், அந்நியநாட்டு விஷயம், கடற்படை, தரைப்படை, உள்நாட்டு விஷயம், ஆகாயப்படை என்பன. இவற்றுள் குடியேற்றநாட்டுவிஷயம், நகரசங்கங்கள், அந்நியநாட்டு மந்திரி என்னும் பதவிகளைக் கைவிட்டு புதிய மந்திரிகளை நியமித்திருக்கின்றனர். தமது மருமகனுகும் கவுன்ற் ஸியானே என்பவரை அந்நியநாட்டு மந்திரியாக நியமித்திருக்கின்ருர்.

இத்தாலியர் புதிதாக ஒரு உடன்படிக்கையை ஜெர்மானியருடன் செய்ய உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது. சர்வதேச சங்கத்தினர் யூன்மாதம் முடியமுன் நடபடிக்கை கையாள்வதை நிற்பாட்டாவிடின் உடனே தாம் ஜெர்மானியருடன் ஒரு உடன்படிக்கை கட்டாயம் நிறைவேற்றப்போவதாக இத்தாலியர் கூறுகின்றனர். அதன்படி ஜெர்மானியர் குடியேற்ற நாடுகளை மறுபடி பெறவேண்டுமென்பதை இத்தாலியர் அங்கீகரிப்பர். போல்க்கன் பிரதேசத்தில் ஜேர்மன் நாஜிக்கட்சியினர் கொள்கைகள் பரப்புவதை இத்தாலியர் எதிர்க்கலாம். ஜேர்மனியர் சர்வதேச சங்கத்தில் மறுபடியும் அங்கத்துவத்தை நாடார். இவ்வித உடன்படிக்கை ஏற்படின் அது பிரான்ஸியர், பிறிட்டிஷார்க்குப் பெரும் தீமையாக முடியுமெனக் கூறப்படுகிறது.

இப்போது மத்தித்தரைக் கடலில் பிறிட்டிஷாரின் கடற்படையின் மத்திய ஸ்தானமாக இருப்பது மோல்ரு என்னும் தீபகற்பமே அவ்விடம் ஏற்றதல்லவென்றும் சைப்பிறஸ் தீவில் கடற்படையை நாட்டுவதே உசிதமென்றும் பிறிட்டிஷார் அபிப்பிராயப்படுகின்றனர். சைப்பிரஸ்தீவு சூயேஸ் கால்வாய்க்குச் சமீபமென்றும், அக்கால்வாயைப் பாதுகாப்பதற்குச் சமீபத்தில் கடற்படை நிறுத்தப்படுவது அவசியமென்றும் கூறப்படுகிறது.

அபிசீனிய இராசப் பிரதிநிதியாகும் கிரஜியானி என்பவர் அபிசீனியர் ஆயுதங்கள், குண்டுகள், மருந்துகள் முதலிய யுத்த தளபாடங்களைக் கொணர்ந்து அரசினரிடம் ஒப்படைக்கவேண்டிய காலத்தை நீடித்துள்ளார். அபிசீனியா பிரஜைகள் மிக ஒழுங்காக நடந்து கொள்கின்றனவாகையால் அதிகம் கடுமையாக நிற்கவேண்டியதில்லை என்பது அவர் கருத்தாம்.

சர்வதேச சங்கத்தின் பொதுக்கூட்டம் யூன்மாதம் 30-ந் திகதி கூடும். அப்போது நடபடிக்கைகளைப் பற்றியும் அபிசீனிய நிலமையைக் குறித்தும் பேசப்படுமாம்.

---

காலநிலை: தென்றற்காற்று மும்முரமாக வீசுகின்றது வெய்யில் கடுமையாக எறிக்கின்றது. வயிற்றுளைவு முதலிய நோய்கள் ஊர்களில் பரவுகின்றன.

## சந்தாதாரர்களுக்கு!

"ஈழகேசரி"யின் ஆருவதாண்டு இம்மாத இறுதியுடன் பூர்த்தியாகி ஏழாவதாண்டு ஆரம்பமாவதால், சந்தாதாரர்கள் தங்களால் வரவேண்டிய பாக்கியைத் தாமதமின்றி அனுப்பிப் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேம்.

ஜூலை மாதம் 15-ந் திகதிக்குள் சந்தாத்தொகையை அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை V. P. மூலமாக அனுப்பப்படும். வீண் செலவும் சிரமமுமின்றி, குறித்த காலத்துக்குள் அன்பர்கள் சந்தாவை அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கின்றேம்.

அதிபர், ஈழகேசரி.

## கொழும்பு தென்பகுதி தேர்தல் ஆட்சேபனை மனு.

கொழும்பு தென்பகுதிக்கு, அரசாங்கசபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஏ. பீ. டீ. சொய்சாவின் தேர்தலை ஆட்சேபித்துக் கொடுக்கப்பட்ட மனு கொழும்புச் சுப்பிறீம்கோட்டில் நீதிபதி கௌரவ அக்பார் அவர்கள் முன்னிலையில் விசாரணையில் நடைபெறுகின்றது. இன்னும் தீர்ப்புக் கூறப்படவில்லை.

## மனைவிக்குக் கத்திக்குத்து.

திவிரும்பொலா வாசியாகிய பி. இவருலெப்பை என்ற நூரு லெப்பை என்பவர் தமது மனைவியைக் குத்திக் கொலைசெய்துவிட்டதாகத் தெரிகிறது. தகவல் கிடைத்ததும் தண்டகமுவை பொலீஸ்நீதிபதி ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நிகழ்த்தினர்.

முஸ்லீம் டாக்டர் ஒருவரும் அங்கில்லாததால் தண்டகமுவை வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்தார். எதிரி கைது செய்யப்பட்டிருக்கிருர்.

எதிர்பாருங்கள்! கூடியசீக்கிரம் வெளிவரும்.

சரித்திரக்குறிப்பு

(பிரித்தானியாவும் அதன் அயல்நாடுகளும் ஏழாம்புத்தகம்)

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

## பாலத்துறைக் கொலை வழக்கு

சென்ற ஜனவரிமீ 15-ந் தேதி பாலத்துறையி லிருக்கும் பஹுமத் மொஹிதீன் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக மஹமத் காசிம் என்பவர்மீது குற்றஞ்சாட்டி கொழும்பு சுப்பிறீம் கோட் நீதிபதி திரு பார்பர் முன்னிலையில் சென்ற 11-ந் திகதி விசாரணை செய்யப்பட்ட வழக்கில் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## பந்தயக்கடைகாரனுக்குத் தண்டனை

எஸ். ராமசாமிப்பிள்ளை என்பவர்மீது பந்தயக்கடை நடத்தியதாகக் குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு சென்ற 11வ காலிப் பொலிஸ் நீதிபதி திரு. எச். எஸ். ராபர்ட்ஸ் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி தமது பெயர் ராமசாமிப்பிள்ளையல்ல வென்றும் தம்முடைய பெயர் சுந்தசாமி என்றுங் கூறினர். ஆனல் பொலிசார் எதிரியின் உண்மையான பெயர் ராமசாமிதான் என்பதை நிரூபித்து விட்டார்கள். அதோடு குதிரைப்பந்தயச்சீட்டுகள் முதலியவற்றையும் பொலிசார் ஒப்புவித்தனர். நீதிபதி எதிரி குற்றவாளியெனக்கண்டு 250 ரூபா அபராதம் விதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியின் அற்புதச் செயல்

## இராசப்பிரதிநிதியின் மாளிகையில் பெண்சிங்கம்

இம்மாதம் 10-ந் தேதி பம்பாய் யோகஸ்ரீ குகையில் வசிக்கும் கிருஷ்ணனந்த சுவாமிஎன்பவர் 4வயதுடைய ஒரு பழகிய பெண்சிங்கத்துடனும் ஓர் நாயுடனும் சிம்லாவுக்குச் சென்றிருந்தார். இந்த அற்புதத்தைப் பார்க்க அநேகர் பின்தொடர்ந்தனராம். இதைக்கேள்வியுற்ற இந்தியஇராசப்பிரதிநிதி லின்லித்கோ பிரபு, சுவாமியைத் தமது மாளிகைக்கு அழைத்து $1\frac{1}{2}$ மணி நேரம் இது விஷயமாகப் பேசினராம். அச்சிங்கத்தை லின்லித்கோ பிரவும் அவரின் பாரியாரும் முதுகில் தடவிப் பின் படம் பிடித்தனராம். சுவாமியவர்கள் இவைகளைப் பழக்குவதற்கு இந்துதத்துவ ஞானத்திற் கூறப்பட்டிருக்கும் ஜீவனே தத்துவமே, மூலமாயிருந்ததெனவும் கூறினர். இன்னும இப்பெண்சிங்கம் ஏதாவது குழப்பம் பண்ணினுல் அவர் தம்முடனழைத்து வந்த நாயிடம் அதை அடக்குவதற்கு ஏற்ற ஜீவனுசக்தியிருக்கிறதென்றும் கூறினர். இது மாத்திரமல்லாமல் அச்சிங்கம் ஒவ்வொரு காலேயும் 'ஓம' என்னும் அட்சரத்தை உச்சரிக்குமெனவும் இவர் கூறுகின்ருர். இவர் இந்தியாவின் பல பாகங்களுக்குச் செல்வாரென்றும் இதனுல் பழைய இந்து வேதங்களிற் கூறியபடி காட்டுமிருகங்களேயும் வீடுகளில் பழகிய மிருகங்களேப் போலப் பாவிக்கலாமெனவும் நிரூபித்துக்காட்டுவாராம். இவர் பம்பாயில்தாம்வசிக்கும்குகைகளில் இன்னும் அநேக சிங்கங்களேயும் மற்றும் காட்டுமிருகங்களேயும் பழக்கி வைத்திருக்கின்ருராம்.

## பெண்ணுக்கு உலக்கையடி .

மூளாயில் வசிக்கும் 1. எம். சுப்பிரமணியம் 2. என். இராமசாமி 3. எம். நாகலிங்கம் ஆகியவர்களில் முதலாம்எதிரி முத்துக்குமாரு பெண் கன்னிப்பிள்ளேயை உலக்கையால் அடித்துக் காயப்படுத்தினரெனவும், மற்ற எதிரிகள் உடந்தையாயிருந்தார்களெனவும் மல்லாகம் பொலிஸ்கோட்டில் தொடரப்பட்ட வழக்குச் சென்ற 8-ந் தேதி திங்கட்கிழமை விசாரணே செய்யப்பட்டு 2-ம் 3-ம் எதிரிகள் விடுதலே செய்யப்பட முதலாம் எதிரிக்கு 10ரூபா அபாரதமும் ஒருநாள் சிறைத தண்டனேயும் விதிக்கப் பெற்றது. அபாரத மிறுக்கத்தவறினுல் 9வாரச் சிறைத்தண்டனேயனுபவிக்க வேண்டுமாம்.

## மல்லாகத்தில் புகைரத ஸ்தானம்.

"1936-ம் ஆண்டு ஆனிமீ 15-ந் திகதி தொடங்கி மல்லாகத்தில் புகைரதங்கள் தங்கிப்போக அரசினர் ஏற்பாடு செய்திருக்கின்றனரென அறிகின்றேம்.

ஏழாலே, புன்னுலேக்கட்டுவன், கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், அளவெட்டி முதலிய பல இடங்களிலுமிருப்பவர்களுக்கு, மல்லாகப் புகைரதஸ்தானம் பெரும் வசதியாக விருக்கும். இப்புகைரதஸ்தானத்தில் சாமான்கள் ஏற்றவும் இறக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

## 'பதக்கம்' பசியைத் தணிக்குமா?

### பொலீஸ்விதானேயின் மனு.

35 வருடங்களாகக் கடமைபார்த்த ஓர் பொலீஸ் விதானேயாருக்கு ஒரு 'பதக்கம்' (Medal) மாத்திரம் வழங்கப் பட்டதாம். அவர் நுவரெலியாப்பகுதிப் பிரதிநிதியான திரு. E. W. அபயகுணசேகரா அவர்கள் மூலம் ஓர்மனுவை அரசாங்கசபைக்குச்சமர்ப்பித்தார். அம்மனுவில், தமக்கு அளித்த பதக்கத்தினுல் தமது மனேவி, பிள்ளேகளேக் காப்பாற்ற முடியாதென்றும், வேறுஏதாவது சகாயம் செய்யுமாறும், காட்டப் பட்டிருந்தது.

# கோட்டு விற்பனவு விளம்பரங்கள்

வயித்திலிங்கம்-குட்டித்தம்பி
மல்லாகம் வழக்காளி
1. வன்னித்தம்பி-இளேயதம்பியும்
2. பெண் மீனுட்சிப்பிள்ளேயும்
தெல்லிப்பழைகிழக்கு எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின்8724-ம் இலக்கவழக்கில் 1936-ம் ஹு வைகாசி மீ 29-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளேப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1936-ம் ஹு ஆடி மீ 11-ந் தேதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும்.

### விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தெல்லிப்பழைச் கோயிற்பற்றுத் தெல்லிப்பழை கிழக்கு "சித்துவகட்டுவை" (Sithuvakkadduvai) பரப்பு நிலே இலாச்சம் $29\frac{1}{2}$-யும் சிணறும் பனேகளும் வடலிகளும். எல்லே: கிழக்கு சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளேக்குரிய ஆதனமும் வெள்ளவாய்க்காலும், வடக்கு வெள்ளவாய்க்கால், மேற்கு அம்பலவாணர் கனகசபைக்கும் இளேயதம்பி நாகலிங்கத்துக்கு முரியஆதனங்கள், தெற்கு வல்லிபுரம் பெண் செல்லமுத்துவுக்கும், சின்னப்பு சரவணமுத்துவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்,

2. மேற்படி இறை "ஆரியன்சீமா' (Arianseema) பரப்பு நிலே இலாச்சம் 5-ம் குளி 13-ம். பனேகளும் வடலிகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லேயிலிருக்கும் கிணற்றில் பங்கும். எல்லே: கிழக்கு குமாரு முத்துத்தம்பியின் ஆதனம், வடக்கு பொன்னம்பலம் பெண் தங்கப்பிள்ளேயின் ஆதனமும் வன்னித்தம்பி பெண் சிவகாமிப்பிள்ளேயினதும் பங்காளருடையவும் ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை முகப்பும் இளேயதம்பி மகள் நாகம்மாவுடைய ஆதனமும். தெற்கு இளேயதம்பி மகள்நாகம்மாவுக்கும் குமாரு முத்துத்தம்பிக்கும்உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

C. Kandiah Chettar
கொம்மிஷர்.
யாழ்ப்பாணம் 1936-ம் ஹு ஆனிமீ 6உ.
(136) 14-6-36—1

---

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 7948-ம் தத்துவ வழக்கில் தனக்காகவும் தத்துவகாரியாகவும்
வஸ்தியாம்பிள்ளே சுவாம்பிள்ளே
கைம்பெண் றேசைமுத்து
சில்லாலே வழக்காளி
மா. செய்வேத்தி நீக்கிலான்
சில்லாலே எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8013-ம் இலக்க வழக்கில் 1936-ம் ஹு ஆனி மீ 9-ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளேப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் ஹு ஆடி மீ 9-ந் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும்

### விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பண்டத்தரிப்புக் கோயிற்பற்று சில்லாலே இறை "அத்திக்கமன் வளவு" (Athikamanvlavoo) பரப்பு நிலே இலாச்சம் $2\frac{1}{2}$-யும் பனேகளும் கல்வீடும் தென்னேகளும் செய்பயிர் வான்பயிர்களும் தெற்கெல்லேக் கிணற்றிற்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்.

எல்லே: கிழக்கு செய்வேத்தியாம்பிள்ளே மரியாம்பிள்ளேயின் ஆதனம் வடக்கு அந்தோனிப்பிள்ளே சந்தியாப்பிள்ளேக்கும் பெண் ஆரோக்கியத்துக்குமுடையஆதனம். மேற்கு மேற்சொல்லிய எதிராளியின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. ஆனல் கிணற்றில் மறுபங்குகளுக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் பிறநீங்கலாக முழுவதும்.

C. Kandiah Chettiar
கொம்மிஷனர்,
யாழ்ப்பாணம் 1936-ம் ஹு ஆனிமீ 12உ
(137) 14-6-36—1

---

தெல்லிப்பளே மேற்கு
1. சோமர் கந்தையாவும்
2. பெண் இளேயபிள்ளேயும்
வழக்காளிகள்

1. சுப்பிரமணியம் வடிவேலு மறுநாமம் மூத்துக்குமாரு அளவெட்டி. (தற்போது Bacteriological Institute, பொறளே, கொழும்பு)
2. அ. சுப்பிரமணியம் கைம் பெண் செல்லமுத்து அளவெட்டி
3 அப்புக்[illegible] வீரவாகு "
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 9372-ம் இலக்க வழக்கில் 1936-ம்ஹு வைகாசிமீ 29ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளேப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1936-ம்ஹு ஆடிமீ 4-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டி இறை நெடுங்கண்ணி பரப்பு நிலே இலாச்சம் 8-ம் குளி 6-ம் வடமேற்குப் பக்கமாயுள்ள கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். எல்லே: கிழக்கு ஒழுங்கை வடக்கு அப்புக்குட்டி நாகமுத்துவுக்கும் மேற்கு சின்னேயா சின்னத்துரைக்கும் தெற்கு ரோட்டும் இதிற்சொரியலாய் $\frac{2}{3}$ பங்கும்.

2. ஷை இறை நெடுங்கண்ணி பரப்பு நிலே இலாச்சம் 3-ம் குளி 10-ம் வடமேற்குப்பக்கத்திலுள்ள கிணற்றிற் பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும். எல்லே: கிழக்கு சின்னேயா சின்னத்துரைக்கும், வடக்கு அப்புக்குட்டி நாகமுத்துவுக்கும், மேற்கு வேலாயுதர் தம்பையாவும் பங்காளரும் 3-ம் காணியும், தெற்கு தெருவும் ஆகிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கு.

3. ஷை இறை நெடுங்கண்ணி பரப்பு நிலே இலாச்சம் $3\frac{1}{2}$-யும் வடபக்கத்திலிருக்கும் கிணற்றிற் பங்கும் வழி வாய்க்காற் பாவிப்புரித்தும் 'பனேகளும். எல்லே: கிழக்கு 2-ம் துண்டும், வடக்கும் மேற்கும் வேலாயுதர் தம்பையாவுக்கும் பங்காளரும், தெற்கு வேலாயுதர் தம்பையாவுக்கும் பங்காளருக்கும் சின்னேயா சின்னத்துரைக்கும் உரிய ஆதனங்கள். இதிற சொரியலாய் $\frac{2}{3}$ பங்கு.

4. ஷைஇறை நெடுங்கண்ணி பரப்பு நிலே இலாச்சம் 6ம் குளி$14\frac{1}{2}$-யும் தெற்கெல்லேக் காணிக்குளிருக்கும் கிணற்றிற்பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் கிழக்குக் காணிகளுக்குப்போகும் வாய்க்காற்பாவிப்புரித்தும். இக்காணியின் வடக்கெல்லேயாக மேற்குற் காணிக்குச்செல்லும் 3 முழ அகலமான காற்பாதையும் பிறநீங்கலாக. எல்லே: கிழக்கு நாகமுத்து பெண் இளேயாச்சிக்கும் பங்காளருக்கும், வடக்கு நன்னியர் கதிரிப்பிள்ளேக்கும் பங்காளருக்கும், மேற்கு சின்னப்பா துரையப்பாவுக்கும் பங்காளருக்கும், தெற்கு கணபதிப்பிள்ளே பெண் கனகம்மாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

5. ஷை இறை நெடுங்கண்ணி பரப்பு நிலே இலாச்சம் 3-ம் வடலிகளும் நாலாவதாகச் சொல்லப்பட்ட துண்டிலிருக்கும் கிணற்றிற் பங்கும், வழி வாய்க்காற் பாவிப்புரித்தும், கிழக்கு வடக்கு எல்லேகளிலுள்ள 6, 3 முழப் பாதைகள் மேற்கெல்லேக் காணிக்குப் போக்குவரவுசெய்யப் பிறநீங்கலாக முழுவதும். எல்லே: கிழக்கு சின்னப்பா துரையப்பாவுக்கும் பங்காளருக்கும், வடக்கு நன்னியர் கதிரிப்பிள்ளேக்கும் பங்காளருக்கும், மேற்கும் தெற்கும் நாகமுத்துபெண் இளேயாச்சிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள்.

C. Kahdiah Chettiar
கொம்மிஷனர்
யாழ்ப்பாணம் 1936-ம் ஹு ஆனிமீ 10உ
(138) 14-6-36—1.

---

காரவெட்டி வடக்கு. இல: 8711
கோணப்பர் கணபதிப்பிள்ளேகைம் பெண் சிவக்கொழுந்து, வழக்காளி.
ஷை யூர் 1. கார்த்திகேசு சின்னத்தம்பி
2. பெண் பத்தினிப்பிள்ளே
3. ஆழ்வயினர் வேலுப்பிள்ளே
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 8711-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளேப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1936-ம் ஹு ஆடிமீ 11-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்சப்படும்.

### காணிகள் விபரம்.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று வதிரிக்குறிச்சியிறை "ஒல்லன் தோட்டம்" நிலப்பரப்பு 9-ஷை நிலப்பரப்பு $1\frac{3}{4}$ எல்லே கிழக்கு இராமுவயிரமுத்துவுக்கும் மறுபேருக்கு முடையவாதனம். வடக்கு கதிர்காமு ஆறுமுகத்துக்கும் மறுபேருக்கு முடையவாதனம். மேற்கு மாட்டதரும் சந்தையினுர் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு சிதம்பரப்பிள்ளே பெண் சிவபாக்கியத்திற்கும் மறுபேருக்கு முடையவாதனம். இவ்வெல்லேக்குட்பட்ட 27 பங்கு நிலத்தில் நிலப்பரப்பு 1 புறநீங்கலாக மிகுதி அடங்கலும் இதன தென்கிழக்கு மூலேயிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலுருத்தும்.

Regd. A. $\frac{186}{201}$

2 ஷை இறை "வில்லன் தோட்டம்" நிலப்பரப்பு $5\frac{1}{4}$-ம் எல்லே கிழக்கு ஒழுங்கை, வடக்கு கந்தவனம்பெண் வேதவனத்திற்கும் மறுபேருக்கு முடையவாதனம், மேற்கு கதிர்காமர் கந்தவனத்திற்கும் மறுபேருக்கு முடையவாதனம், தெற்கு 1-ம் எதிரிக்கும் மறுபேருக்கு முடையவாதனம். இவ்வெல்லேக்குட்பட்டவைகளில் சொரியலாய் அரைவாசியும்.

Regd: $\frac{186}{202}$

3. ஷை இறை "மெத்தைய குடியிருப்பு" நிலப்பரப்பு $10\frac{1}{2}$யும் பனேகள் வேம்புகள் தென்னேமரங்கள் கொட்டில் வீடுகளும் எல்லே கிழக்கு வேலன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு கணபதி சீனியனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு அத்துளுவிற் கண்ணகியம்மன் கோயிலுக்குடைய வாதனம், தெற்கு 1-ம் எதிரிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லேக்குட்டட்டவைக ளடங்கலிற் சொரியலாய் $\frac{1}{12}$ பங்கும் இதன் வடகிழக்கேயுள்ள வில்லன் தோட்டம் என்னும் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கு வழிவாய்க்கால் உருத்தும்.

Regd: $\frac{186}{203}$

4. ஷை இறை "குருந்தட்டு" நிலப்பரப்பு $8\frac{1}{2}$ இதில் வடக்குப்புறமாய் ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு $4\frac{1}{4}$ல் மேற்குப்புறமாகக் $\frac{1}{4}$ பங்குக்கான நிலப்பரப்பு 1 குளி $1\frac{1}{8}$ எல்லே கிழக்கு கந்தர் கணபதிப்பிள்ளேக்குடையவாதனம். வடக்கு கனகசபைபெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு 2-ம் எதிரிக்கும் மறுபேருக்கு முடையவாதனம். தெற்கு கணபதிப்பிள்ளே வயிரமுத்துவுக்குடைய வாதனம். இதனடங்கலும் இதன் கிழக்கேயுள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உருத்தும் வழிவாய்க்காலுருத்தும்.

Regd: $\frac{186}{204}$

V. K. Chinnathamby
Commissioner & Auctioneer.
Jaffna, 8th day of June 1936.
(134) 14-6-36—1.

---


## தமிழ்மஞ்சரி

முதற்புத்தகம்
(ஆறும் வகுப்புக்குரியது)

வித்தியாசாலேகளி னுபயோகத்துக்குரியதென இலங்கை வித்தியாபகுதியாரால் 3-3-36ல் அங்கீகரிக்கப்பட்டது.

விலே சதம் 60

தனலக்குமி புத்தகசாலே, சுன்னுகம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டிதெற்குப் பாலர்ஞானோதய சங்கம்

### 13-ம் ஆண்டு நிறைவுவிழா.

இச்சங்கத்தின் 13-ம் ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் நிகழும் தாதுவருஷம் வைகாசி மாதம் 24-ம் 25-ம் தேதிகள் (6, 7–6–36) ஆகிய சனி ஞாயிறு வாரங்களில் மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதயசங்க வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முதலாம் நாளாகிய சனிக்கிழமை சமயகுரவர்களில் ஒருவராகிய திரு. ஞானசம்பந்த சுவாமிகளின் குருபூசைத்தினமாகையால் சுவாமிகளின் திருவுருவப் படத்துக்குப் பூசை நடைபெற்றது. அதன்பின் கூட்டம் தேவாரபாராயணத்தோடு மாலை 6½ மணியளவில் ஆரம்பமாயிற்று. தலைவர் அவர்கள் தமது தலைமைப்பேருரையில் சங்கம் இதுவரையும் செய்துவந்த வேலைகளைப்பற்றியும் இனிச் செய்யவேண்டியன எவை என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினர். பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் ஸ்ரீமத் பண்டிதர் வ. சு. இராஜஐயனர் அவர்கள் "திருவள்ளுவர்" என்னும் பொருள்பற்றியும், மானிப்பாய் இந்துக்கல்லூரி பிரதம ஆசிரியர் ஸ்ரீமத். வி. வீரசிங்கம் B. A. அவர்கள் "ஞானோதயம்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டும், எவரும் எளிதில் விளங்கக்கூடியவாறு மிகவும் இனிமையாகவும் தெளிவாகவும் பேசி முடித்தனர். ஈற்றில் தலைவர் அவர்களாலும் 'ஈழகேசரி'ப் பத்திராதிபர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்களாலும் குறிப்புரைகளும் சங்க உபதலைவர்களில் ஒருவராகிய ஆசிரியர் ஸ்ரீமத் சி. கந்தவனம் அவர்களால் சங்கத்தின் பேரால் பிரசாரகர்மாருக்கும் சபையோர்க்கும் நன்றி கூறக் கூட்டம் 9½ மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

இரண்டாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணியளவில் கூட்டம் தேவாரபாராயணத்தோடு ஆரம்பமாயிற்று. அக்கிராசனரின் முன்னுரையின்பின் சங்கக் காரியதரிசியால் 12-ம் ஆண்டு நிறைவு விழா அறிக்கையும் 13-ம் ஆண்டுக்குரிய அறிக்கையும் தனாதிகாரியால் வரவுசெலவுக் கணக்கும் முறையே வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது பின்னர் 14-ம் ஆண்டுக்குரிய உத்தியோகஸ்தர் நியமனம் நடைபெற்றது. தலைவர்: வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர்; உபதலைவர்கள்: திரு. சோ. செல்லப்பா பென்சனர், வே. நாகமுத்து வைத்தியர், சி. கந்தவனம் ஆசிரியர்; காரியதரிசிகள்: திரு. பூ. பத்தியநாதர் பென்சனர், இ தாமோதரம்பிள்ளை ஆசிரியர்; தனாதிகாரி: திரு. க. பொன்னம்பலம்; உபதனாதிகாரி: திரு த. செல்லத்துரை. நிர்வாகசபை அங்கத்தினர்: திருவாளர்கள்: சு. நல்லையா, சி. பொன்னம்பலம், அ. கந்தையர், தா. தம்பையா, மு. கதிரித்தம்பி, சு. இளையதம்பி, வை. முத்துக்குமாரு, சி. ஆசைப்பிள்ளை, க. கந்தையா.

கிராமாபிவிர்த்திக்குரிய பல நிர்ணயங்கள் நிறைவேறப்பட்டன. சிதம்பர சங்கீதவித்வான் லக்ஷமண ஐயர் பிரதம சீடருள் ஒருவராகிய ஸ்ரீமத். தே. அ. இராசுப்பிள்ளை அவர்களால் கேட்டோர் ஆனந்தமடையுமாறு பக்கவாத்திய சகிதமாக "வள்ளி திருமணம்" கதாப்பிரசங்கம் செய்யப்பட்டது. கூட்டம் 11-மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

#### நிறைவேறிய தீர்மானங்கள்

1. பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எவரிடமும் வறியவர், செல்வர். மாணவர், என்ற பேதமின்றிக் கிராமவரி அறவிடும்முறை மிகவும் வெறுக்கக்கூடியதாயிருப்பதால் அம்முறையை அகற்றும்படி அரசாங்கசபையில் ஓர் பிரேரணையைக் கொண்டுவரும்படி எமது பிரதிநிதியைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென இச்சங்கம் விரும்புகிறது.

2. மயிலிட்டிதெற்கு வறுத்தலைவிளான் கட்டுவனாகிய இக்கிராமங்களில் கருப்பநீர் சேர்க்க உத்தரவு கொடுக்கும்படி மதுபரிபாலன பகுதித் தலைவரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென இச்சங்கம் விரும்புகிறது.

3. கட்டுவன் வறுத்தலைவிளான் மயிலிட்டிதெற்கு ஆகிய கிராமவாசிகளினதும் அயற்கிராமவாசிகளினதும் நன்மைக்கும் வசதிக்குமாக ஓர் மருந்துச்சாலை அவசியம் ஏற்படுத்தவேண்டுமெனச் சுகாதாரப்பகுதி மந்திரியையும் அவருடைய நிர்வாகசபையையும் கேட்டுக்கொள்ள வேண்டுமென இச்சங்கம் விரும்புகிறது.

4. மயிலிட்டி தெற்கு வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களுக்குப் பிரத்தியேகமாக ஓர் விதானை இன்மையாலும் காலந்தோறும் இச்சங்க எல்லைக்குள் துர்க்கிருத்தியங்களபிவிருத்தியடைந்து வருவதாலும் அவற்றை நிவிர்த்திக்க அவ்வப்போது அரசின[illegible]த்து வேண்டிய நடபடிக்கைகள் எ[illegible]க மாகாணத்தலைவர் மணியகாரனினுதவியோடு இக்கிராமவாசிகளுக்குள் ஓர் சிறுச்சபையை நியமிக்கவேண்டுமென இச்சங்கம் விரும்புகிறது.

5. கட்டுவன் மயிலிட்டிதெற்கு வறுத்தலைவிளான் ஆகிய இக்கிராமங்களில் காலந்தோறும் ஏற்படும் வெள்ளக் கஷ்டங்களை நேரிற் பரிசீலனைசெய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதற்காக இச்சங்கம் நமது மாகாணத் தலைவருக்கும் மணியகாரனுக்கும் நன்றி கூறுகின்றது. அத்துடன் போக்குவரத்து மந்திரியையும் அவருடைய நிர்வாக சபையையும் மேற்கூறிய கிராமங்களில் வெள்ளவாய்க்கால் வெட்ட 1936-ம் 37-ம் ஆண்டுகளுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளவேண்டுமென இச்சங்கம் விரும்புகிறது.

6. கட்டுவன், மயிலிட்டிதெற்கு–வடக்கு, வறுத்தலைவிளான், பலாலி ஓர் பகுதி வயாவிளான், ஏழாலைவடக்கு ஆகிய இக்கிராமவாசிகளின் வசதியின் பொருட்டு ஓர் மத்திய இடத்தில் ஓர் தபாற்கந்தோர் அல்லது உபதபாற் கந்தோர் ஸ்தாபிக்கும்படி தபாற்கந்தோர்த் தலைவரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமெனத் இச்சங்கம் விரும்புகிறது.

இச்சங்கத்தாரால் பெருந்தொகைப் பணம் செலவிட்டு ஸ்தாபித்து யாழ்ப்பாணம் சைவவித்தியாபிவிருத்திச் சங்கத்தார் வசம் பல நிபந்தனைகளோடு ஒப்புவிக்கப்பட்ட சங்கவித்தியாசாலையை அதன் தற்கால மனேஜர் திரு. சு. இராசரத்தினம் தமது நன்மையை விரும்பி சிலருடைய விருப்பப்படி சை. வி. வி. சங்கக்காரிய நிர்வாகசபையையும் கையளித்த சங்கத்தாரின் நிபந்தனைகளையும் கவனியாது தாமே சர்வாதிகாரி என மதித்து இச்சங்கம் வித்தியாசாலையை முறைகேடாக நடத்துவதை இச்சங்கம் வெறுப்பதோடு வித்தியாசாலை மனேஜரையும் பெலமாகக் கண்டிக்கிறது. —கடித.

## கலம்பகம்

லாகூரைச் சேர்ந்த முஸ்லிம் வயோதிபர் ஒருவர், மோட்டார் வண்டியில் 200 மைல் தூரம் பிரயாணஞ் செய்து விட்டு நடந்து செல்லுகையில் வெய்யிலின் கொடுமை காரணமாகத் திடீரென வழியில் விழுந்து உயிர்துறந்தாராம்.

o o o

வறக்கொடை என்னுமிடத்திலுள்ள ஜீ. எம். தல்தேன என்னும் மனுப்பத்திரம் எழுதுபவர், தபாற்பகுதி அதிகாரியை ஏமாற்ற எத்தனித்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 6 மாதச் சிறைத்தண்டனையும் 100 ரூபா அபராதமும் விதிக்கப் பெற்றாராம். o o o

லண்டனிலுள்ள பிரபல பத்திரிகைக்காரராகிய சேர். யோன்போஸ்றர்பிரேசர் என்பவர் சென்ற 7-ந் தேதி காலஞ் சென்று விட்டாராம்.

o o o

காலியில் நெருப்பணைக்கும் இயந்திரநிலையம் ஸ்தாபிப்பது சம்பந்தமாகச் சென்ற 6-ந் தேதி வேலைதொடங்கப் பட்டிருக்கிறது. வருகிற ஆகஸ்டுமாத முடிவிற்குள் கட்டிடவேலை பூர்த்தியாகி விடுமாம். o o

சென்ற 8-ந் தேதி கொழும்பிலிருந்துபுறப்பட்டுச் சென்ற மோட்டார்வண்டி ஒன்று 40 மைல் தூரத்திலுள்ள தலவித்தா என்னுமிடத்தில் பாலத்தின்மீது மோதிப் பக்கத்திலுள்ள நீரோடையில் விழுந்ததால், அங்கு ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த அப்துல் என்பவர் மோட்டார் வண்டிக்குக்கீழே அகப்பட்டுக் காயமடைந்தார். அதிற்பிரயாணஞ் செய்தோர் சிறிது காயமடைந்தனர். மோட்டார்வண்டி முழுவதும் சேதமடைந்து விட்டதாம்.

o o o

சென்ற 6-ந் தேதி இரவு 11மணியளவில் கொழும்பு – கல்கிசை என்னுமிடத்தில் உண்டாகிய ஓர் மோட்டார்வண்டி விபத்துக் காரணமாக மூன்று ஆங்கிலேயர் காயமடைந்தனராம்.

o o o

ஒரு வருடகாலத்துக்கு உலக யாத்திரை செய்வதற்கெனப் புறப்பட்ட யோகூர் சுல்தான் அவர்கள் தற்போது கொழும்பிலிருக்கின்றனராம். o o

"கூழ்முட்டை" எனக் கூறப்படும் கெவற்சிங்கோ என்பவர், குடிவெறிகாரணமாகக் கொள்ளுப்பிட்டி நகரசங்கச் சந்தையில்நின்று பலருடன் சச்சரவிட்டாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 100 ரூபா அபராதம் அல்லது 4 மாதச் சிறைத்தண்டனை எனத் தீர்ப்பளிக்கப் பெற்றாராம்.

வேலூரைச் சேர்ந்த மகந்து உயர்தர பாடசாலையில் தீவிபத்து ஏற்பட்டதால் பாடசாலையின் ஒருபாகம் முற்றிலும் எரிந்து விட்டதாம்.

o o o

அய்யம்பேட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த பசுபதிகோவில் என்னுங்கிராமத்தில் ஒரு தென்னைமரத்தில் 4 குரங்குகள் இருந்து தேங்காய்களைச் சேதப்படுத்துவதைக்கண்ட 12 வயதுடைய சிவசாமி என்னுஞ் சிறுவன் தென்னையில் ஏறிக்குரங்குகளைக் கலைத்தான். குரங்குகள் சிறுவனை எதிர்த்துக் காயப் படுத்தியதால் அவன் கீழேவிழுந்து உயிர் துறந்தானும்.

o o o

"மேவெயர்" என்னும் பந்தயக்குதிரை ஒன்று தனது தொழுவத்தினின்றும் வெளிப்பட்டுப் புல்லர்ஸ்ரோட்டு மார்க்கமாகச் சென்று யாவத்தைச் சந்தியில் நின்ற இருவரைக் காயப்படுத்தியது. காயமடைந்தவர்களில் ஒருவராகிய இராமசாமி என்பவர் வைத்தியசாலையில் உயிர்துறந்துவிட்டாராம். o o

அபிசீனிய அரசரும், அவரது குடும்பமும் அபிசீனியாவிலிருந்து பலஸ்தீனத்துக்குத் தப்பி ஓடியபோது, அவர்களை ஏற்றிச்சென்ற "H. M. S. என்ரபிறைஸ்" என்னும் பிரித்தானிய படைக்கப்பல் சென்ற 10-ந் தேதி கொழும்புக்கு வந்து சேர்ந்ததாம். o o

இலங்கையிலுள்ள உஷ்ணப்பிரதேச நிலங்களில் இயந்திரஉதவி கொண்டு விவசாயம் செய்வதைப்பற்றி கமத்தொழிற் பகுதி நிர்வாகசபையார் ஆலோசனை செய்கின்றார்களாம்.

o o o

வனத்தமுல்லை என்னுமிடத்தில் ஓர் சிறுபெண் எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கிற்கு அருகாமையில் நித்திரை செய்தபோது, விளக்கிற்குமேலே தொங்க விடப் பட்டிருந்த படமொன்று தீப்பற்றி எரிந்து அப்பெண்ணின் மேல் விழுந்து அவளின்சீலையில் தீப்பற்றிக் காயப்படுத்தியது. உடனே அவள் பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறிது நேரத்துள் உயிர்துறந்தாளாம்.

o o o

சென்ற ஜனவரிமாதம் 7-ந்தேதி மாத்தறையிலுள்ள டொன் சைமன் ஸ்வாரா என்னும் இளைஞன், எகொட விதானகே மார்ட்டின் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தாரெனக் காலிச் சுப்பிறிம் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பெற்றானும்.

## மறவன்புலோ இந்து வாலிபர் சங்கம

மேற்படி சங்கத்தின் விசேஷ கூட்டமொன்று தாது ஆண்டு வைகாசித் திங்கள் 22-ம் நாள் (4-6-36) வியாழக்கிழமை மாலை 7 மணியளவில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் சங்க அக்கிராசனர் திரு. கா. பொன்னம்பலம் ஆசிரியர்அவர்கள் தலைமையின்கீழ் தேவாரபாராயணத்தோடு ஆரம்பமாயது.

பின்னர், 1-வது சென்றகூட்ட அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டுச் சபையினங்கீகாரம் பெற்றது. 2-வது "சங்க வளர்ச்சிக்கு இன்றியமையாதன" என்னுந் தலையங்கத்தைக் கொண்டதோர் அரிய பெரிய விஷயமொன்று எழுதி வாசிக்கப்பட்டது. 3-வது அரசியல் விஷயங்களையும், சமய விஷயங்களையும் நாட்டு முன்னேற்றங் கருதிய விஷயங்களையும் தன்னகத்தே கொண்டு திகழுஞ் சங்கப் பத்திரிகையாகிய "இந்து வாலிபர் கேசரி" வாசிக்கப்பெற்றது. 4-வது மும்மொழிப் பயிற்சி வல்லுனரும், "காதண்ட" வாசருமாகிய பிரம்மஸ்ரீ கு. யோகானந்தீஸ்வரக் குருக்கள் அவர்களால், "மானிட தேகத்தின் லட்சியம் என்னும் விஷயம் சொற்சுருக்கம் பொருட்பெருக்கமுற அரிய பெரிய வசனநடையில் நன்குபேசப்பட்டது. பின்னர் அவையோர் பலரினதும் அக்கிராசனரினதும் குறிப்புரையோடும் தேவாரபாராயணத்தோடும் கூட்டம் 10 மணியளவில் இனிது நிறைவேறிற்று. கடித


## சலாமிசிரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினோம்.

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்தேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவானி, நீர்முவ்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon.

(105) 5-4-36-8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி

# மார்க்கோ போலோ

சி. த.

(முற்றொடர்)

அந்தக் கான் அரசனுடைய கொலுமண்டபத்தில் ஒரு பெரிய அறையிலே வைக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்குள்ளே அநேக மேசைகள் இருந்தன. மிகவுயர்ந்த மேசையிலேதான் அரசனுடைய ஆசனம் இருந்தது. இதற்கு இடதுபக்கத்திலே அரசியினுடைய ஆசனம் இருந்தது. இந்த ஆசனங்களுக்குக் கொஞ்சம் பதிவாகச் சிறிது தூரத்திலே இராசகுமாரர்களுடைய ஆசனங்கள் இருந்தன. இன்னும் பதிவான ஆசனங்கள் மற்றைய அரசகுமாரர்களுக்கும்பிரபுக்களுக்கும்வைக்கப்பட்டிருந்தன. இப்படியே அவரவர் அந்தஸ்துகருத் தக்கபடி ஆசனங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த மண்டபத்தின் வாசற்படியிலே ஒருவரும் கால் வைப்பதில்லை. வாசற்படியைக் கடந்துதான் எல்லாரும் உள்ளேபோக வேண்டும். இப்படிச் செய்கிறார்களோவென்று பார்ப்பதற்காக இரண்டு காவற்காரர் அந்த வாசற்படியருகே வைக்கப்பட்டிருக்கிறார்கள். யாராவது வாசற்படியிலே கால்வைத்துவிட்டால் இந்த உத்தியோகஸ்தர் உடனே அவருடைய உடுப்புகளைக் களைந்து விடுவர். பின்பு அவர் தண்டமாக ஒருதொகைப்பணம்இறுத்துத்தான் அந்த உடுப்புகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். விலைகொடுத்து வாங்க முடியாதவர்களுக்குப் பிரம்படி கொடுப்பார்கள். ஆனால் உயர்ந்த நிலையிலுள்ளவர்களை அவர்கள் அடிப்பதில்லை.

அந்த அறையிலுள்ள ஒவ்வொரு மேசைக்குப் பக்கத்திலும் ஒரு சாடியுண்டு. அந்தச் சாடி நிறையக் குடிவகையுண்டு. சாடிக்குப்பக்கத்திலே கிண்ணங்களுமுண்டு. இந்தச் சாடியும் கிண்ணமும் பொன்னாலே செய்யப்பட்டவை. அங்கேயிருப்பவர்கள் அந்தக் குடிவகையை வேண்டியமட்டும் குடிக்கலாம். கான் அரசர் குடிக்க விரும்பும்போது ஒரு வேலைக்காறன் ஒரு கிண்ணத்திலே குடிவகையைக் கொண்டுவந்து கொடுப்பான். குடிக்கும்போது வாத்தியங்களெல்லாம் முழங்கும். எல்லாரும் மரியாதைக்காக எழுந்து நிற்பார்கள். எனது தகப்பனாரும் சிறியதகப்பனாரும் கான் அரசனுக்கு முன்பாகச் சென்றபோது வணக்கம் செலுத்தினார்கள். நிலத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள். அரசன் அவர்களை எழும்பச் சொன்னார். போப் அரசா கொடுத்த கடிதமும் வெகுமதிகளும் அரசனுக்கு முன்பாக வைக்கப்பட்டன. அரசன் அவற்றை அங்கிகரித்துக்கொண்டு என்னைப் பார்த்து "இந்தப் பையன் யார்" ஆர் என்று எனது தகப்பனாரைக் கேட்டான், "இவன் எனது மகன். மார்க்கோ என்னும் பேரையுடையன். தங்களுடைய ஊழியன்" என்று எனது தந்தை பதில் சொன்னார். "அவனைக் கண்டது எனக்கு மிகவும் சந்தோஷம் அவனை எனது வேலைக்காறனாக நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்" என்றார் அரசர். ஆகவே நான் குப்ளாய்க்கானுடைய அரண்மனையில் ஓர் வேலைக்காறனானேன். எனது எசமானாகிய கான் அரசர் என்னை மிகவும் கௌரவமாக நடத்தினார். பல ஊர்களுக்கும், தேசங்களுக்கும் தூதனாக அரசர் என்னைப் பலமுறையும் அனுப்பினார். நான் சென்றவிடமெல்லாம் எனக்குப் பெரியமரியாதைகள் நடந்தன. நான் கண்டதும் கேட்டதுமான காரியங்களைப்பற்றி அவ்வப்போது எழுதிக்கொண்டேன். இவற்றை அரசனுக்குங் காண்பித்தேன். வேற்றுநாடுகளைப்பற்றிய சங்கதிகளை அறிவதில் கான் அரசருக்கு விருப்பமதிகம். இந்தவிதமாக நான் கான் அரசருக்குக் கீழே பதினேழு வருடம் வேலை பார்த்தேன். அதனால் அவருடைய அரண்மனையில் எனக்கு நல்லநடப்பு நடந்தது. நான் அதிகம் பணமும் சம்பாதித்தேன். எனது தந்தையும் சிறிய தந்தையும் அப்படியே பணம் சம்பாதித்தார்கள்.

இப்படி நீண்டகாலமாகக் கான் அரசனுடைய அரண்மனையிலே வேலைபார்த்தபின்பு, நாங்கள் வீடுபோக விரும்பினோம். கான் அரசரும் வயோதிபதிசையையடைந்து விட்டார். அவருக்கு மரணம் எந்தநேரமோ வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஒருநாள் எனது தந்தையார் அரசனை நோக்கி, "அரசர்பெருமானே! நான் தங்களையொருவரம் கேட்கிறேன்," என்றார். "என்னவரம்வேண்டும்" என்று அரசன் கேட்டார். "நாங்கள் வீடுபோகவிரும்புகிறோம்," என்றார் தந்தையார் "வேறென்ன கேட்டாலும் சம்மதிப்பேன். இதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்," என்று அரசர் சொன்னார். ஆனால் கொஞ்சக்காலம் சென்றதும் எங்களுக்கு நல்லகாலம் பிறந்தது. பாசியா தேசத்திலிருந்து மூன்று பிரபுக்கள் தங்கள் அரசருக்கு மணம்பேசி கான் அரசனிடம் வந்தார்கள். கான் அரசர் தனது குடும்பத்திலுள்ள ஓர் இராசகுமாரியைப் பார்சியா நாட்டு அரசனுக்கு மணம் முடித்துக்கொடுக்கச் சம்மதித்தார். ஆகவே, அந்த இளவரசியைப் பார்சியா நாட்டுக்குக் கொண்டுபோகும்படி எனக்குக் கட்டளையிட்டார். நாங்கள் பதினாலு கப்பல்களிலே புறப்பட்டோம். கடல்மார்க்கமாக இரண்டுவருட யாத்திரையின் பின் பார்சியா நாட்டையடைந்தோம். அந்தநாட்டு அரசன் இறந்துபோனான். ஆகவே இளவரசியை அவனுடையதம்பிக்கு விவாகம் செய்து வைத்தோம். பின்பு நாங்கள் வெனிஸ் நகருக்குப் புறப்பட்டோம். இடைவழியிலே, குப்ளாய்க்கான் இறந்துவிட்டாரென்று கேள்விப்பட்டோம். ஆகவே நாங்கள் அந்த அரசனிடம் திரும்பிப் போகவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லாது போயிற்று.

எனது தகப்பனார் என்னை வெனிஸ் நகரிலே கண்டது 1270-ம் ஆண்டாகும். நான் வெனிஸ் நகரை விட்டுச் சென்றது 1271-ம் ஆண்டாகும். நான் திரும்பி வெனிஸ் நகரை 1295-ல் அடைந்தேன். ஆகவே நான் 24 வருடம் வெளிநாட்டிலே காலம்கழித்தேன். ஆனால் நாங்கள் அதிகம் பணத்தோடும் புகழோடுமே வந்தோம். திரும்பிவந்தபோது எனது வயது 39. இதுவே எனது சரித்திரம். இது உண்மைச்சரித்திரம் ஆகும்."

## மேட்டார்ச் சாரதிக்கு அபராதம்

மயிலிட்டிதெற்கைச் சேர்ந்த தம்பையா சின்னப்பு என்பவர், சென்ற கார்த்திகைமாசம் 13-ந் தேதி C. 6109 இலக்கமுள்ள மோட்டார் வண்டியைக் கவலையீனமாகச் செலுத்தி உரும்பராய் வாசிகளாகிய எஸ். செல்லையா, கார்த்திகேசு ஆகிய இருவரையும் தட்டிவீழ்த்திக் காயமுண்டாக்கினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டவழக்குச் சென்ற 8-ந் தேதி மல்லாகம் பொலிஸ் கோட்டில் விசாரணை செய்ய[illegible] எதிரி குற்றவாளியாகக் [illegible]ப்பட்டதால் 50 ரூபா அபராதம் அல்லது 3 மாதச் சிறைத்தண்டனை எனத்தீர்ப்புச் செய்யப்பட்டது.

## இரண்டுருத்தல் அபினுக்கு 6 மாதச்சிறை

வல்லுவெட்டியிலுள்ள ஏகாம்பரம் மாணிக்கம் என்பவர், சென்ற 8-ந் தேதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகைரதத்தில் 2 ருத்தல் அபினுடன் பிரயாணஞ்செய்தாரென, ஆனையிறவு மதுபரிசோதகர் திரு. ஆர். அப்பச்சி என்பவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி அவருக்கு6மாதச்சிறைத்தண்டனை விதித்தார். இவர் முன்னரும் கஞ்சா வைத்திருந்ததின் பேரில் சிறைத்தண்டனை பெற்றுள்ளவராம்.

கடிதம்.

## விசுவநாத சாஸ்திரியார்.

'ஈழகேசரி' ப்பத்திராதிபரவர்களுக்கு:

ஐயா,

வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலி மேற்கு வாசரும் மாட்சிமைதங்கிய நான்காம் ஜோர்ச்சு மன்னரால் இராசாவின் கணிதரென்னும் பட்டப்பெயர் அளிக்கப்பட்டவரும், நகுலமலைக் குறவஞ்சி நாடகம், வண்ணைக் குறவஞ்சி முதலிய நூல்களின் ஆக்கியோனுமாகி விளங்கிய விசுவநாத சாஸ்திரியார் அவர்களின் திவ்விய சரித்திரத்தை நான் எழுதத் தொடங்கியிருக்கிறேன். தமிழ் நாட்டினர் தங்களுக்குத் தெரிந்தவற்றை பத்திரிகை மூலமாகிலும் அல்லது நேராகிலும் அறிவித்தால் மிகவும் கடமைப்பாடுடையேன். இவரது பிறப்பு இறப்புத் தேதிகள் தனிப்பாடல்கள், கடிதங்கள், அவரைப்பற்றிய சாசனங்கள் வைத்திருப்போர் இச்சரிதம் எழுதும்வரையிலாவது கொடுத்துதவினால் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஓர் பெரிய தொண்டுசெய்தவராவார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

இங்ஙனம்

மு. இராமலிங்கம்,

வருமானவரி நிலையம்

கொழும்பு. (8-6-36)

## புற்றுநோய்க்குப் (Cancer) புதியசிகிச்சை

புற்றுநோய் வியாதியைத் தொடக்கத்திற்றானே சத்திர வைத்தியமின்றிக் குணமாக்குவதற்கு ஜேர்மனியிலே செய்யப்பட்ட ஓர் மின்சார யந்திரம் அதிக செலவுடனும் பிரயாசையுடனும் மானிப்பாய் மிஷன் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கீழைத்தேசத்தில் முதன்முதலாய் இவ்வைத்தியசாலையிலேயே இவ்வியந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது நமது மாகாண அதிபரின் மனைவியாரின்கடும்பிரயாசத்தாலும், Dr. யேம்சன் அவர்களின் விடாமுயற்சியினாலுமே அமைக்கப்பட்டதெனத் தெரியவருகின்றது. இவ்வியந்திரத்தினால் யாழ்ப்பாணத்தவர்க்கு மாத்திரமல்ல, இலங்கையர் யாபேர்க்கும் பெரும் நன்மையுண்டு.

## இலங்கையில் ஆகாயவிமானம்

இலங்கையிற்செய்யப்பட்ட முதலாவது விமானம் வருகிற ஜூலை மாதத்தில் பிரயாணஞ் செய்யுமெனவும், அது பதிவு செய்யப்பட்டிருப்பினும் பிரயாணஞ் செய்யுமுன் அரசினரின் அனுமதி பெறவேண்டுமெனவுந் தெரியவருகிறது. அதிலுள்ள சகல வேலைகளும் முற்றுப் பெற்றுவிட்டனவாம்.

## இணுவிலில் கத்திக்குத்து

இணுவிலிலுள்ள கார்த்திகேசு—பொன்னையா என்பவர், அவ்வூரிலுள்ள வி. சண்முகம் என்பவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினாரென மல்லாகம் பொலீஸ் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு 10 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றது. அபராதம் இறுக்கத் தவறினால் 2 கிழமைச் சிறைத்தண்டனையனுபவிக்க வேண்டுமாம்.


## விற்பனவு விளம்பரம்


இரும்புப் பெட்டகம் 3 × 2 × 2 அடி — அரைஇஞ்சுக்கனதி, எட்டு அந்தர் நிறை. வேண்டுவோர் பின் வரும் விலாசத்துக்கு எழுதவும்.

வ. சடாட்சரம்
தட்டாதெரு
சாவகச்சேரி

(133) 7-6-36—4

எல்லோரும்

நட்க்ஷேத்திர (ஸ்ட்டார்) அடையாளமுள்ள உருக்கினற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

பாத்திரங்களையே வாங்குகிறார்கள்!

இதனை வாங்குவது:

இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனால்,

இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும் உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!

இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்

அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பீ அன் பிறதர்ஸ்

122, மூன்றாம் குறுக்குத்தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாசிரியரும் எதிர்காலமும்

(ஆசிரிய அபிமானி எழுதுவது)

(முற்றொடர்)

7. தமிழ் மொழி வளர்ச்சி அடையவேண்டுமானுற், தமிழ்ப் பண்டிதர்களையும், ஆசிரியராகப் பதிவு செய்தல்வேண்டும். ஆசிரிய கலாசாலைகளிற், பண்டிதர்களும் தகுதி உடையவராகக் கருதப்பட்டு, எவ்வகை நிபந்தனையுமின்றிச் சேர்க்கப்படல் வேண்டும். இப்பொழுதுள்ள ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச வகுப்பு, பாலபண்டித வகுப்புக்கு 4-ம் பாடவகையிற் கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம் முதலிய பாடங்கள் முற்றுய் நீக்கப்படல்வேண்டும். நிகண்டு, செய்யுளியற்றல், தர்க்கம் முதலியன கட்டாய பாடமாக்கவேண்டும். தமிழிலக்கண இலக்கியங்களுக்கும், கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரத்திற்கு மென்ன தொடர்பிருக்குமோ? இப்பொழுதுள்ள ஆசிரியர் பலர், இப்பாடங்களை முன் படித்த வகையினுல், அவை அவர்களுக்கு இலகுவாக இருப்பகண்டு, அவற்றையே எடுத்துப், பரீட்சைகளிற் சித்தி அடைகின்றனர். இது தமிழ் வளர்ச்சிக்கு மிக இடையூருக இருக்கும். பண்டிதர்களாயிருந்தும், நிகண்டு, தர்க்கம், செய்யுளியற்றல் முதலியன தெரியாமலிருப்பது வருந்தத்தக்கதே. (இது எல்லோரையும் குறிப்பிடுவதன்று)

8. இப்பொழுதிருக்கும் பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இப்பொழுதுள்ள பாடத்திட்டம் ஒரு அளவுக்கு ஒருவனுக்கு ஒரு பொதுஅறிவைக் கொடுக்கக்கூடியதாயிருப்பினும், பலவருஷங்களாக இப்பாடத் திட்டத்தின்படி படித்த ஒருவன், தன் ஜீவனேபாயத்திற்கு ஒரு முயற்சியைக் கைக்கொள்ளக்கூடிய அளவிற்குப் போதிய அறிவில்லை. இப்பொழுதுள்ள சிரேஷ்டபாடசாலை விடுகைத் தராதரப் பரீட்சை என்று சொல்லப்படும் பரீட்சையிற் சித்தி அடைபவர், சராசரி 18, 20 வயதுடையவராக இருக்கின்றனர். இவர்கள் இந்த வயதிலே, தமது ஜீவனேபாயத்தை இட்டு ஏதாவதொரு முயற்சியைக் கைக்கொள்ள வேண்டுமேயல்லாமற், தமது பெற்றோரினதும், இன்னும் தம்மைச் சேர்ந்தோரினதும், உழைப்பிலே தமது குடும்பத்திற்குப் பாரமுடையவராக இருப்பது, முறையாகாது. ஆனுல் அப்படியான ஒரு முயற்சியைக் கைக்கொள்ளுதற்கு இப்பொழுதுள்ள பாடத்திட்டத்தின்படி பெறுமறிவு துணைபுரிவதாக இல்லை. இப்பரீட்சையிற் சித்தியடைந்தோர், எவரும் கொள்வது ஆசிரியத்தொழில் ஒன்றேயாகும். அல்லது வேறு தொழிலின்றி இருப்பதே ஆகும். ஆனுல், அவர்கள் அப்படி வேறு தொழிலில்லாமல் இருப்பது அவர்கள்மேற் பிழை அன்று; அவர்கள் கற்ற கல்வியின் பயனேயாகும். இன்னும் இங்குள்ள கல்வி முறையில் உள்ள ஓர் பெரும் பிழைஎன்னவானுல், மாணவர்களிடத்து இயல்பிலேஅமைந்துள்ள அறிவுக்கேற்ப அவ்வப்பாடங்களில் அவர்களுக்குக் கல்வி கற்பிக்காமல், அவர்கள் இயல்புக்கு முழுதும் மாறுன சில பாடங்களை அவர்களைப் படிக்கும்படி பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருப்பதேயாகும். ஒவ்வொரு பாடசாலையிலும், இவ்வுண்மையை, எல்லா ஆசிரியர்களும் பார்த்திருப்பார்கள். எனவே, பிரதம பாடசாலைகளிற் படிப்பு முடிந்தபின்பு, பிள்ளைகள் தங்களுக்கு இயல்பிலே அமைந்துள்ள சிறப்பான பாடங்களைப் படித்தற்கு ஏற்ற ஒழுங்குகள், செய்யப்படவேண்டும். அப்படியாயின், நாமிப்போ எத்தனையோ இலக்கிய இலக்கண ஆசிரியர்களையும், புலவர்களையும், ஓவிய சங்கீத விற்பனர்களையும், நம் நாட்டிலே பார்க்கக் கூடியதாயிருக்கும். நமது நாடும், பாஷை தொழில், [illegible] முன்னேற்றங்களில் ஏனைய நாடுகளுக்குக் குறைவில்லாமல் விளங்கும். அடிமை நாடுகளாகிய இந்நாடுகளி லூட்டப்படும் கல்வியானது, அடிமைகளாக இருத்தற்கேற்றதாக அமைந்திருக்கிறதேயொழிய, சுய அறிவு, சுய உணர்ச்சி ஏற்பட்டு, அதனுல், நாட்டின் கல்வி, கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியவற்றில் ஈடுபடச் செய்வதாக இல்லை. ஆங்கிலத்திற் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்கள் கூட ஒன்றில், அரசாட்சி உத்தியோகம்; அல்லது உபாத்தியாயர் வேலை; இவைகளைத்தவிர அவர்களின் உயர்ந்த படிப்பின் பலனுகவும் ஒரு பிரயோசனமும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. எனவே, வகுப்புகளுக்கேற்ற பாடங்களாயில்லாமற் பாடங்களுக்கேற்ற வகுப்புகளாயிருக்குமாயின், இப்பொழுது 5-ம் வகுப்புப் படிக்கும் ஒரு பிள்ளை இலக்கியம், சங்கீதம் என்பவற்றில் 8-ம் வகுப்பிலும், கணிதத்தில் 7-ம் வகுப்பிலும், இலக்கணம் ஓவியத்தில் 2-ம் 3-ம் வகுப்புகளிலும் படிக்கக்கூடியதாயிருக்கும். இப்படியே அதேவகுப்பிற் படிக்கும் வேறொருபிள்ளை இலக்கணம், ஓவியம், சைப்பனிஎன்பவற்றில் 8-ம் வகுப்பிலும், கணிதம் சங்கீதம் என்பவற்றில் 2-ம் 3-ம் வகுப்புகளிலும் படிக்கக்கூடும். எனவே, இம்முறையினுல், ஒவ்வொருவரும் தமக்கு வாய்த்த ஏதாவதிரண்டொரு விஷயங்களில் மிகச் சிறந்தவர்களாகித் தமது ஜீவனேபாயத்திற்கு ஒரு மார்க்கம் தேடிக்கொள்வார்கள். 5-ம் வகுப்போ, அல்லது ஒருவகுப்பைக் கூட்டியோ, குறைத்தோ, கட்டாய கல்விக்குரிய வகுப்பெல்லையாக வைத்துக்கொண்டு, பின்னுல், இவ்விதமான ஒரு முறையைக்கொள்ளுதல் மாணவர்களுக்கு இரண்டுவிதமான நலன்களைக் கொடுக்கிறது. ஒன்று: அவர்கள் கல்வியைக் கற்குந்தோறும் விரும்பிக் கற்பார்கள். மற்றென்று: பிற்காலத்தில் அவர்கள் தங்களுக்குள் ஓர் ஜீவனேபாயத்தைத் தேடிக்கொள்வதற்கு ஏதுவாயிருக்கும்.

9. பகிரங்கப்பரீட்சை: இப் பகிரங்கப் பரீட்சைகளிலும் நமது கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பது, மிக அவசியமாகிறது. ஏனெனில் சில பரீட்சைகளில் சில வினுப் பத்திரங்களிலுள்ள வினுக்கள் பிழையாகவே காணப்படுகின்றன. இதற்கு அத்தாட்சியாகச் சில கூறுதும்:—

1. 1935-ம் ஆண்டு ஆடிமாதம் நடந்த கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரபரீட்சையில் ஆரம்பகணித வினுப்பத்திரத்தில் 11-ம் வினுவின் (1) பின்வருமாறுளது:—“ஓர் முக்கோணத்தின் ஒரு சோடி கோணங்களின் கூட்டுத்தொகை 105°; இன்னொருசோடி கோணங்களுக்குள்ள வித்தியாசம் 4% இம்முக்கோணம் துவிசமபுயமுடையது என நிரூபிக்க.” இதில் (40°) என்றிருப்பது (45°) என்றிருந்தாற்றுன் வினு சரியாயிருக்கும்.

2. அதே வருடம் சித்திரை மாதத்தில் நடந்த சி. பா. த. ப. பரீட்சையில் ஆரம்பகணித வினுப்பத்திரத்தில் 6-ம் வினுவில் (ஓர் வட்டத்தின் 'பரப்பு = 3. 1412 × ஆரம்என்க.) என்றொரு பகுதியிருக்கிறது. இதில் (ஆரம்) என்றிருப்பது (ஆர 2) என்றிருத்தலே சரியாகும்.

3. இவ்வாண்டு நடந்த இதே பரீட்சையில் 6-ம் வினுவிற்கு ஒரே ஒரு விடை காணக்கூடியதாக வினுவிருக்கவில்லை. அதன்விடை பலவாகவிருக்கலாம்.

இவ்விதமான பிழைகளை நாம் எடுத்துக்காட்டுவதால், இவ் வினுப்பத்திரங்களின் ஆக்கியோன்களையோ அல்லது அதன் மொழிபெயர்ப்பாளரையோ குறைகூற வந்தேமல்லேம். பின் எற்றிற்கோவெனின், பரீட்சையிற் சித்தியடைதலையே இலக்காகக் கொண்டுள்ள மாணவர்கள் பிழையான வினுக்களினுலும், ஐயப்பாடுள்ள வினுக்களினுலும் இடர்ப்பட்டு பரீட்சையிற் றவறுதலுங் கூடும். இதனுல் பாடசாலைகளுக்கும் இழுக்குண்டாகும்.

எனவே, இவ்வித குறைபாடுகளை இதற்குரிய மேலதிகாரிகட்கு எடுத்துக்காட்டி, இத்தன்மையன இனி மேலாகுதல், எவ்வினுப்பத்திரத்திலும் நிகழாதிருக்க வேண்டிய முயற்சி செய்தல் வேண்டும். (தொடரும்)

## கொழும்பு விவேகானந்த சபையாரால் யுவஞு மார்கழிமூ நடத்தப்பட்ட அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் விசேஷ பரிசு பெற்றவர்கள்.

### ஆங்கில வித்தியாசாலைகள்

**சுன்னுகம் ஸ்ரீ இராமநாதன் கல்லூரி**

ப. உருக்குமணி முதலாம் பரிசு. கீழ்ப்பிரிவு.

க. வேதநாயகி முதலாம் பரிசு. மத்தியபிரிவு.

**தெல்லிப்பழை மகாஜன வித்தியாசாலை**

வ. கதிரவேலு (இரண்டாம் பரிசு) கீழ்பிரிவு.

**அளவெட்டி ஆங்கில வித்தியாசாலை**

T. கைலாசபதி இரண்டாம் பரிசு. மத்தியபிரிவு.

### தமிழ் வித்தியாசாலைகள்

**காரைநகர் சுந்தரமூர்த்திநாயனுர் வித்தியாசாலை.**

க. இராசரத்தினம் இரண்டாம் பரிசு கீழ்ப்பிரிவு.

செ. பொன்னம்மா மூன்றும் பரிசு. கீழ்ப்பிரிவு.

மு. சின்னுச்சி இரண்டாம் பரிசு மேற்பிரிவு.

தி. சுந்தரம் மூன்றும் பரிசு மேற்பிரிவு

**வட்டுக்கோட்டை தச்சதெருப் பாடசாலை**

தி. நவமணி முதலாம் பரிசு. கீழ்ப்பிரிவு

**திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை**

சி. சிவசுப்பிரமணியம் இரண்டாம் பரிசு. மத்தியபிரிவு.

க. செல்லையா முதலாம் பரிசு மேற்பிரிவு.

**பண்ணகம் மெய்கண்டான் பாடசாலை.**

சு. முருகேசு முதலாம் பரிசு. மத்தியபிரிவு.

## பெயர் மாற்றும் அறிவித்தல்

17-5-36 வரையும் எனக்கு வழங்கிய பெயர் வயிரமுத்து—நல்லையா. எனது பிறப்புச் சாட்சிப் பத்திரப் பதிவுப் பெயர் வயிரமுத்து—வேலுப்பிள்ளை. ஆகையால் இனி 18-5-36 தொடக்கம் எனது பதிவுப் பெயராகிய வயிரமுத்து—வேலுப்பிள்ளை யென்பதே எனது பெயராகும் என்று இதனுல் யாவருக்குந் தெரிவிக்கிறேன்.

வயிரமுத்து—வேலுப்பிள்ளை,
அல்வாய் மேற்கு 18-5-36

(128) 31-5-36—3.


## தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள்



**இரணைவாளி, சொரிவாளிச் சூத்திரங்கள்**

இவைக்குரிய ரேதைகள் வாளித்தகடுகள் இரும்புத்திராந்திகள், துலாக்களும், மற்றும் சாமான்களும்

கையினுல் இறைக்கும் செமி ரோற்றறி பம்புகள், இவைக்குரிய குழாய்கள் முடக்குகள், பெண்டுகள் மறுசாமான்களும், தண்ணீர் நிரப்புவதற்குரிய தாங்கிகளும் கைவசம் இருக்கின்றன.

உங்கள் தேவைக்கேற்றபடி எல்லாம் பூட்டிக்கொடுக்கத் தயாராயிருக்கின்றேம்.

*Cheapest Prices!* *Prices on Application*

**CEYLON HARDWARE STORES**
**VALVETTITURAI.**
(வல்வெட்டித்துறை)

*Head Office:*- "Jubilee Buildings"
Old Moor Street, COLOMBO




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நவீன கோவலன்

(திரு. எ. சி. இராசையா)

(முற்றொடர்)

செல்வி மனோன்மணி தனது சிறு குடிசையில் விசனமே உருவெடுத்தாற் போன்றிருந்தாள். ஆயினுந் தனது கடமைகளிற் கவனஞ் செலுத்தாதிருக்கவில்லை. தான் முழுமனதோடுங் காதலித்துவந்த மனோகரன் வேறொரு பெண்ணைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டது அவளுக்கு உண்மையிற் பெரிய கவலைதான். அவன் தன்னைப் பாரியாக்கிக் கொள்வானென்ற திடமான நம்பிக்கையவளுக்கிருந்திருக்கவில்லையாதலால் அவள் ஏமாற்றமடைய ஏதுவில்லாதிருந்தது. மனதிற்குள் வருத்தந்தான். வகுத்தான் வகுத்தபடியே சகலமும் நடைபெறவேண்டிய நிருபமிருக்கையில் வருந்தித்தான் ஆவதென்ன? பக்குவதசையடைந்த பராயந்தொட்டுத் தனதுள்ளத்தைக் கவர்ந்த கள்வன்மீது அவளுக்கேற்பட்டிருந்த காதல், அவனையுமறியாமல் ஒருபுறம் மலைபோல வளர்ந்துகொண்டுதான் போகிறது. மறுபுறமாய் வியாகூலப்பெருக்கு அவளைச் சூழ்ந்துநின்று வதைத்து வதைத்து ஆழ்த்திக்கொண்டிருக்கிறது. அவளின் மனோநிலையை யாரறியவல்லார்! அறிந்துதான் ஆவதென்ன? மனோகரன் மணம் முடித்துக்கொண்டபின் சொற்ப சம்பளம் பெற்றுவரும் ஒரு குமாஸ்தாவை மனோன்மணிக்கு வரனாக வரிக்க அவள் பெற்றோர் முன்வந்தனர். மனோன்மணி தான் இல்வாழ்க்கையில் ஈடுபடுவதில்லையென்று ஒரே பிடிவாதமாய்ச் சாதித்தனள். அதுகாரணமாக அவள் பெற்றோர் மனமுடைந்தவர்களானார்கள். மனோகரனு மிச்செய்தியை யறிந்து மட்டற்ற மனத்துயரடைந்து வருந்தினான். தனது இன்னுயிர்க் காதலன், கொண்டபெண்டின் குறும்புத்தனத்தாற் கொடிய துன்ப துயரங்களை யனுபவித்துவருகிறானென்ற செய்தி மனோன்மணியின் செவிக்கெட்டியது. அதைக் கேட்ட நேரந்தொடக்கம் நெருப்பிடைப்பட்ட புழுவைப்போன்று துடிக்கலானாள். அனலிடு மெழுகென அவளுள்ளம் உருகியது. அவனனுபவிக்குந் துன்ப துயரங்களையெல்லாம், தானே யனுபவிப்பது போன்று வருந்தினாள். தனது காதலனைத் துன்புறுத்துங் காரிகைமீது அவளுக்குக் கோபமுங் குரோதமு மொருங்கேயெழுந்தன. அவள்மீது தான் குரோதங் கொள்வதால், தனது காதலனுக்கேற்படும் பயனெதுவுமில்லையென வுணர்ந்து, அப்பெண்மணியைத் திருத்தி, மனோகரனுக்கு ஆனந்தத்தையும் மனமகிழ்ச்சியையும் மெய்யின்பத்தையு மவள்மூலமளிக்கவேண்டுமென நிர்ணயஞ் செய்தாள். அது எப்படியாகும்? அனேக புத்திமதிகளைப் புகட்டி அடிக்கடி அவளுக்கு அநாமதேயக் கடிதங்களை யெழுதிவிடுத்தனள். அவைகளில் பெண்கள் புருஷருக்கு அடங்கி நடக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும், தங்கள் உயிரினும் பெரிதாய் அவர்களை மதித்து அன்பு பாராட்டவேண்டிய கடமையைப்பற்றியும், அவர்களைக் கண்கண்டதெய்வமாய்க் கொண்டாடவேண்டுமென்பதைப்பற்றியும், கஷ்டதுன்பங்கள் மத்தியில் அவர்களுக்கு ஆறுதலளிக்கவேண்டிய முறைகளைப் பற்றியும், இன்னும் பல நீதிகளை யொழுக்கங்களைப் பற்றியும், விஸ்தரித்தெழுதிக்கொண்டு வந்தாள். சுந்தரதேவிக்குத் தமிழ்ப்பாஷை தெரிந்தாற்றானே அவள் அவைகளை வாசித்துணரமுடியும்! அக்கடிதங்களை அவள் அசட்டையாய் எங்கேயாவது வைத்துவிடுவாள். மனோகரன் அவைகளையெல்லா மெடுத்து வாசித்துவிட்டுக் கவனமாக வைத்துக்கொள்வான். அவைகள் யாரால் எழுதப்படுவனவென்பதை அவன் நாளடைவிற்றெரிந்துகொண்டான். அப்போது அவன் மனநிலைமை யெவ்வாறிருந்திருக்கக்கூடுமென்பதை நேயர்களே எளிதில் விளங்கிக்கொள்வார்கள். தானெழுதிய கடிதங்கள் சுந்தரதேவியின் மனதில் நல்லுணர்ச்சியை யேற்படுத்தவில்லையென்பதைத் தெரிந்தபோது, தன் காதலனைப்பற்றிய விசனம் மனோன்மணிக்குப் பெருகத்தொடங்கியது. கடமைகளிற் கருத்தற்றாள். மனோவியாதியாற் பீடிக்கப்பட்டாள். ஊணுறக்கமின்றித் துரும்பாக மெலியலானாள். அந்த நிலைமையிலும், சுந்தரதேவியை நல்வழிப்படுத்தித் தன் காதலனை யின்பவாழ்க்கையில் வழிநடத்திக்கொள்வதற்கு வேறேதாவது உபாயந் தட்டுப்படுமாவென்று சிந்தித்துக்கொண்டே யிருந்தனள் எம் செல்வி நல்லாள்.

மனோகரன் தான் உயிருள்ள மட்டுஞ் சுந்தரதேவியுடனிருந்து நித்தியவேதனையை அடையத்தான் வேண்டுமாவென்று தனக்குள் எண்ணமிடலானான். நவீன நாகரீகத்தில் ஆசையை வைத்ததாகிய அந்த ஒரே ஒருகுற்றத்திற்காக, உயிருள்ளமட்டும் வருந்தவைப்பது தெய்வத்திற்கடுக்குமாவென நொந்தான். கடைசியாக அவன் ஒருமுடிவிற்கு வந்தான். அந்தத் தகுதியற்ற பந்தத்திலிருந்து எதுவிதமுந் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணியவனாய், அவ்விஷயத்தி லவசர முயற்சிகளெடுக்கலானான். பகீரதப்பிரயத்தனங்களெடுத்துக்கொண்டான். அவனது தீவிரமுயற்சிகளிற் பலனில்லாதிருக்கவில்லை. சுந்தரதேவி தனது பழைய நண்பனொருவனுடன் அந்தரங்கநட்பு வைத்திருந்தவிஷயம், மாறுவேடம் பூண்டு, துப்பறியுந்தொழிலிலீடுபட்டுக் கொண்டிருந்த மனோகரனுக்கு முதலாவதாகத் தெரியவந்தது. அதன்பின் அவன் வேட்டைநாய் போல் மணம்பிடித்து, பக்காத்திருடனைப்போற் பதுங்கிப் பதுங்கித் திரிந்து அவர்களைக் கவனிக்கலானான். ஒருமாத காலத்திற்குள் அவன் அவ்விருவரையும் நாலைந்து படம்பிடித்தான். அவைகளில் மூன்று அவர்கள் தனிமையிற் சோடியாய்வீற்றிருந்து சல்லாபிப்பது. நாகேந்திரமென்ற அந்தவாலிபன் மடிமீது, சுந்தரதேவியிருந்து அவனுக்கு முத்தங்கொடுப்பது ஒன்று. கடைசியாய் எடுக்கப்பட்டபடத்தை அவன் நமக்குக் காண்பிக்கவில்லை. அதிலேதோ விசேஷ விபரீதமிருப்பதென்பது தான் நமது யூகமாகும். மனோகரன் வெகு பொறுமையுடனிருந்து யாவையுந் திருப்திகரமாய்ச் [illegible] முடித்துக் கொண்டபின், [illegible]தைக்கலைத்துக் கொண்டு வழக்கம்போலத் தன் வீட்டிற்குச்சென்றான். அப்போது இரவு சுமார் 8 மணியிருக்கும். சுந்தரதேவி வெளி 'விறாந்தை'யிலிருந்த சாய்மான நாற்காலியொன்றிற் சாய்ந்தவண்ணமிருந்தனள். மனோகரன் அவள்முன்பு சென்று, ஒவ்வொரு படமாக அந்தப் புகைப்படங்களையெல்லாம் அவளுக்குக் காண்பித்தனன். அவளதைச் சற்றேனுஞ் சட்டைசெய்யாதவள்போல், அவ்விடமிருந்தெழுந்து அறையொன்றிற்குட் சென்றுவிட்டாள். ஒரு இராக்ஷசச் சிரிப்பு! அதைத்தொடர்ந்து அட்டகாசமான உறுமலொன்று! இந்தச் சேஷ்டைகள் மனோகரனிடமிருந்து வெளிப்பட்டன. அடுத்தபடியாய் அவன் அவளைத் தூரத்து அறைக்குட்சென்று, அவளது கூந்தலைப்பற்றியிழுத்து வந்து அவளை வெளியே தள்ளி, ஓர் உதைகொடுத்து, "ஓடு! உன்வீட்டைநாடி யோடிப்போய்விடு. உயிர்வேண்டாமாயின் எனதில்லம் நாடு. நாளைக்கு நல்லவேளைபார்த்து நாகேந்திரனை நாயகனாக்கிக்கொள்ளத் தவறிவிடாதே. உன்னைப்போன்ற பெண்களிருக்குமட்டும் கூற்றுவனுக்கு வேலை சுலபந்தான்" என்று கோபாவேசத்துடன் குமுறினான். அவள், 'தலைதப்பியது தம்பிரான்புண்ணியமென்று நினைத்துக் கொண்டு, அரைமைல் தூரத்திற்கப்பாலுள்ள தன் மாளிகையைநோக்கி விரைந்து சென்றனள். அடுத்தநாள் விவாகரத்து வியாஜ்ஜியம் மனோகரனாற்றொடரப்பட்டது. இரண்டுமாதங்களின் பின் அவ்வழக்கு விளங்கப்பட்டு, புகைப்படங்களின் சாட்சியைமுக்கியமாகக்கொண்டு, கஷ்டமின்றிக் கல்யாணந் தள்ளும்படியானது. நாகேந்திரன் அவளை மணக்க மறுத்துவிட்டான். "மனோகரனின் மனைவியாயிருந்துகொண்டு, அவனையேமாற்றிவிட்டு, என்னுடன் அந்தரங்கநட்பு வைத்திருந்த நீ, என்னை மணம்புரிந்துகொண்டபின் இன்னொருவனுடன் கள்ளக்காதல் கொள்வது, நடவாத காரியமாகுமா? உன்பணத்தைக் கொண்டுபோய்க் குப்பையில்வீசு. உன்னையென் மனைவியாக ஒருபோதுமே யேற்றுக்கொள்ளமாட்டேன்" என்று கூறி அவளை நிராகரித்துவிட்டான். அவள் தற்சமயம் ஓர் தனக்காரத்தசியாயிருந்து வருகிறாளென வதந்தியொன்று உலாவுகிறது.

வியாஜ்ஜியத்தில் மனோகரன் ஜெயமடைந்தது தான் தாமதம். ஓடினான்! எங்கே? வேறெங்கே! மனோன்மணியின் குடிசையை நோக்கி ஒரு கடிதக்கட்டுடன் ஓடினான். முற்றத்திற்போனதும், "மனோன்மணீ! என்காதலிளங்குயிலே!! இக்கசடனைமன்னித்து உன் திவ்வியகாட்சியை யளிப்பாயாக!!!" என்று இரந்துகூறி நின்றான். சலீர்; சலீரெனச் சிலம்பொலி புலம்பியார்ப்ப, தலையைக் கீழேகவியவிட்டு, அன்னமென நடந்துவந்து அவன்முன் அம்மானினம்பேடு பிரசன்னமாயினள். சித்தப்பிரமை கொண்டவன்போல், அவன் மனோன்மணியண்டை யோடிப்போய், அவளைக் கட்டியணைத்து ஆலிங்கனஞ்செய்து, ஆனந்தபாஷ்பஞ்சொரிய அவளுக்கு முத்தமாரி பொழிந்து கூத்தாடினன். தான் செய்த பிழைகளெல்லாவற்றையும் பொறுத்துத் தன்னை நாயகனாக ஏற்றுக்கொள்ளுமாறு பெரிதுமிறைஞ்சி வேண்டிக்கொண்டான். அவள் சுந்தரதேவிக்கெழுதிய கடிதக்கட்டை யவளிடங்கொடுத்து, "நீ என்மீது வைத்துள்ள தெய்வீககாதலை இக்கடிதங்கள் மூலமாகவே நான் அறியலானேன். கண்மணீ! உன்னை நான் என்பெண்தெய்வமாகவே சதா கொண்டாடுவேனென்பதை உறுதியாய் நம்புவாயாக! உனது அப்பழுக்கற்ற குணங்களே என் குபேர செல்வம். களங்கமற்ற உனதுமெய்க் காதலே எனது சீதனம். என்காதற் களஞ்சியமே! விலைமதிக்கமுடியாத மாணிக்கமொன்றை நான் கண்டடைந்தேன். அதனால் நான் அடையும் ஆனந்தத்திற்கிணையாய் வேறெதையும் ஒப்பிடமுடியாது. எனக்கு உலகாநுபவத்தை யூட்டிய தனிப்பெருஞ்சிறப்பு உனக்கேயுரியது" என்று கூறி ஆனந்தத்தாண்டவமாடினன். மனோன்மணி மௌனநிலையிலிருந்துகொண்டு பேரின்பக் கண்ணீர் பெருக்கினள். சில நாட்களின்பிறகு அவர்களின் திருமணவைபவம் இனிது நிறைவேறியது. மனோன்மணி தன்கணவனைக் கண்கண்ட தெய்வமாய் மதித்துக் கொண்டாடி வந்தனள். குடித்தன விரம்படைத்த குணமுள்ளதாரத்தைப் பெற்றதால், மனோகரனின் சீவியம் ஒளிபெற்றது.

மாளிகையைச் சூழ்ந்துள்ள மாபெரும் பூஞ்சோலை, அதில் இருகாதலர், அதுவும் விவாகமாகிய காதலர். ஆனந்தமயமாயும் அன்பின் சொரூபமாயும் விளங்குமக் காதலரிருவரும் அந்த நந்தனவனத்திலிருந்து இன்பமாய் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார்தெரியுமா? அவர்களே நமது மனோகரனும் மனோன்மணியுமாவர். 'தத்தக் கப் பித்தக்க' வென்று தாண்டித் தாண்டி அவர்கள்முன் ஆண்குழந்தையொன்று சிரித்த முகத்துடன் வந்துகொண்டிருக்கிறது. இருவரும் அதற்கு நேராக ஓடிச்சென்று, அதன் கைகளை யொவ்வொன்றாய்ப் பற்றிக்கொண்டு, ஏககாலத்தில், "எங்கள் செல்வம்!" என்று மகிழ்ச்சி ததும்பக் கொஞ்சிக் கூறி, அவர்கள் குழந்தையாகிய அந்தப் பாலனுக்கு மாறி மாறி முத்தமீந்து உவகைபூத்தனர். முத்தத்தாலேற்பட்ட ஆக்கினை பொறுக்கமுடியாமல் செல்வன் சிரித்தபடி விட்டான் அடி! ஒன்று அப்பனுக்கு. மற்றது அம்மைக்கு. ஒரே சிரிப்பு! ஒரேயானந்தம்!! ஒரேயார்ப்பரிப்பு!!! "இல்லறமல்லது நல்லறமன்று" என்னே இல்லற மாண்பு!

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

1937-ம் வருஷ [J. S. C.] தமிழ்

இலக்கியக் குறிப்பு.

(கோபால் புதிய தமிழிலக்கியக்கோவையும் நாற்பெருவள்ளல்களும்)

212 பக்கங்கள். விலை சதம் 80.

இது சென்னைச் சர்வகலசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப் பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை திரு. ந. சுப்பையாபிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. இதில் பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள்நயம், அணிநயம் முதலியவற்றை விளக்கும் குறிப்புரை முதலாயின அடங்கியுள்ளன.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்.

(112) 19-4-36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராயவேலூர்
# சுவாமி திருவேங்கடானந்தர் ஜயந்திவிழா.

வேலூர் சுந்தரேஸ்வர சுவாமிகோயில் வீதி திருவேங்கடானந்தர் ஆச்சிரமத்தில் தாது ஞு வைகாசி மீ 18 உ (3-6-36) புதன்கிழமைவிசாகத்தன்று ஆச்சிரமத்தில் மங்களவாத்தியம் காலை 4 மணிக்கு ஆரம்பித்து ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராலயத்தில் ஸ்ரீ நடராஜ பெருமானுக்கு விசேட அபிஷேகமும் பாவாடை நிவேதனமும் 8 மணிக்கு வீதி உலா உற்சவமும் ஆச்சிரமத்தில் காலை 8 மணிமுதல் 11 மணி வரையில் கிராமபோன் பிளேட் பிரக்கியாதி ஸ்ரீமான் கோவிந்த ராமானுஜ பாகவதர் அவர்களாலும், ஸ்ரீமான் செந்தாமரைக்கண்ணன் அவர்களாலும் இன்னிசைக் கருவிகளுடன் பிரபந்த பன்னிசைச் சேவையும் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் மாலை 3 மணிமுதல் 5 மணிவரையில் ஸ்ரீமான் தேவார இராமலிங்கமுதலியார் அவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவார பாராயணமும் மாலை 5 மணிக்கு ஷெ ஆச்சிரமத்தில் பொதுக்கூட்டம் கூடி ஸ்ரீலஸ்ரீ வேதாந்த சித்தாந்த சமரசரும் வடமொழி தென்மொழிகளில் வல்லுநரும், வேதமொழி பெயர்ப்பாசிரியருமாகிய காசிவாசி சிவானந்தயதீந்திர சுவாமிகள் அக்கிராசனம் வகித்து தலைவர் வரவேற்பு ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அவர்களாலும் மேற்படி ஆச்சிரமத்தின் நடவடிக்கை வெளியீடு காரியதரிசிகளாலும் வாசிக்கப்பட்டன. பிறகு வித்வான் பாலகவி சுப்பிரமணியஐயர் அவர்களால் தமிழின் பெருமையும், புதுக்கோட்டை சமஸ்தான சமஸ்கிருத கல்லூரிப் புரபொசர் ஸ்ரீமான் மஹாதேவன் M. A., அவர்களால் ஆத்மவிசாரணையும், ஸ்ரீமதி சா. வி. உ. வெ. ஆழ்வார் ராமாநுஜநாயகி அம்மையாரால் ஆழ்வார்களின் தமிழ்ச்சுவையும், திருவையாறு அறுபத்துமூவர் மடாதிபதிகளான ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசுவாமிகளால் சேக்கிழார்பெருமையும் உபன்யசிக்கப்பட்டும், தமிழ் அபிவிருத்தியின்பொருட்டுத் திருவேங்கடானந்தர் ஆச்சிரமத்தில் நடந்த போட்டிப் பரீக்ஷையில் கவிதா சக்தியில் தேர்ந்த T. A. அப்புகவுண்டருக்கு ஓர் தங்கப் பதக்கமும், மனனசக்தியில் தேர்ந்த B. J. குளோரிதாஸ் என்பவருக்கு ஓர் தங்கமெடலும் பரிசளிக்கப்பட்டும், சுவாமி திருவேங்கடானந்தருக்கு வாழ்த்துப்பாக்கள் சமர்ப்பித்தும் தலைவர் முடிவுரைகூறியும் வந்தனோபசாரம் செலுத்தியும் மங்களத்துடன் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுபெற்றது. (4-6-36) குருவாரம் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டம் ஷெ திருவேங்கடானந்தர் ஆச்சிரமத்தில் வியாழக்கிழமை மாலை 5 மணிக்குத் திருவையாறு அறுபத்துமூவர் மடாதிபதிகளான ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசுவாமிகள் தலைமையின்கீழ் ஸ்ரீமதி சா. வி. உ. வெ. ஆழ்வார் ராமானுஜநாயகி அம்மையாரால் தமிழரும் தமிழர் கடமையும் என்பதைப் பற்றி வெகு விமரிசையாக உபன்யாசம் செய்யப்பட்டுத் [illegible]டிவுரையில் திருவள்ளுவர் பெரு[illegible]பேசித் திருக்குறள் பொழிப்புரையுடன் உள்ள புத்தகங்களை வாங்கிப் பல அன்பர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

ஷெ ஆச்சிரமத்தில் காலை மாலைகளில் மாணவ மாணவிகளுக்குச் சங்கமூர்த்திகளால் ஆத்மவிசாரணைப் பாடங்கள் பிரதி தினமும் நடந்துவருகின்றன.

### அறிக்கை.

தமிழபிவிருத்தியின்பொருட்டு அடுத்தவருடமும் 1937-ம் ஞு பிப்ரவரிமீ 20உ சனிக்கிழமை பகல் 2 மணிக்கு ஷெ வேலூர் சுவாமி திருவேங்கடானந்தர் ஆச்சிரமத்தில் தமிழ்க் கவிதைப்போட்டியும் மனனப்போட்டியும் நடைபெறும். பரீக்ஷைக்குரியார் எப்பாலாராயினும் எம்மதத்தினராயினும் எவ்வூரில் எப்பள்ளியில் மாணவராயினும் தக்கோராவர். அடுத்த வருடப் பரீக்ஷைக்காக ஏற்படுத்தியிருக்கும் பகுதிகள் :-

**கவிதைப் பரிசு:-** பரீக்ஷாதிகாரிகளால் பரீக்ஷை காலத்தில் கொடுக்கப்படும் பொருளை வைத்து ஒருவிருத்தம்பாடவேண்டும்.

**மனனப் பரிசு:-** திருவேங்கடமாலை (21 முதல் 60 வரை) பாட்டுகளும், திருக்குறள்-அறத்துப்பால் முழுதும் மனனத்துடன் விசேஷ உரையும் பரீக்ஷிக்கப்படும்.

மாணவர்கள் பிரவேசக் கட்டணம் 4 அணு செலுத்துவதுடன் தங்கள் மனுவை முழுவிலாசத்துடன் 1937 ஞு ஜனவரி மீ 15 திகதிக்குள் ஷெ ஆச்சிரம காரியதரிசி அவர்களுக்கு அனுப்பிவிட வேண்டும். தங்கள் கல்விச்சாலைத் தலைவரிடமிருந்து தாங்கள் மாணவரென ஓர் குறிப்புச் சீட்டும் மனுவுடன் அனுப்பவேண்டும். கடி.

## திருவள்ளுவர் திருநாள்

நிகழும் தாது ஆண்டு வைகாசித்திங்கள் 22-ம் நாள் (4-6-36) வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு, திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்தமண்டபத்தில் வைத்து தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் ஆதரவில் 'திருவள்ளுவர் திருநாள், சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான அறிஞர்களும் பிறரும்வந்து கூடியிருந்தார்கள்.

அவ்வமயம், திருநெல்வேலி ஜில்லா ரிஜிஸ்திரார் உயர் திரு. S. ஞானதேசிக பிள்ளை அவர்கள். B. A. தலைமை தாங்கினார்கள். நெல்லையப்பர்கோயில் தேவார பாடசாலை மாணவிகளால் கடவுள் வாழ்த்துக் கூறப் பெற்றபின், தலைவரவர்கள் முன்னுரையாக திருவள்ளுவரின் பெருமையைப் பற்றிக் கூறினார்கள். பின்னர் உயர்திருவாளர்கள் திருவிற்கோலம் ஆசிரியர் K. வைத்தியநாத முதலியாரவர்கள் "திருவள்ளுவரும் சைவசித்தாந்தமும்" என்னும் பொருள்பற்றியும், சாத்தூர் வக்கீல் T.S கந்தசாமி முதலியாரவர்கள் B.A. "திருவள்ளுவரின் கவிநயம்" என்னும் பொருள் பற்றியும், சிந்துபூந்துறை பென்சன் தாசில்தார். மா. வே. நெல்லைப்பபிள்ளையவர்கள், B. A. "திருவள்ளுவர் திறக்குறள் இக்கால வாழ்க்கைக்கு எவ்வாறு பயன்படும்" என்னும் பொருள் குறித்தும் வள்ளுவரின் குறள் முதலியவற்றை மேற்கோள்களாக எடுத்துத் தக்க ஆகாரத்துடன் கூறி கேட்டோர் யாவரும் மகிழுமாறு பேசினார்கள்.

தலைவரவர்கள் தமது முடிவுரையில் திருவள்ளுவர் எந்நாட்டாரும் எம்மதத்தினரும் எம்மொழியினரும் பொன்னேபோல் போற்றுந்தகைமைத்தாய் தமது நூலைச் செய்து நமக்கருளிய பெருங் கருணையை வியந்து கூறி, அவரியற்றிய நூலை இவ்வளவு பெருமையாகக் கொண்டாடுதற்கு உலகிற்குப் பெரும் பயனளிப்பக் கருதித் தாமியற்றிய நீதிநூலில் நடுநிலை நின்று ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்து செவ்விதிற் கூறியதே தக்க காரணமாகும் எனவும் யாவரும் தங்களறிவிற்பட்டதை நன்கு ஆராய்ந்து உலகிற்குப் பெரும் பயனளிக்கு முறையில் செய்யும் செயலே பயன்தரக் கூடியதெனவும், அழுக்காறு அவாவெகுளி முதலிய தீய சொற்களையும், களவு, சூது, கொலை முதலிய தீய செயல்களையும் அறவே நீக்கி அன்பும் அருளும் பொருந்தியவர்களாக ஒழுகுவதே மக்கள் கைக்கொள்ளக் கூடியதெனவும், அவ்வழியில நின்றார்க்கே இறைவனருள் முற்றும் கூடுமெனவும், அல்லார்க்கு வெறும் ஆலய வழிபாடு முதலிய அறச்செயல்களால் யாதொரு பயனும் விளையாவெனவும் கூறி, திருவள்ளுவரருளிய நெறியைக் கடைப்பிடித்து நாம அவ்வழியில்நிற்போமாயின் எந்நாளும்இன பமடையலாம் எனவுங்கூறி முடித்தார்கள்.

முடிவில் தென்னிந்திய சைவ சித்தாந்தசங்கத்தின் தலைவர் உயர் திரு. மா, வே, நெல்லையப்பபிள்ளையவர்கள் தலைவரவர்களுக்கும் விரிவுரையாளர்கட்கும் மலாமாலை சூட்டிநன்றிகூறி, இக்கூட்டத்திற்கு வந்து சிறப்பித்த எல்லோருக்கும நன்றி கூறிய பின்னர் இரவு 9-30 மணிக்கு இக்கூட்டம இனிது நிறைவேறியது. கடித.

## வலிகாமம் வடக்கு
## ஆங்கில ஆசிரியர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் ஆதரவின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நிகழும் வைகாசிமீ 22-ந் உ (4-6-36) மாலை 6½ மணியளவில் சங்கஅக்கிராசனர் ஸ்ரீமான் கா. சின்னப்பா அவர்களின் தலைமையின்கீழ்தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது. அத்தருணம் அரசாங்க சபை அங்கத்தவர் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை B. A, B. L. அவர்கள் "ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கல்விமுறை" என்னும் பொருள்பற்றியும், வித்தியாதரிசி ஸ்ரீமான் S. U. சோமசேகரமவர்கள் "வித்தியாசாலைநேரமொழிந்த நேரங்களில் கற்கத்தகும் கல்வி" என்னும் பொருள் பற்றியும் மிகவும் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். அதன்பின் அக்கிராசனர் சொற்பொழிவாளர்கள் குறிப்பிட்ட பிரதானமான விஷயங்களைப் பற்றிச் சில குறிப்புகள் கூறினர். ஸ்ரீமான் I. P. துரைரத்தினம் B. Sc அவர்களும், ஸ்ரீமான் ச. சிதம்பரப்பிள்ளை ஆசிரியரவர்களும் பிரசாரகர்களுக்குச் சங்கத்தின்பேரால் துதி கூறியபின சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் தி. செல்லத்துரை அவர்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்தோருக்கும், மகாஜன வித்தியாசாலை முகாமைக்காரருக்கும் முறையே சபையைச் சிறப்பித்ததற்காகவும், வித்தியாசாலை மண்டபத்தைக்கொடுத்துதவிக் கூட்டத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்ததற்காகவும் நன்றி கூறினர். அதன்பின் கூட்டம் 9 மணியளவில் நிறைவெய்தியது. கடித.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் மயிலிட்டி தெற்கு வே. தம்பிப்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1935-ம் ஆண்டு

| இலக். | மீ | உ | ரூ. | ச. | ஊர் பெயர் விபரம் |
|---|---|---|---|---|---|
| 7405 | பெப். | 23 | 10 | 00 | மயிலிட்டிதெற்கு முருகேசு தம்பிமுத்து பொன். இ.கல். தோடு சோடி ஒன்று |
| 7416 | ,, | 24 | 30 | 00 | மயிலிட்டி கந்தப்பிள்ளை சின்னப்பா பொன் கைவிரல் மோதிர 1 சிறுபிள்ளைக் குண்டுச்சங்கிலி 1 இள. பொன் அச்சரக்கூடு 1 |
| 7454 | மார். | 2 | 10 | 00 | கட்டுவன் கைலாயர் கற்பகம் இள. பொன் நாட்டுக்கடுக்.சோ 1 |
| 7486 | ,, | 8 | 5 | 00 | கட்டுவன் கதிர்காமர் பொன்னையா பொன் இ.கல் தனிப்பதக்.1 |
| 7537 | ,, | 15 | 15 | 00 | தெல்லிப்பழை கந்தப்பர் தனிகாசலம் பொன் அச்சரக்கூடு 1 |
| 7550 | ,, | 17 | 8 | 00 | தையிட்டி மாலாணி ஆறுப்பிள்ளை பொன் அச்சரக்கூடு 1 |
| 7555 | ,, | 18 | 15 | 00 | கட்டுவன் முருகன் வல்லி பொன் அச்சரக்கூடு 1 |
| 7592 | ,, | 25 | 5 | 00 | மயிலிட்டிதெற்கு கதிர்காமர் ஆறுமுகம் இளக்கப பொன் நாட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 7621 | ,, | 30 | 20 | 00 | காங்கேசன்துறை கிட்டினர் நடராசா பொன் சிறுபிள்ளை ஒற்றைக் கைக்காப்பு 1 பதக்கம் 1 |
| 7647 | ஏப் | 4 | 14 | 00 | மயிலிட்டிவடக்கு கறுவல்பிள்ளை சின்னத்துரை பொ.அச்.கூ 1 |
| 7672 | ,, | 8 | 5 | 00 | மயிலிட்டிவடக்கு சிற்றம்பலம் தங்கம் பொன் அச்சரக்கூடு 1 |
| 7681 | ,, | 10 | 60 | 00 | மாவிட்டபுரம் நாகமுத்து தருமலிங்கம் பொன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1 கல்பதக்கம் 1 |
| 7748 | ,, | 23 | 10 | 00 | வறுத்தலைவிளான் நல்லதம்பி சண்முகம் இ. கல் தோடு சோ. 1 |
| 7786 | ,, | 28 | 7 | 00 | வயாவிளான் காலிங்கர் வெள்ளையர் இளக்கப் பொன் நாட்டுக் கடுக்கன் சோடி 1 மோதிரம் 1 |
| 7789 | ,, | 29 | 50 | 00 | கட்டுவன் வல்லி வயிரமுத்து பொன் குண். சங். 1 அச். கூடு 1 |
| 7798 | ,, | 30 | 86 | 00 | வயாவிளான் வயிரமுத்து நாகலிங்கம் பொன்சப்பைச்சங்கிலி 1 |
| 7801 | ,, | 30 | 26 | 00 | மயிலிட்டி சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி பொன் சிறுபிள்ளைச் சங்கிலிஅட்டியல் 1 |
| 7812 | மே. | 1 | 25 | 00 | மயிலிட்டிதெற்கு நாகர் சின்னையா பொன் புரூச்சி 1 |
| 7835 | ,, | 5 | 60 | 00 | கட்டுவன் சின்னப்பொடியன் காசி பொ. பீலிக் கைக்கா.சோ 1 |
| 7836 | ,, | 6 | 50 | 00 | கட்டுவன் சின்னப்பொடியன் காசி பொன் கைவிரல் மோதிரம 3 கைச்சங்கிலி 1 |
| 7877 | ,, | 13 | 15 | 00 | மயிலிட்டிதெற்கு கதிரிப்பிள்ளை முருகேசு இளக்கப்பொன் நாலுநூல் தட்டுமணிக்கோர்வை 1 |

1936-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எடுபட்ட நகை நீங்கலாக மிகுதி மேற்படியாருடைய வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ந பூதப்பிள்ளை உடையார்.
மயிலிட்டி

(129) 31-5-36—3



## ஆசிரியர்களே! மாணவர்களே!

பல அறிஞர்களின் மதிப்புரை பெற்றிருப்பதும்
வித்தியாதரிசிகளின் ஆதரவுபெற்றிருப்பதும்
இலங்கை வித்தியாபகுதியாரின் அங்கீகாரம் பெற்றிருப்பதும்

**ஸ்ரீமான் கே. எஸ். சிற்றம்பலம் அவர்கள்**
[தொண்டமானாறு, சைவவித்தியாசாலை ஆசிரியரும் நூலாசிரியரும்]
எழுதிய

## நாட்டுச்சீவன சாஸ்திரம்

ஒன்றேயாகும்!

இந்நூல் நிறைந்த ஆராய்ச்சியை உடையது.
இந்நூல் ஏற்ற அநேக சித்திரங்களை அடக்கியுள்ளது.
இந்நூல் VI-ம், VII-ம், J.S.C., S.S.C. ஆகிய உயர்தரவகுப்புகட்கு இன்றியமையாதது.

இந்நூல் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தாவரவர்க்கம் பிராணிவர்க்கம் என்னும் விஷயங்களில் விசேட அறிவைத் தருவதோடு
இலங்கையரசியல், வாணிகம், பொதுஸ்தாபனங்கள் என்னும் விஷயங்களிலும் தகுந்தஅறிவைத்தரும் திறவுகோலாயிருக்கிறது.

இதன் விலை :

நாட்டுச்சீவனசாஸ்திரம் I-ம் பாகம்
[240 பக்கங்கள் 94 சித்திரங்கள்] ரூபா 1-00

ஷெ II-ம் பாகம்
[244 பக்கங்கள் 80 சித்திரங்கள்] ரூபா 1-00

இன்றே எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்!

**S. S. SANMUGANATHAN & Sons**
(சண்முகநாதன் புத்தகசாலை)
Vannarponnai, JAFFNA.

(118) 3-5-36—8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper. 16 Pages

# "The EELAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED | BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 | Chunnakam, Jaffna, 14th June 1936, Sunday. | No. 47

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாசங்களுக்குச் செலுத்தி ரூபாய் 275 பெறமுன் வாருங்கள்,

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்துவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றோம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்துவம் பெற விரைந்து வாருங்கள். தாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்கட்கு கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

*Manager*
**LANKA BENEFIT CO.,**
Vannarponnai

175) 5-8-34.

...நெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 50,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**
இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கோள்ளப்படும்,

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எ ங் கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**
நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு-வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## Sri Lanka Book Depot
## ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!
யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு
வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்
பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும்,
வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்
பென்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy)
கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான
எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்


அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

M. M. L. Mohamed Abdul Cader Hadjiar & Bro.
**GENERAL HARDWARE STORE**
**Grand Bazaar, JAFFNA.**

**THE BEST IN THE MARKET**

KEY BRAND GERMAN CEMENT




துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து

**MADE IN GERMANY**

இந்த துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து மற்ற எல்லாவித சீமேந்துகட்கும் மேலானதும், அளவு கூடியதும், நல்ல பசையுள்ளதும், நற்சாட்சிப்பத்திரம் பெற்று உலக முழுவதும் அதிக விருப்பத்துடன் வாங்கிப் பாவிப்பதுமான சீமேந்தும் இதுவே. இந்த துறப்புமார்க்கு சீமேந்தையே உங்கள் தேவைகளுக்கு வாங்கிப் பாவியுங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

(95) 8-3-36

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு "...நிலைய"த்திலிருக்கும் ... நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம்வூ யூன் மீ 14-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org